கல்கி




KALKI ஆகஸ்ட் 19, 1951 4 அண



நாளுக்கு நாள்
அதிக தெளிவுள்ள
அழகான சருமம்
ரெக்ஸோனா சோப்பை தினமும்
உபயோகியுங்கள். இதில் அடங்கி
யிருக்கும் 'கேடில்' உங்கள் சரு
மத்திற்கு புது ஆரோக்கியமும்
தெளிவும் தரும்.
Rexona
ரெக்ஸோனா
'கேடில்'* கலந்த சோப் இது ஒன்றே
* சருமத்தை மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக்
கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர் இது.
RP. 73-X30 TM
ரெக்ஸோனா ப்ரொப்ரைட்டரி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரிக்கப்பட்டது


இப்பொழுது நடைபெறுகிறது
எனெஸ்கே பிலிம்ஸ்
மணமகள்
திரைக் கதை வசனம்
மு. கருணாநிதி
பாடல்கள்
உடுமலை நாராயண கவி
டைரக்ஷன்
N.S. கிருஷ்ணன்
சென்னையில்
கெயிட்டி, கிரௌன், சயானி,
மற்றும் முக்கிய நகரங்களில்
BALU BROS
சிட்டி ரிலீஸ் K.S. பிக்சர்ஸ்




100 ஆண்டுகளாக

உலகெங்கும் தலைமை வாய்ந்தது

ஒரு நூற்றுண்டிற்கு முன் ஸிங்கர் தங்களது முதல் தையலியந்திரத்தை அறிமுகப் படுத்தினர். காலத்தின் அதிசயமென உலகெங்கும் ஆதரிக்கப்பட்டு அது ஆயிரமாயிரம் இல்லங்களில் வரவேற்புப் பெற்றது. அற்புதமான அதை நூற்றுண்டுகளின் ஆராய்ச்சியும், சீர்திருத்தமும் உலகில் மிகவும் நம்பகமான இயந்திரமாக ஆக்கி விட்டன. சமீபத்திய நிறுவுகளை அருகிலுள்ள ஸிங்கர் கடையில் பார்வையிடுங்கள்.

ஸிங்கர் *



டாக்டர்கள் இந்த அற்புதமான
பெப்ஸை சிபார்சு செய்கிருர்கள்

PEPS

இருமல், ஜலதோஷம், குளிர், தொண்டைப்புண், இன்புளுயன்ஸா, சளி ஜுரம், மார்வலி, சுவாச கோச நோய்கள் முதலியவற்றிற்கு உகந்தது.



தொண்டைப் புண் ஆபத்தைத் தரும் விஷக் கிருமிகளை உற்பத்தி செய்கிறது. அவை இதயத்தையும் சுவாச கோசத்தையும் தாக்குகின்றன. உடனே பெப்ஸ் மாத்திரைகளை மெல்லுங்கள். பெப்ஸ் விரைவில் உங்கள் தொண்டைக்கு இதம் தந்து கிருமிகளைக் கொன்றுவிடுகிறது. பெப்ஸ உங்கள் தொண்டையிலும் மார்பிலும் உள்ள எரிச்சலையும் ரணத்தையும் குணமாக்குகிறது. பெப்ஸ் மூச்சு விடுவதைச் சுலபமாக்குகிறது. பெப்ஸிலிருக்கும் மருந்துச் சத்து உங்கள் தொண்டைக்குள் சென்று சுவாசக் குழாய்கள் வழியாக சுவாச கோசத்தை அடைகிறது. அதனுல்தான் பெப்ஸ் அற்புத மருந்தாக விளங்குகின்றது.

பெப்ஸ் தொண்டைப் புண், மார்வலி நோய் நிவாரண மாத்திரைகள்

ஏஜண்டுகள்: மெஸர்ஸ். தாதா & கோ., பி. டி., மதராஸ்

MIDLAND

GRAND GALA OPENING

Friday 31—8—51

Daily 3 Shows : 3, 6-15 & 9-30 P. M.



See : THE CORAL BALLET - THE DANCE OF THE SIRENS
THE EXCITING SAMOAN KNIFE DANCE

PLUS

The M. G. M. Story

Scenes From 24 Great Coming Hits! 66 Top Stars in Action.

Note : No Increase in Rates



திருப்தி



குழந்தைக்கு கிளாக்ஸோவை உணவாகக் கொடுத்தால் அவன் திருப்தியோடிருப்பதில் அதிசயமென்ன. ஒழுங்கான முறையில் சமநிலையாகச் செய்யப்பட்ட இந்த பால் உணவு, திடமும், ஆரோக்கியமுமான சதையும், உறுதியான எலும்புகளும், பற்களும் வளர உதவுகிறது. அன்றியும் கிளாக்ஸோ மிக எளிதில் ஜீரணமாகிறது. அதனால் ஒவ்வொரு தடவையும் ஆகாரம் கொடுத்தபின் குழந்தைக்கு ஆழ்ந்த நித்திரையும், திருப்தியும் உண்டாகிறது.

சில்லறை விற்பனை விலைகள் :
1 பவுண்டு - ரூ. 3/11/-
2 பவுண்டு - ரூ. 7/-

Glaxo

கிளாக்ஸோ சிறுகுழந்தைகளை வலிமையாக வளரச் செய்கிறது

கிளாக்ஸோ லேபரட்டரீஸ் (இந்தியா) லிமிட். பம்பாய் • கல்கத்தா • மதராஸ்

 LAS. (B)

பொருள் அடக்கம்

கல்கி


மலர் 11 | இதழ் 3 — 1951 ஆகஸ்டு 19 — கர ஆவணி 3உ

<u>அட்டைப்பட விளக்கம்</u>

காதல் இதயம் என்ற பரிசுக் கதையில் வரும் கதா பாத்திரங்கள் இந்த வாரத்துக் 'கல்கி' இதழ் அட்டையை அலங்கரிக்கிறார்கள்.

கொசுவைக் கொல்லுங்கள்

—அது மலேரியா, விட்டு விட்டு வீசும் ஜுரம், டிங்கு ஜுரம் முதலிய நோய்க் கிருமிகளை ஏற்றிச் செல்கிறது




கொசு தேங்கி நிற்கும் ஜலத்தில்தான் முட்டை யிட்டு விருத்தியாகிறது. முட்டையிலிருந்து பூரண வளர்ச்சிபெற 8 நாளாகும். 8 நாள் தொடர்ந்து ஜலம் தேங்கியிருக்கும் எந்த இடத்திலும் கொசுக்கள் தாராளமாக உற்பத்தியாகக்கூடும்.

கொசு உங்கள் உயிருக்கு நிரந்தர ஆபத்தை விளைவிக்கிறது, ஏனெனில் அது நோய்க் கிருமிகளை ஏற்றிச் செல்கிறது. அக் கிருமிகளுள் மலேரியா ஒன்றே நமது நாட்டில் ஒவ்வொரு வருஷமும் 10 லக்ஷம் உயிர்களை பலி வாங்குகிறது.

ஞாபகமிருக்கட்டும்: ப்ளிட்டிலடங்கிய 5 கொடிய டோசினிகள் கொசுக்களையும் மற்ற எல்லாப் பூச்சிகளையும் துரிதமாகவும் நிச்சயமாகவும் கொல்லுகின்றன.

கொசு உங்களிடையே நோயைப் பரப்புமுன் அதைக் கொல்லுங்கள்.



ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி

(கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

கல்கி

மலர் 11 | தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 3

வாய்ப் பந்தல்!

யுத்த சாஸ்திரத்தில் 'கேமுபிளாஜ்' (Camouflage) என்று மேனாட்டாரால் குறிப்பிடப்படும் மாய வேஷம் ஒரு முக்கிய அம்சமாக இருக்கிறது.

ராம — ராவண யுத்தம், பாரத யுத்தம் நடந்த காலத்திலிருந்து அணுகுண்டு யுத்த சகாப்தம் ஆரம்பமாகியிருக்கும் இன்று வரையில் இந்த வேஷம் அனுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கிறது.

கொடிய மாரீசன் வசீகர மானாக வேடம் பூண்டு ராமபிரானை ஏமாற்றினான்.

பயங்கர ராக்ஷஸியான பூதனை அழகிய சுந்தரியாக வடிவம் கொண்டு ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவைக் கொல்ல முயற்சித்தான்.

நவீன யுத்தங்களில் பீரங்கி வண்டிகள் பசுமரங்கள் போல் காட்சியளிக்கின்றன! ஆயுதம் தாங்கிய துருப்புகள் தலையிலும் உடலிலும் தழைகளைக் கட்டிக் கொண்டு செடிகளாகவும் கொடிகளாகவும் தோன்றுகிறார்கள்!

கல்வி நிலையங்களும் கலாசாலைகளும் போர்த் தளவாடங்கள் நிறைந்த இரகசிய ஆயுத சாலைகளாக மாறி விடுகின்றன.

இவ்வாறாக, மானிட வர்க்கத்துக்கு நரக வேதனையையும் நாசத்தையும் உண்டு பண்ணும் கொடிய சாதனங்கள் கண்களைக் கவரும் அழகிய தோற்றத்தினால் மறைக்கப்படுகின்றன.

அது போலவே நவீன ராஜதந்திர நிபுணர்கள் தங்களுடைய போர் வெறியை அழகிய பேச்சுக்களால் மறைக்கப் பார்க்கிறார்கள். பொய்யை உண்மை போலவும் அநீதியை நீதி போலவும் தோன்றச் செய்கிறார்கள்.

இதே கைங்கர்யத்தில் பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகானும் ஈடுபட்டார். ஆனால் அவரது முயற்சி வெற்றி பெறவில்லை.

அவரது வாய்ப் பந்தலைக் கண்டு இந்தியர்கள் ஏமாந்து விடவில்லை. ஒருவேளை அவரது வித்தை சிறிது காலம் உலகத்தை ஏமாற்றலாம். பிறகு அந்த வேஷத்தை உலகமும் அறிந்து கொள்ளும் என்பது நிச்சயம்.

* * * *

காஷ்மீர் பிரச்னையை ஒட்டி சமாதானப் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்காக ஜவாஹர்லால்ஜியைக் கராச்சிக்கு வரும்படி அழைத்த லியாகத் அலிகான் பல நிபந்தனைகளை விதித்தார்.

காஷ்மீர்—பாகிஸ்தான் எல்லைப்புறத்திலிருந்து இந்தியத் துருப்புகளை இந்திய சர்க்கார் வாபஸ் செய்யவேண்டும் என்பது அவர் விதித்த நிபந்தனைகளில் ஒன்று. மேற்படி எல்லையில் இந்தியத் துருப்புகள் வரும்படியான நிலைமையைச் சிருஷ்டித்தவர் யார் என்பதைப் பற்றி லியாகத் அலிகான் சிந்திக்கவில்லை. சிந்தித்திருந்தால் அவர் அத்தகைய நிபந்தனையை விதித்திருக்க மாட்டார்.

"பாகிஸ்தானிகள் 'ஜெஹாத்' பிரசாரம் செய்து கொண்டுதான் இருப்பார்கள். பாகிஸ்தான் பத்திரிகைகள் துவேஷப் பிரசாரம் செய்வதைக் கைவிடாது. பாகிஸ்தான் துருப்புகள் எல்லையில் தொல்லைகள் விளைவித்துக் கொண்டிருப்பதை நிறுத்த மாட்டார்கள். பாகிஸ்தான் யுத்த முஸ்தீபுகளைச் செய்து கொண்டுதான் இருக்கும். எனினும் இந்தியா தன் துருப்புகளை வாபஸ் செய்து கொண்டு விடவேண்டும்"—இதுதான் லியாகத் அலிகானின் கூற்று.

ஆனால் ஜவாஹர்லால்ஜியோ, யாதொரு நிபந்தனையுமின்றி லியாகத் அலிகானைப் புதுடில்லிக்கு அழைத்தார். நிபந்தனையற்ற, கண்ணியமான அந்த அழைப்பை லியாகத் அலிகான் அங்கீகரிக்க மறுத்து விட்டார்.

"காஷ்மீர் பிரச்னையை ஒட்டி சமாதானம் காண்பதற்காக உலகத்தின் எந்தக் கோடிக்கும் செல்ல நான் தயார்" என்று தமது கடிதம் ஒன்றில் ஆடம்பரமாகக் கூறிய லியாகத் அலிகான் நேருஜியின் நேர்மையான அழைப்பை ஏன் புறக்கணிக்க வேண்டும்!

சில தினங்களுக்கு முன் புதுடில்லிக்கு விஜயம் செய்த காஷ்மீர் சர்க்கார் உதவிப் பிரதமர் பக்ஷி குலாம் முகமது, லியாகத் அலிகானின் சமாதான வேஷத்தைக் கலைத்து அவரது சுயரூபத்தை அம்பலப்படுத்தினார்.

"ஷேக் அப்துல்லாவைத் தலைவராகக் கொண்டு காஷ்மீர் மக்கள் காஷ்மீர் மகாராஜாவின் கொடுங்கோல் ஆட்சியை எதிர்த்துப் போராடியபோது, லியாகத் அலிகான் கோஷ்டியினர் பிரிட்டிஷாருடன் சேர்ந்து கொண்டு மகாராஜாவை ஆதரித்தனர். அப்படியிருக்க அவர்கள் இப்போது காஷ்மீர் மக்களின் சுதந்திர உரிமைக்காகப் பரிந்து கொண்டு கண்ணீர் விடுவது என்ன வேஷம்!"

சென்ற வாரம் இந்தியா பார்லிமெண்டில் பேசிய காஷ்மீர் பிரதிநிதி மௌலானா முகமது சயீத் மேற்கூறிய விதம் முழங்கினார்.

இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்னை சம்பந்தமாக எத்தனை அபிப்பிராய பேதங்கள் இருப்பினும், காஷ்மீர் விஷயமாக இந்தியாவில் உள்ள முப்பத்தைந்து கோடி மக்களும் நேருஜிக்குப் பக்க பலமாக ஏகோபித்து நிற்பார்கள்.

ஆகஸ்டுமீ 15உ பாரத நாடெங்கும் நடந்த சுதந்திரக் கொண்டாட்டங்கள் இதை நன்கு வற்புறுத்தின. நேருஜீ காங்கிரஸிலிருந்து ராஜிநாமா செய்த செய்தியினால்கூடச் சுதந்திர விழாவின் உற்சாகம் பாதிக்கப்படவில்லை அல்லவா!

தூங்கி விடாதீர்கள்!

சென்ற மகாயுத்தத்தில் யார் செய்த புண்ணியத்தினாலோ பிரிட்டிஷ் கட்சி ஜயித்து விட்டது. ஆனால் பிரிட்டன் அடைந்த ஜயம் தோல்விக்கு மூத்தண்ணாதான் என்று உலகத்தில் பலரும் நினைத்தார்கள். பிரிட்டிஷ் பொருளாதாரம் அவ்வளவாகச் சீர்குலைந்து போயிற்று. அழிந்து போன வீடுகளுக்கும் பொருள்களுக்கும் அளவேயில்லை. இந்தியா வேறு கையை விட்டுப் போய்விட்டது. யுத்தத்துக்குப் பிறகு தொழிற் கட்சியார் அரசாங்கத்துக்கு வந்தார்கள். ஆகையால், "பிரிட்டன் தொலைந்தது!" என்று அந் நாட்டிலேயே பிற்போக்காளர் பலர் கூச்சலிட்டார்கள்.

அத்தகைய நெருக்கடியிலிருந்து பிரிட்டனைக் காப்பாற்றியவர் ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ். மகா யுத்தத்தின் போது இந்தியாவுக்குத் தூது வந்தாரே அந்த கிரிப்ஸ்தான். ருஷியாவை ஜெர்மனிக்கு எதிராக யுத்தத்தில் இழுத்து விட்டவரும் அவர்தான் என்று சொல்லுவதுண்டு. எனவே சர்ச்சிலுக்கு அடுத்தபடியாகப் பிரிட்டிஷார் யுத்தத்திலிருந்து சமாளித்து மீளுவதற்குக் காரணமாயிருந்தவர் ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ்தான் என்ற புகழும் அவருக்கு ஏற்பட்டிருந்தது.

இப்படிப்பட்ட பிரமுகர், ஒப்பற்ற அரசியல் நிபுணர், — பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்குத் தேர்தலுக்கு நின்றபோது ஓர் இடையூறு நேர்ந்தது. அது என்ன தெரியுமா!

இங்கிலாந்தில் ஒவ்வொரு தொகுதியிலும் அரசியல் கட்சி அமைப்புக்கள் உண்டு. அந்தத் தேர்தலுக்கு முன்னால் கட்சியின் சார்பாக அபேட்சகர்களாக நிற்க விரும்புபவர்களை வரவழைப்பார்கள். பொதுக் கூட்டம் நடத்தி அவர்களைப் பேசச் செய்வார்கள். "என்னைப் பொறுக்கினால் நான் இன்னின்ன செய்வேன், இப்படி இப்படிச் செய்வேன்" என்று ஒவ்வொருவரும் சொல்ல வேண்டும். அவர்களில் யாரைப் பொது மக்கள் உற்சாகமாக ஆதரிப்பார்கள் என்று தோன்றுகிறதோ, அப்படிப்பட்ட சில பெயர்களைத் தொகுதியிலுள்ள கட்சி ஸ்தாபனம் சிபார்சு செய்யும். பின்னர், மத்திய தொழிற் கட்சி ஸ்தாபனத்தார் அவர்களில் ஒருவரைத் தொழிற் கட்சி அபேட்சகராக முடிவாகத் தேர்ந்தெடுப்பார்கள்.

ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸின் தொகுதியில் அவர் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்தார். அவரை ஏகமனதாகத் தேர்ந்தெடுப்பார்கள் என்று எல்லாருமே எதிர் பார்த்தார்கள். கிரிப்ஸூம் அப்படியே நம்பினார். அச்சமயம் அவர் மிக முக்கியமான பட்ஜெட் தயாரிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தார். இரவு பகல் தூக்கமின்றி வேலை செய்தார். (அதன் பயனாகவே இன்று அவர் உடல் நலம் குன்றி உயிருக்கே அபாயம் என்ற நிலையை அடைந்து வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.)

தம்மைத் தேர்ந்தெடுப்பது நிச்சயம் என்ற நம்பிக்கையில் ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் "மிக முக்கியமான வேலையில் ஈடுபட்டிருக்கிறேன்; தொகுதிக்கு வந்து பேச முடியவில்லை; மன்னிக்கவும்" என்று கடிதம் எழுதினார். அதற்கு உடனே தந்தியில் பதில் வந்தது. என்ன தெரியுமா! "நீர் வராவிட்டால் உம்முடைய பெயரைச் சிபார்சு செய்ய முடியாது!" என்றுதான். உடனே கிரிப்ஸ் விழுந்தடித்து ஓடினார். கூட்டத்தில் பேசினார். அதன் பேரில் அபேட்சகராகச் சிபார்சு செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவத்திலிருந்து, இங்கிலாந்தில் ஜனநாயகம் வெற்றிகரமாக நடந்து வருவதின் இரகசியம் இன்னதென்பதை நாம் அறிந்து கொள்ளலாம். மேல் வட்டாரங்களில் ஒருவர் எவ்வளவு செல்வாக்குடையவரா யிருந்தாலும், அவர் தேர்தல் தொகுதிக்கு வந்து பேசியே யாக வேண்டும். அங்குள்ள வோட்டர்களின் ஆதரவை முன் கூட்டியே பெறவேண்டும்.

இந்தியாவிலும் ஜனநாயக ஆட்சிக்கு அஸ்திவாரம் இடப்பட்டு வருகிறது. நல்ல முறையில் பலமாக அந்த அஸ்திவாரத்தை அமைக்க வேண்டும்.

இங்கிலீஷ் முறையை நாம் பூரணமாக உடனே பின்பற்ற முடியாவிட்டாலும், ஓரளவேனும் ஆரம்பிக்க வேண்டும். இதற்குப் பெங்களூரில் கூடிய அகில இந்தியக் கமிட்டி தீர்மானம் வழிகாட்டி யிருக்கிறது. அபேட்சகர்களை நியமிப்பதில் அந்தந்தத் தொகுதி

அவர் செய்த உதவி!


நமக்குள் இத்தனை பூசல்களா?
எங்கள் சம்பளத்தை உயர்த்துங்கள்!
விலைவாசி ஏறுகிறதே
ராஜினாமா செய்க!
தபால் இலாகா ஊழியர்களின் குறைகள்
..எனினும் நாங்கள் யாவரும் ஒன்று என்பது நினைவிருக்கட்டும், லியாகத்!

லுள்ளவர்களின் அபிப்பிராயத்தைக் கலந்து கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. இந்த உரிமையை அந்தந்தத் தொகுதியிலுள்ள பொது மக்களும் காங்கிரஸ் அபிமானிகளும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சென்ற முறை ஒரு தொகுதியில் எம். எல். ஏ. ஆக இருந்தவர் நல்ல வேலை செய்திராவிட்டால் அதைத் தேர்தல் கமிட்டிக்கு எழுதித் தெரிவிக்கலாம். ஒரு சட்டசபை அங்கத்தினர் பேரில் லஞ்சம், கறுப்பு மார்க்கெட் முதலிய புகார்கள் இருந்தால் அதைப் பற்றியும் முறையிட்டுக் கொள்ளலாம். "இன்னாரை அபேட்சகராக எடுத்தால் நல்லது" என்ற விருப்பம் பலருக்கு இருந்தால், அதையும் தெரிவித்துக் கொள்ளலாம். அந்தந்தத் தொகுதியிலுள்ளவர்களின் அபிப்பிராயத்துக்கு மதிப்புக் கொடுத்துக் காங்கிரஸ் அபேட்சகர்கள் நியமிக்கப் படுவார்கள் என்று நம் தலைவர்கள் வாக்களித்திருக்கிறார்கள். "லாந்தர் கம்பத்தைக் காங்கிரஸின் பெயரால் நிறுத்தினாலும் வோட்டுப் போட வேண்டும்" என்று இந்தத் தடவை நம் தலைவர்கள் சொல்லவில்லை.

இவ்விதம் நம் மாபெரும் தலைவர்களே பார்த்து நமக்கு அளித்திருக்கும் ஜனநாயக உரிமையை அந்தந்தத் தொகுதியில் உள்ளவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இப்போது அசிரத்தையாகத் தூங்கிக் கொண்டிருந்து விட்டுப் பிற்பாடு "இந்த மகானை எங்கள் தலையில் கட்டி விட்டீர்களே!" என்று குறை சொல்லுவதில் பயனில்லை. சொல்ல வேண்டியதை முதலிலேயே சொல்லிவிடவேண்டும்; இப்போதே சொல்லி விட வேண்டும்.

மாய்ந்தும் வாழ்ந்திருப்பவர்!

"மாய்ந்தவர் மாய்ந்தவர் அல்லர்" என்று கம்பர் பெருமான் கூறியிருக்கிறார். உலகத்துக்குப் பயன்படாதவர்கள் உயிரோடிருந்தாலும் அவர்கள் தான் உண்மையில் மாய்ந்தவர்கள். பிறருக்கு உபகாரம் செய்து உயிர் நீத்தாலும் அவர்களே உண்மையில் வாழ்ந்திருப்பவர். — இவ்விதம் தமிழ் நாட்டுக் கவிச் சக்கரவர்த்தி சொல்லி யிருக்கிறார்.

அவ்வாறு பரோபகாரத் தொண்டின் மூலமாக என்றும் வாழ்ந்திருக்கும் பேறு பெற்றவர்கள் இருவர் இம்மாதத்தில் தங்கள் மண்ணுடலை நீத்தார்கள் என்று பத்திரிகைகளில் சம்பிரதாயமாகச் செய்திகள் வெளியாயின.

1921-ம் ஆண்டிலிருந்து 1931-ம் ஆண்டுவரையில் பாரத நாட்டில் ஒரு தெய்விக சக்தி தாண்டவ மாடியது. அந்தச் சக்தியினால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் இதிகாசங்களில் வரும் கதா பாத்திரங்களைப் போன்ற வீர புருஷர்களாகவும் வீராங்கனைகளாகவும் மாறி யிருந்தார்கள். ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதி பழைய காலத்தில் அபூர்வமாக பி. ஏ. பட்டம் பெற்றிருந்த பெண்மணிகளில் ஒருவர். நாகரிக சுகபோக வாழ்வுக்குப் பழக்கப்பட்டவர். அத்தகைய நாரீமணி வேதாரண்யம் சத்தியாக்கிரஹப் போராட்டத்தில் ஈடுபட்டு நிகழ்த்திய அற்புத வீரச் செயல்களைக் கேட்டபோது பாரத மக்களின் தோள்கள் பூரித்தன. பாரதத்தாய் அகமும் முகமும் மலர்ந்து, "இத்தகைய வீரப்புதல்வியைப் பெற்றிருக்கும்போது எனக்கு என்ன குறைவு!" என்று பெருமிதம் அடைந்தாள். மகாத்மாவின் சத்தியப் போரில் முதன் முதலாக இந்தியாவிலேயே சிறைத் தண்டனைக்குள்ளான பெருமையை ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதி அடைந்தார். அவருக்கு ஒரு வருஷம் சிறைவாச தண்டனை விதிக்கப்பட்டது. அவர் காட்டிய வழியைப் பின்பற்றி நாடெங்கும் ஆயிரக்கணக்கான தேச சேவிகையர் அந்தப் புண்ணிய வருஷத்தில் சிறை சென்று தவம் புரிந்தனர். அவர்கள் அன்று செய்த தவத்தின் பயனே இன்று இந்தியாவின் சுதந்தரமாகப் பரிணமித்திருக்கிறது.

காங்கிரஸ் சட்டசபைப் பிரவேசம் செய்யத் தீர்மானித்தபோது ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதி சென்னை நகரின் சார்பாக நின்று மகத்தான வெற்றியடைந்தார். சென்னைச் சட்டசபையின் உபதலைவராக இருந்து தொண்டு புரிந்தார். சென்னை மாகாணத்தில் மந்திரி பதவி வகித்த முதலாவது பெண்மணியும், இன்று வரையில் கடைசிப் பெண்மணியும், அவரே தான்.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லைகாண் என்று கும்மியடி!"

என்று நம் பாரதியார் பாடினாரே, அந்தக் கவியின் வாக்கை ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதி வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் நிறைவேற்றி வைத்தார். தென்னாட்டில் தேசபக்தி

யுத்த நிறுத்தப் பேச்சு



கொரியா யுத்த நிறுத்தப் பேச்சு நீடித்துக் கொண்டே போகிறது!

புள்ளவர்களின் உள்ளங்களில் அவர் நிரந்தரமாக வாழ்ந்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

ஏழைத் தொழிலாளரின் தொண்டுக்குத் தமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்திருந்தவர் ஸ்ரீ பி. ஆர். கே. சர்மா அவர்கள். அவர் தலைமை வகித்து நடத்திய தொழிலாளர் சங்கங்கள் என்றும் சீராக நடந்து வந்தன. தொழிலாளர்கள் அவரிடம் பரிபூரண நம்பிக்கை வைத்திருந்தார்கள். சென்ற மூன்று ஆண்டுகளாக ஸ்ரீ சர்மா தம்மைப் பிடித்திருந்த கொடிய நோயுடன் போராடிக் கொண்டிருந்தார். ஆயினும், அத்தகைய துர்ப்பலமான நிலையிலும், தொழிலாளர் நலன்களைக் கண்ணும் கருத்துமாய்க் கவனித்து வந்தார். "பரோபகாரம் இதம் சரீரம்" என்றும், "தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்" என்றும் ஆன்றோர் கூறியுள்ள மொழிகளுக்கு நம் நாளில் ஓர் உதாரணம் வேண்டுமென்றால், ஸ்ரீ சர்மா அவர்களைக் குறிப்பிட்டுக் காட்டக் கூடியதாயிருந்தது. இனி அவ்விதம் காட்ட முடியாதே என்பதை நினைத்தால் வருத்தமாயிருக்கிறது. எனினும் ஸ்ரீ பி. ஆர். கே. சர்மா ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் உள்ளத்திலும் அவரை அறிந்த நண்பர்களின் இதயத்திலும் என்றும் வாழ்ந்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

கோர்ட்டின் தலையிலே போட்டார்!

இலங்கைப் பிரதமர் சேனநாயகா கோர்ட்டைப் பார்த்து 'இங்கே வா' என்று கூப்பிட்டார். கோர்ட் அவர் எதிரில் வந்து நின்றது. தம் கையிலிருந்த குண்டாந் தடியால் அதன் மண்டையில் ஒரு போடு போட்டார். அதன் அருகில் நின்று கொண்டிருந்த சட்டம் ஒன்றும் தெரியாமல் முழித்தது. 'ஏன் இப்படி முழிக்கிறாய்!' என்று அதன் தலையிலும் தன் பலம் கொண்ட வரையில் ஒன்று வாங்கினார். இரண்டும் குய்யோ முறையோ என்று அலறிக்கொண்டு ஓட்டம் பிடித்தன.

ஏற்கெனவே இலங்கையில் நிறைவேறியுள்ள பிரஜா உரிமைச் சட்டம் அநியாயமானது, அக்கிரமமானது என்று இந்தியர்கள் முறையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்க, அந்தச் சட்டத்துக்கு இலங்கை அதிகாரிகள் தான் தோன்றித்தனமாகப் புதிய வியாக்கியானங்களைச் செய்ய ஆரம்பித்து விட்டால் ஏழை இந்தியர்கள் யாரிடம் போய் முறையிட்டுக் கொள்வார்கள்!


சில தினங்களுக்கு முன் இலங்கைத் தேர்தல் கமிஷனர், சட்டத்துக்கு ஒரு புது வியாக்கியானம் செய்து ஏற்கெனவே இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்ளாதவர்கள் எல்லாம் இலங்கையர் அல்லாதவர்கள் என்று தீர்மானம் செய்து விட்டார். அதனால் இரண்டு லட்சம் இந்தியர்களுடைய பெயர்களை வாக்காளர் ஜாப்தாவிலிருந்து நீக்கி விட்டனர்.

வாக்காளர் ஜாப்தாவிலிருந்து ஸ்ரீ கே. ஜி. எஸ். நாயர் என்பவரின் பெயரை நீக்கியது தவறு என்று கேகாலை ஜில்லா நீதிபதி சமீபத்தில் தீர்ப்பளித்தார். அந்தத் தீர்ப்பை ஆட்சேபித்து இலங்கை சர்க்கார் சுப்ரீம் கோர்ட்டுக்கு மனுச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

"சுப்ரீம் கோர்ட்டுத் தீர்ப்பு இந்தியர்களுக்குச் சாதகமாக இருந்தால், எல்லா இந்திய வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் ஜாப்தாவில் சேர்த்துக் கொள்வார்களா!" என்று ஸ்ரீ தொண்டமான் பார்லிமெண்டில் ஒரு கேள்வி கேட்டார். அதற்குப் பிரதமர் அளித்துள்ள பதில் ஜனநாயக வாதிகளுக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது. "சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு சர்க்கார் கொள்கைக்குப் பாதகமாயிருந்தாலும் அது ஒரே ஒருவருடைய விஷயத்தைப் பொருத்ததே தவிர அதற்காக எல்லா இந்தியர்களுடைய பெயர்களையும் வாக்காளர் ஜாப்தாவில் சேர்த்து விட வேண்டும் என்பதில்லை. தவிர சுப்ரீம் கோர்ட்டை விட்டால் அதற்கு மேல் பிரிவி கவுன்சில் இருக்கிறது. பிரிவி கவுன்சில் தீர்ப்பும் சர்க்கார் கொள்கைக்குப் பாதகமாயிருந்தால், சர்க்கார் கொள்கையையே சட்டமாக்க அரசியல் சட்டத்துக்கு ஒரு திருத்த மசோதாவைப் பார்லிமெண்டில் கொண்டு வருவேன்" என்று ஸ்ரீ சேனநாயகா கூறினார்.

பாரபட்சமற்ற நீதிபதிகளின் தீர்ப்பு தங்களுக்கு விரோதமாக இருக்கிறதென்று சட்டத்தையே திருத்துவதெனில், பின்னர் கோர்ட்டுகள் எதற்கு! சட்டங்கள்தான் எதற்கு! மந்திரிகளே நிர்வாகிகளாகவும் நீதிபதிகளாகவும் இருந்துகொண்டு தங்கள் இஷ்டப்படி நடந்து கொள்ளலாமே!

பாரசீகத் தகராறு



பாரசீகத்துக்கும் பிரிட்டனுக்கும் ஏற்பட்டுள்ள எண்ணெய்த்தகராறில் சமரசம் உண்டு பண்ண அமெரிக்கா முயன்று வருகிறது!



ஆடல் பாடல்



கர்நாடகம்

இந்த வருஷம் மார்ச்சு மாதத்தில் டில்லிமா நகரில் அகில இந்தியக் கலாச்சார மகாநாடு கூட்டினார்கள். சரித்திரப் பிரசித்தி பெற்ற டில்லிச் செங்கோட்டையில், சக்கரவர்த்தி ஷாஜஹான் கட்டிய 'திவானிகாஸ்' என்னும் ஒப்பற்ற கலை அழகு வாய்ந்த மண்டபத்தில் நடத்தினார்கள். அரசாங்க ஆதரவில் மகாநாடு நடைபெற்றது. குடியரசுத் தலைவர் பாபு ராஜேந்திர பிரஸாத், பிரதம மந்திரி நேரு, ஒரிஸ்ஸா கவர்னர் ஆஸப் அலி முதலியவர்கள் மகாநாட்டில் கலந்து கொண்டார்கள். பிரபல குஜராத்தி நூலாசிரியரும், பம்பாயில் 'பாரதீய வித்யா பவனம்' என்னும் ஸ்தாபனத்தை நடத்துகிறவருமான கனம் கே. எம். முன்ஷி மகாநாட்டைச் சிறப்பாக நடத்துவதற்கு முக்கிய பொறுப்பு வகித்தார். அகில இந்தியாவிலிருந்தும் சுமார் இருநூறு பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். இலக்கியம், சங்கீதம், நடனம் முதலிய கலைகளுக்கு அவர்கள் பிரதிநிதிகள். 'பெரிய பெரிய' வித்வான்கள், ஆஸ்தான கவிஞர்கள், சர்வ கலாசாலை உப அத்தியட்சகர்கள் முதலியவர்கள் விஜயம் செய்திருந்தார்கள். மகாநாடு நாலு தினங்கள் நடைபெற்றது. முதல் நாளைத் தவிர மற்றைய மூன்று நாட்களும் மாலை நேரங்களில் சங்கீத, நடனக் கச்சேரிகள் நடந்தன. பிரதிநிதிகளைத் தவிர டில்லி வாசிகள் சுமார் மூவாயிரம் பேர் தினந்தோறும் டிக்கட் வாங்கிக் கொண்டு வந்து பிரசங்கங்களையும் கலை நிகழ்ச்சிகளையும் கேட்டு, பார்த்து அநுபவித்தார்கள்.

கலை நிகழ்ச்சிகளை இரண்டு நாள் நானும் பார்த்தேன். வடநாட்டுப் பிரபல சங்கீத வித்வான்கள் சிலர் பாடினார்கள்; வாத்தியங்கள் வாசித்தார்கள். நடன நிகழ்ச்சிகள் அதிகமாகவே இருந்தன. கதகளி நடனம், மணிபுரி நடனம், குஜராத்தி கார்ப்பா நடனம், ஒரிஸ்ஸா மாகாணத்தில் வழங்கும் கிராமிய நடனம்,—இப்படிப் பல வகை நடனங்கள் நடைபெற்றன. பஞ்சாபி நடனக்காரர் ஒருவருக்கு ஆஸ்திரேலியப் பெண்மணி ஒருவர் தடபுடலாகக் கட்டியம் கூறினார். அவரை ஆஸ்திரேலியாவுக்கு அழைத்துப் போகப் போவதாகவும், அவர் தமது தெய்வீக நாட்டியக் கலையினால் ஆஸ்திரேலியாவை வெற்றி கொண்டு விடுவார் என்று நம்புவதாகவும் அந்த அம்மாள் மனப் பூர்வமாக நம்பி ஆவேசத்துடன் எடுத்துச் சொன்னார். ஸரகேலா என்னும் சமஸ்தான இராஜ வம்சத்தைச் சேர்ந்த இராஜ குமாரர்களும் இராஜ குமாரிகளும் ஒரிஸ்ஸாவில் வழங்கும் கிராமிய நடனங்களைக் கற்றுக் கொண்டு வந்து ஆடினார்கள். இளவரசர்களும் இளவரசிகளும் அரங்கமேடை மீது வந்து நடனம் ஆடப் போகிறார்கள் என்று விளம்பரத்தில் பார்த்ததும், எல்லாருக்கும் ஆர்வம் உண்டாவது இயல்புதானே! ஆர்வத்தோடுதான் பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால் ஆர்வத்துக்குத் தகுந்தபடி எந்த நிகழ்ச்சியும் உற்சாகம் ஊட்டவில்லை. எல்லாம் சாதாரணமாகத்தான் இருந்தன.

சபையில் கூடியிருந்தவர்கள் அனைவரும் பண்பாட்டில் சிறந்த ரஸிகர்கள். ஆகையால் நிகழ்ச்சிகள் நடந்தபோது சபையில் நிச்சப்தம் நிலவியிருந்தது. குறுக்கே நெடுக்கே நடமாடுபவர்கள் இல்லை. புகை மண்டலம் இல்லை. புகழ் பெற்ற ஸினிமா நடிகர் பிரிதிவிராஜ் தமது கோஷ்டியுடன் சபையில் பிரவேசித்த போதுகூடச் சபையில் யாரும் எழுந்து நின்று எட்டிப் பார்க்கவில்லை.

ஒவ்வொரு நிகழ்ச்சியும் முடியும்போது சபையில் உற்சாகப்படுத்துவதற்கு அறிகுறியான கரகோஷம் எழுவதுண்டு அல்லவா! அது கூடக் கிடையாது. கிணற்றிலே கல்லைப் போட்டதுபோல் நிகழ்ச்சிகள் எல்லாம் அப்பெரிய சபையில் அமுங்கிப் போய்க் கொண்டிருந்தன. கலகலப்பு என்பதே கிடையாது.

இதற்கு விதிவிலக்காக ஒரே ஒரு சமயத்தில் சபையில் பிரமாத கலகலப்பு ஏற்பட்டது. பம்பாயில் கனம் முன்ஷி நடத்தும் வித்யா பவனத்தில் பலவித நடனங்களும் கற்பித்து வருகிறார்கள். அக் கலா பவனத்து மாணவ மாணவிகள் மேடையில் பலவித நடனங்களும் ஆடிக் காட்டினார்கள். குஜராத்தி கார்ப்பா நடனம் ஆடினார்கள். தான்ஸேன் வாழ்க்கையிலிருந்து ஒரு சம்பவத்தை நடன நாடகமாக நடித்துக் காட்டினார்கள். அவர்களில் ஒரே ஒரு பெண் மேடைக்கு வந்து சுமார் ஏழு நிமிஷம் பரத நாட்டியத் தில்லானா ஆடினாள். "பரத நாட்டியம்—தில்லானா" என்று அறிவிக்கப்பட்டதும் சபையோர் சிறிது நிமிர்ந்து உட்கார்ந்து மேடையில் கவனம் செலுத்தினார்கள். அந்தப் பெண் ஆடியது பிரமாதமாக இல்லை; ஆனால் மட்டமாயும் இல்லை. லய சுத்தமாகவும் விறுவிறுப்பாகவும் ஆடினாள். அவள் ஆடி முடித்து திரை விழுந்ததும் சபையிலிருந்த மூவாயிரம் பேரும் ஏக காலத்தில் கரகோஷம் செய்தார்கள். இரண்டு நாள் நிகழ்ச்சிகளிலும் இந்தப் பரத நாட்டியத் தில்லானா நிகழ்ச்சி ஒன்றுதான் சபையில் அவ்வளவு கரகோஷ குதூகலத்தை உண்டு பண்ணியது. எனக்கு எவ்வளவு பெருமையாக இருந்திருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. பக்கத்திலிருந்த வடநாட்டு நண்பரிடம் கொஞ்சம் பெருமை அடித்துக் கொண்டேன். "பார்த்தீர்களா, எங்கள் பரத நாட்டியத்தின் மகிமையை! மற்ற நாட்டிய வகைகளோடு ஒப்பிடும்போது இது எவ்வளவு மேலான கலை என்பது தெள்ளத் தெளியத் தெரிந்து விடுகிறது! அதனால்தானே இந்தக் கலை மகாநாட்டில் கூடியுள்ள இவ்வளவு ரஸிகர்களும் சேர்ந்து

தங்கள் குதூகலத்தைத் தெரியப்படுத்தினார்கள்! வேறு எந்த நிகழ்ச்சிக்கும் இவ்வளவு கரகோஷம் சபையில் ஏற்படவில்லையே!'' என்றேன். அந்த நண்பரும் என்னுடன் சேர்ந்து ஒத்துப் பேசினார். ''பரத நாட்டியத்தைப் போல் வேறு நாட்டியம் கிடையாதுதான்! அதற்கு என்ன சந்தேகம்!'' என்றார். இந்தியாவின் கலைகள் தூய்மையுடன் பாதுகாக்கப்பட்டு வருவது தென்னாட்டிலேதான் என்றும் ஒத்துக்கொண்டார். இதை ஒத்துக்கொண்ட பிறகு ஒரு கேள்வி கேட்டார். ''இவ்வளவு நல்ல நடனம் உங்களிடம் இருக்கும்போது தென்னாட்டிலிருந்து வரும் சினிமாக்களில் எதற்காக அவ்வளவு பயங்கர நடனங்களைச் சேர்க்கிறார்கள்! ஆப்பிரிக்கா தேசத்து நர மாமிசபட்சணிகளின் பேய்க் கூத்தைப் போன்ற நடனங்களையல்லவா உங்கள் சினிமாக்களில் பார்க்கிறோம்!'' என்றார். என்னுடைய கர்வமெல்லாம் பறந்து போய்விட்டது. ''தங்களைப் போன்ற ரஸிகர்களுக்காக எங்கள் ஊர் சினிமா முதலாளிகள் படங்களை எடுக்கவில்லையே! பாமர ஜனங்களுக்காக வல்லவா படம் பிடிக்கிறார்கள்!'' என்று சொல்லி வைத்தேன். வேறு என்னத்தைச் சொல்கிறது!

• • •

பெங்களூரில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் காங்கிரஸின் தேர்தல் விக்ஞாபனம் வெளியிடப் பட்டதல்லவா! அதில் ''இந்தியாவின் சித்திர சங்கீத, நடன, நாடகக் கலைகளை வளர்ப்பது'' தேர்தல் திட்டத்தில் ஒரு அம்சமாக இடம் பெற்றிருக்கிறது. இது மிகவும் மகிழ்ச்சிகரமான விஷயம். ஒரு நாட்டின் மேன்மைக்குக் கலை வளர்ச்சி எவ்வளவு அவசியமானது என்பது பற்றிப் பெங்களூரில் பிரதம மந்திரி நேரு பொதுக் கூட்டத்திலும் பேசினார்.

ஆனால் எந்த முறையில் கலை வளர்ச்சி செய்யப் போகிறார்கள் என்ற விவரம் தேர்தல் திட்டத்தில் இல்லை. வானொலி இலாகா இந்திய சர்க்காரின் நேர் நிர்வாகத்தில் இருக்கிறது. வானொலி மூலம் பாரதிய சங்கீதத்துக்குப் பாதகம் விளையாமல் பார்த்துக் கொண்டால், அதுவே கலைக்கு ஒரு பெரிய சேவையாயிருக்கும். ''ஜனங்கள் கேட்கிறார்கள்'' என்ற பல்லவியை வானொலி இலாகாவும் பாடுவதாயிருந்தால், அதைப் போன்ற அர்த்தமற்ற அபத்தவாதம் வேறொன்றுமில்லை. ''ஜனங்கள் கேட்கிறார்கள்'' என்பது ஒரு காரணம் ஆகுமானால், சினிமா முதலாளிகளும் அதே கார[illegible]த்தைச் சொல்லலாம் அல்லவா! அப்போது எதற்காக ஸென்ஸார் போர்டுகளை இத் தொல்லை கொடுக்க வேண்டும்!

• •

இந்திய சர்க்கார் செய்து
செய்யப் போவதும் ஒருபுறம்
நம் சென்னை மாகாண சர்க்கார் க
காகச் சென்ற ஆண்டில் ஒரு
யைச் செய்திருக்கிறார்கள். எ
மறக்க முடியாது. அபிப்பிராய
இடமில்லாத ஒரு நல்ல காரியத்
செய்து விட்டார்கள். ந
தமாஷா வரியை நீக்கி விட்டன
பிடுகிறேன். இராத்திரியில்
போதும் புதுவரி போடுவதைட்
காண்கிற கனம் கோபால ரெ
கலைக்கு இந்த உதவிசெய்ய மு
காரியம். அதற்காக அவரை
களையும் நாம் பெரிதும் பாராட்ட...

இந்த வருஷத்தோடு இந்த மந்திரி சபையின் ஆயுள் முடிந்துவிடும். பொதுத் தேர்தலுக்குப் பிறகு இதே மந்திரிகளும் வரலாம்; வேறு மந்திரிகளும் வரலாம். எனினும், அது புது மந்திரி சபையாகவே அமையும். ஆகையால், இந்த மந்திரி சபையார் கலை வளர்ச்சிக்காகச் செய்திருக்கும் உதவியை இன்னும் சிறிது விசாலமாக்கி, சங்கீதக் கச்சேரிகள் — பரத நாட்டியக் கச்சேரிகள் இவற்றுக்கும் தமாஷா வரியை எடுத்து விட்டால் நன்றாயிருக்கும்.



இந்த இனங்களில் சர்க்காருக்குக் கிடைக்கும் வருமானம் மிகச் சொற்பம். ஆனால் சங்கீத சபைகளுக்கு ஏற்படும் தொல்லை மிக அதிகம். நாடகக் கலை செய்த புண்ணியம் சங்கீதமும் பரதநாட்டியமும் செய்யவில்லையா!

நிதி மந்திரி மேற்படி வித்தியாசம் காட்டியதற்கு ஒரு காரணம் இல்லாமல் போகவில்லை. நாடகக் கலைஞர்கள் தமாஷா வரியை எடுக்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்தார்கள்; முயற்சிக்கு மேல் முயற்சி செய்தார்கள். ஆனால் இந்த காலத்தில் சங்கீத சபைக்காரர்கள் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். ஒரு வித முயற்சியும் செய்யவில்லை. எனினும், சங்கீத சபைக்காரர்களின் அசட்டைக்காக கர்நாடக சங்கீதத்தையும் பரத நாட்டியத்தையும் சென்னை சர்க்கார் தண்டிக்க வேண்டிய அவசியம் இல்லையல்லவா!

தமிழ்நாட்டிலேயே மிகச் சிறந்த கலைகள் என்று உலகமெல்லாம் பாராட்டுகிற கர்நாடக சங்கீதத்துக்கும் பரத நாட்டியத்துக்கும் இந்த வருஷத்திலேயே தமாஷா வரியை எடுத்து உதவி புரியுமாறு சென்னை மந்திரிகளை,—முக்கியமாகக் கலா ரஸிகரான நிதி மந்திரியை,—தமிழ் மக்கள் கேட்டுக் கொள்ள வேண்டும்.

சாருபாலாவின் நடனம்

மேலே கூறியவாறு வடநாட்டு ரஸிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட பரதநாட்டியக் கலை நமது தமிழ் நாட்டில் பலருடைய ஆர்வத்தையும் கவர்ந்திருப்பதில் வியப்பில்லை. படித்த நடுத்தர வகுப்புக் குடும்பங்களில் பெற்றோர்கள் குழந்தைகளுக்கு மிக சிரமப்பட்டுப் பரதநாட்டியம் கற்பித்து வருகிறார்கள். சில பெற்றோர்கள் ஆண் பிள்ளையை பி. ஏ. வரையில் படிக்க வைப்பதற்குத் தேவையான பொருளைப் புதல்விக்கு நாட்டியம் கற்றுக் கொடுப்பதில், இரண்டு மூன்று வருஷத்தில், செலவு செய்து விடுகிறார்கள்!

கும்பகோணம் டாக்டர் வி. ஆர். மூர்த்தி அவர்கள் தம் புதல்வி சாருபாலாவுக்கு விசேஷ சிரத்தையுடன் பரதநாட்டியம் பயில்வித்திருக்கிறார். இந்த ஆகஸ்டு மீ 5உ சென்னை ஸெயிண்ட்மேரிஸ் ஹாலில் குமாரி சாருபாலாவின் பரதநாட்டியக் கச்சேரி நடைபெற்றது. பந்தநல்லூர் பாணியைச் சேர்ந்த பரதநாட்டியக் கலை இந்தக் குழந்தைக்கு மிக நன்றாக வந்திருக்கிறது. ஆட்டப் பகுதிகள் தாளக் கச்சிதத்துடன் விறு விறுப்பாக அமைந்திருந்தன. சாருபாலாவின் களை பொருந்திய முகமும் விசாலமான கண்களும் அவள் சின்னஞ் சிறு குழந்தையாயிருந்த போதிலும் அபிநய பாவங்களுக்கு நன்கு இடம் கொடுத்துச் சோபிக்கச் செய்கின்றன. ஆட்டம் கற்பித்த நட்டுவனாருக்கும் குழந்தையின் பெற்றோர்களுக்கும் நம் வாழ்த்துக்கள். தமிழ் நாட்டின் பெருமையைப் பல கோணங்களிலிருந்தும் எடுத்துக் கூறிய பாடலும் அதற்குச் சாருபாலா ஆடிய குறவஞ்சி நடனமும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை.

இந்த நடன கலை நிகழ்ச்சி அன்னதானசிவன் ஞாபகார்த்த நிலையத்தின் உதவிக்காக ஏற்பாடு செய்யப்பட்டது. "ஹிந்து" உதவி ஆசிரியரும் பத்திரிகையாளர் சங்கத் தலைவருமான ஸ்ரீ ரகுநாதய்யர் அவர்கள் தலைமை வகித்து, நடனத்தைப் பாராட்டியதுடன், அன்னதான சிவனுடைய அரிய கைங்கரியத்தைப் பற்றித் தமது அநுபவங்களை எடுத்துச் சொன்னார். நடனமாடிய குழந்தை சாருபாலாவுக்கு ஸ்ரீ ரகுநாதய்யர் வெள்ளி வீணைப் பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம்.



பூர்வ கதை

சோழ சாம்ராஜ்யத்தைச் சுந்தர சோழ சக்கரவர்த்தி அரசு புரிந்து வந்த காலத்தில் இரண்டு பெண்மணிகள் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். ஒருவர் சுந்தரசோழரின் செல்வப் புதல்வியான குந்தவை தேவி. இன்னொரு பெண்மணி, சோழ நாட்டின் தனாதிகாரி பெரிய பழுவேட்டரையரின் பத்தினியான நந்தினி. இருவரும் இராஜரீக காரியங்களில் சிரத்தை கொண்டவர்கள். ஒருவருக்கொருவர் மாறுபட்டு நின்று தத்தம் நோக்கத்தை நிறைவேற்ற முயன்று வந்தார்கள்.

சுந்தர சோழரின் மூத்த புதல்வன் ஆதித்த கரிகாலன் காஞ்சியில் பொன் மாளிகை கட்டினான். தந்தையை அம்மாளிகையில் வந்திருக்கும்படி வேண்டி வந்தியத்தேவன் என்னும் வீரனிடம் ஓலை அனுப்பினான். வந்தியத்தேவன் சுந்தர சோழரிடம் ஓலையைச் சேர்ப்பித்துவிட்டுப் பழையாறைக்குச் சென்று குந்தவை தேவியைச் சந்தித்தான். சுந்தர சோழருக்குப் பிறகு அவருடைய இரு புதல்வர்களுக்கும் பட்டமில்லாமல் செய்து மதுராந்தக சோழனுக்குப் பட்டம் கட்டுவதென்று பழுவேட்டரையர் முதலிய பெருந்தரத்து அதிகாரிகள் சதி செய்து கொண்டிருந்தார்கள். வந்தியத்தேவன் தான் வரும் வழியில் கடம்பூர் சம்புவரையரின் மாளிகையில் அந்தச் சதியைப் பற்றித் தெரிந்து கொண்டிருந்தான். குந்தவையிடம் அதைத் தெரிவித்தான். குந்தவை வந்தியத்தேவனை இலங்கைக்குச் சென்று அங்கே போரில் ஈடுபட்டிருந்த தன் தம்பி அருள்மொழி வர்மனை அழைத்து வரும்படி அனுப்பினாள். வந்தியத்தேவன் கோடிக்கரை சென்று, தன்னைப் பிடிக்க வந்த பழுவூர் ஆட்களிடம் அகப்படாமல் தப்பி, பூங்குழலி என்னும் பெண்ணின் உதவியால் படகேறி இலங்கையை அடைந்தான்.

அந்தக் காலத்தில் இலங்கையில் மாதோட்டம் என்னும் கடற் துறை நகரம் பிரசித்தி பெற்றிருந்தது. இராமேசுவரத்திலிருந்து அத் துறைமுகத்துக்குக் கப்பற் போக்கு வரவு இடைவிடாமல் நடந்துவந்தது. மாதோட்டத்தில் சோழ சேனாதிபதி பூதி விக்கிரம கேசரியைப் பார்ப்பதற்கு வந்தியத்தேவன் விரும்பினான். சோழ வீரர்கள் அவன் மீது ஐயமுற்றுப் பாதுகாப்பில் வைத்தார்கள்.

வந்தியத்தேவன் காஞ்சியிலிருந்து தஞ்சைக்கு வரும் வழியில் ஆழ்வார்க்கடியான் என்னும் வீர வைஷ்ணவனைத் தெரிந்து கொண்டிருந்தான்.

இப்போது வந்தியத்தேவன் சிறைப்பட்டிருந்த அறையின் சுவர்மேல் ஏறி ஆழ்வார்க்கடியான் வந்து திடீரெனக் குதித்தான்.

கல்கி

இருபத்தாறாம் அத்தியாயம்
இரத்தம் கேட்ட கத்தி!

அந்த வீர வைஷ்ணவர் எப்படி அங்கு வந்து சேர்ந்தார், எதற்காக வந்திருக்கிறார் என்பதைப் பற்றி வந்தியத்தேவனுடைய உள்ளம் கலக்கமடைந்திருந்தது. ஆயினும் அதை அவன் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

“என்ன வேடிக்கையைச் சொல்வது? சற்று முன்னால்தான் உங்களைப் பற்றி நினைத்துக் கொண்டேன். நிமிர்ந்து பார்த்தால் தாங்கள் சுவரேறிக் குதித்து வருகிறீர்கள். ‘கொடுக்கிற தெய்வம் கூரையைப் பொத்துக் கொண்டு கொடுக்கும்’ என்று சொல்கிறார்களே, அது சரிதான்!” என்றான்.

“அப்பனே! சற்று முன்னால் என்னைப் பற்றி நினைத்தாயா? எதற்காக? இந்த நர மனுஷனைப் பற்றி நீ ஏன் நினைக்க வேண்டும்? சாக்ஷாத் இராமபிரானைப் பற்றி நினைத்தாலும் பயன் உண்டு......”

“தங்கள் வாய்க்குச் சர்க்கரைதான் போட வேண்டும். முதலில் நான் இராமபிரானைப் பற்றித்தான் நினைத்தேன். இங்கு வரும்போது கடலின் அக்கரையில் இராமேசுவரக் கோபுரம் தெரிந்தது. இராமர் அங்கே தானே சிவனைப் பூஜை செய்து இராவணனைக் கொன்ற பாவத்தைப் போக்கிக் கொண்டார் என்று எண்ணினேன்...”

“நில்லு, தம்பி! நில்லு!”

“நிற்க முடியாது, சுவாமிகளே! என்னால் நிற்க முடியாது. நடந்து நடந்து, நின்று நின்று, என் கால்கள் கெஞ்சுகின்றன. தாங்களும் கருணை புரிந்து உட்காருங்கள். அப்புறம், இராமரைப் பற்றி நினைத்தேனா? உடனே இராம பக்தனாகிய அனுமாரைப் பற்றி நினைவு வந்தது. அனுமாரைப் பற்றி எண்ணியதும் தங்கள் நினைவு வந்தது. உடனே பார்த்தால், தாங்களே வந்து விட்டீர்கள். சுவரேறிக் குதித்து மட்டும் வந்தீர்களா! அல்லது அனுமாரைப்போல் கடலையே தாண்டிக் குதித்து வந்தீர்களா?”

“தம்பி! மகா பக்த சிரோமணியான அனுமார் எங்கே? அடியேன் எங்கே? அனுமார் இந்த இலங்கைக்கு வந்து அக்ஷய குமாரன் முதலிய ராட்சதர்களை அதாஹதம் செய்தார். என்னால் கேவலம் ஒரு பூனைக்கு வழி சொல்ல முடியவில்லை. இதோ பார்! எப்படி ஒரு பூனை என் கால்களைப் பிறாண்டி இரத்தக் காயம் செய்து விட்டது?” என்று ஆழ்வார்க்கடியான் தன் கால்களில் ஏற்பட்டிருந்த காயங்களைச் சுட்டிக் காட்டினான்.

“அடாடா! இப்படியா நேர்ந்து விட்டது? ஆனால் கேவலம் ஒரு பூனையோடு தாங்கள் சண்டைக்குப் போன காரணம் என்ன?......”

“நான் சண்டைக்குப் போகவில்லை. அதுவேதான் என்னுடன் வலுச் சண்டைக்கு வந்தது......”

“அது எப்படி, சுவாமிகளே!”

“உன்னைத் தேடிக் கொண்டு நான் வந்தேன். வாசற் காவலர்களுக்கு டிமிக்கி கொடுத்து விட்டுக் கொல்லைப் புறச் சுவர் வழியாக ஏறிக் குதித்தேன். கீழே நான் கால் வைக்கிற இடத்தில் வேண்டுமென்று அந்தப் பூனை தன் வாலை நீட்டிக் கொண்டிருந்தது. என் கால் அதன் வாலை அப்படி இலேசாகத்தான் தொட்டது. இருந்தாலும், அந்தப் பொல்லாத பூனை தன் கால் நகங்களினால் என்னைத் தாக்கத் தொடங்கி விட்டது. தம்பி! நான் சொல்வதைக் கேள்! புலியோடு சண்டை போட்டாலும் போடலாம்; ஆனையோடு சண்டை போட்டாலும் போடலாம்; பூனையோடு மட்டும் சண்டை போடக் கூடாது!”

“சுவாமிகளே! அந்த இரகசியம் எனக்கு இப்போது தெரிந்து போய் விட்டது......”

“எந்த இரகசியம்?”

“அந்தப் பூனை இங்கே என் அறைக்கும் வந்தது. என் நெற்றியில் வாலினால் தடவிக் கொடுத்தது. என்னோடு கொஞ்சி விளையாடியது. என்னை நகத்தினால் பிறாண்டவில்லை. உம்மை மட்டும் தாக்கிப் பிறாண்டியது! அதற்குக் காரணம் என்ன? வைஷ்ணவர்களைக் கண்டால் பிடிக்காத வீர சைவப் பூனை அது!......”

“ஓகோ! அப்படியோ? இந்த யோசனை எனக்குத் தோன்றாமல்

போயிற்றே? வீர சைவப் பூனை என்று தெரிந்திருந்தால் தடியினால் நாலு திருச்சாத்துச் சாத்தி யிருப்பேனே?"

"உம் கையில் தடி இல்லாததே நல்லது. ஏனென்றால், இந்த க்ஷேத்திரத்துக்கு வந்ததி லிருந்து என் உடம்பிலேகூட வீர சைவ இரத்தம் கொதிக்கத் தொடங்கி யிருக்கிறது. என் உறையிலுள்ள கத்தி 'வீர வைஷ்ணவ இரத்தம் வேண்டும்' என்று அழுகிறது. நீர் எனக்குச் செய்த பேருதவியை நினைத்து அதை அடக்கி வைத்திருக்கிறேன்!"

"அப்பனே! உனக்கு நான் ஓர் உதவியும் செய்யவில்லையே!"

"வைஷ்ணவரே! தங்கள் சகோதரியாகிய பழுவூர் இளைய ராணியைப் பற்றி எனக்கு நீர் சொல்லவில்லையா?"

"ஆமாம்; சொன்னேன்."

"பழுவூர் இளைய ராணி கடம்பூருக்கு அருகில் மூடு பல்லக்கில் போனபோது, திரை விலகியதே, அப்போது அந்தத் தேவியை நீர் எனக்குச் சுட்டிக் காட்ட வில்லையா?"

"ஆம், ஆம். அதனால் என்ன?"

"சொல்லுகிறேன். அதே பல்லக்கு தஞ்சைக் கோட்டைக் கருகில் சென்று கொண்டிருந்தபோது நான் பார்த்தேன். பல்லக்குச் சுமப்பவர்கள் வேண்டுமென்று வந்து என் குதிரையின்மேல் இடித்தார்கள். நான் நியாயம் கோருவதற்காகப் பல்லக்கின் திரையை விலக்கினேன்......"

"உள்ளே இருந்தது யார்?"

"பழுவூர் இளையராணி சாக்ஷாத் நந்தினி தேவிதான்!"

"ஓஹோ! நீ அதிர்ஷ்டசாலி! நான் ஆனமட்டும் முயன்றும் நந்தினியைப் பார்க்க முடியவில்லை. உனக்கு அது கை கூடி விட்டதே!"

"அதிர்ஷ்டம் வரும்போது அப்படித் தான் தானாகவே வரும்!"

"அப்புறம்?"

"நான் தங்கள் பெயரைச் சொன்னேன். தேவிக்கு முக்கியமான செய்தி தாங்கள் சொல்லி அனுப்பி யிருப்பதாகக் கூறினேன்......"

"நானும் பார்த்தாலும் பார்த்தேன். உன்னைப்போல் கூசாமல் பொய் சொல்லுகிறவனை இந்தப் பிரபஞ்சத்தில் பார்த்ததே கிடையாது......"

"வைஷ்ணவரே! என் மூதாதைகளுக்குக் கவிஞர்களின் பேரில் மிக்க பிரியம். அவர்களே கவிதைகளும் பாடி யிருக்கிறார்கள்......"

"அதனால் என்ன?"

"கவி பரம்பரை இரத்தம் என் உடம்பிலும் ஓடுகிறது. அதனால் சில சமயம் கற்பனை பொங்கி வருகிறது. உம்மைப் போன்ற பாமரர்கள் அதைப் பொய் என்று சொல்வார்கள்......"

"நல்லது; அப்புறம் என்ன நடந்தது?"

"என் கற்பனையைக் கேட்டு வியந்து நந்தினிதேவி பழுவூர் முத்திரை மோதிரத்தைக் கொடுத்தார். அரண்மனையில் வந்து பார்க்கச் சொன்னார்......"

"போய்ப் பார்த்தாயா?"

"பின்னே, பார்க்காம லிருப்பேனா? உடனே போய்ப் பார்த்தேன். என் வீர தீர பராக்கிரமங்களைப் பற்றி நானே சொல்லித் தெரிந்து கொண்ட நந்தினி தேவி எனக்கு ஒரு முக்கியமான வேலை கொடுத்தார்."

"அது என்ன வேலை?"

"இந்த இலங்கையில் மதுரைப் பாண்டிய வம்சத்து மணிமகுடமும் இந்திர மாலையும் இருக்கின்றனவாம். இலங்கை அரச குடும்பத்தார் மலை நாட்டில் ஒளித்து வைத்திருக்கிறார்களாம். 'அந்த நகைகளை எப்படியாவது தேடிக் கொண்டு வந்துவிடு!' என்று சொல்லி அனுப்பினார். அது இவ்வளவு கஷ்டமான வேலை என்று எனக்குத் தெரியாமல் போயிற்று..."

"பெரிய பழுவேட்டரையரின் பொக்கிஷத்தில் உள்ள ஆபரணங்கள் ஆயிரம் கழுதைப் பொதி கனமிருக்கும் என்கிறார்கள். அவ்வளவும் இளைய ராணிக்குப் போதவில்லையாக்கும். சரி, கொண்டு வந்தால் உனக்கு என்ன தருவதாகச் சொன்னாள்?"

"தஞ்சைக் கோட்டைக் காவலைச் சின்னப் பழுவேட்டரையரிடமிருந்து பிடுங்கி எனக்குத் தந்து விடுவதாகச் சொன்னார்......"

"தம்பி! தம்பி! தஞ்சைக் கோட்டைக் காவல் உனக்குக் கிடைத்தால், தட்டுத் தடங்கலில்லாமல் நான் கோட்டைக்குள் வரலாம் அல்லவா?"

"அழகாய்த் தானிருக்கிறது. எனக்குத் தஞ்சைக் கோட்டைக் காவல்



கிடைக்கிற வழி என்ன? நான்தான் இந்த ஊரில் வந்து இப்படி அகப்பட்டுக் கொண்டேனே?'' என்று வந்தியத்தேவன் மிகவும் சோகமான குரலில் கூறினான்.

''ஏன் அகப்பட்டுக் கொண்டாய்? எதற்காக உன்னைச் சிறைப்படுத்தி யிருக்கிறார்கள், தெரியுமா?'' என்று ஆழ்வார்க்கடியான் கேட்டான்.

''பழுவூர் ராணி கொடுத்த முத்திரை மோதிரத்தை என்னுடன் கொண்டு வந்தேன். இங்கேயும் அதற்குச் செல்வாக்கு இருக்கும் என்று எண்ணினேன். அதுதான் தவறாய்ப் போயிற்று.''

''அது தவறுதான், தம்பி, பெரிய தவறு! இங்கே சேனாதிபதி கொடும்பாளூர்ப் பெரிய வேளார் அல்லவா? பழுவூர் வம்சத்துக்கும் கொடும்பாளூர் வம்சத்துக்கும் பெரும் பகை என்பது உனக்குத் தெரியாதா?''

''தெரியாமல் வந்துதான் அகப்பட்டுக் கொண்டேன். என்ன செய்கிறதென்று தெரியவில்லை...''

''தம்பி! நீ கவலைப்பட வேண்டாம்!''

''கவலைப்படாமல்......''

''உன்னை விடுதலை செய்வதற்காகவே நான் இங்கு வந்திருக்கிறேன்......''

''ஓகோ!''

''உன்னை ஒரு சமயம் ஓர் உதவி கேட்டேன். நீ மறுத்து விட்டாய். ஆயினும் நான் உனக்கு உதவி செய்ய வந்தேன். என்னுடன் எழுந்து வா! இந்தக் கணமே இச்சிறையி லிருந்து தப்பி விடலாம்!''

''வைஷ்ணவரே! தாங்கள் சீக்கிரமே இங்கிருந்து போய் விடுங்கள்!''

''ஏன், அப்பனே......!''

''என் உறையிலுள்ள கத்தி அதிகமாகப் புலம்பத் தொடங்கியிருக்கிறது. ஒரு 'வீர வைஷ்ணவனுடைய இரத்தம் வேண்டும்' என்று கேட்கிறது.''



"கேட்டால் கேட்கட்டுமே! என் உடம்பில் வேண்டிய இரத்தம் இருக்கிறது. உன் கத்திக்குத் தேவையானால் கொஞ்சம் சாப்பிட்டு விட்டுப் போகட்டும். நீ எழுந்து என்னுடன் வா!"

"இல்லை, நான் வர முடியாது!"

"காரணம் என்ன?"

"கண்ணைச் சுற்றிக் கொண்டு எனக்குத் தூக்கம் வருகிறது. எத்தனையோ நாளாக இரவில் நான் தூங்கவில்லை. இன்றைக்கு நன்றாய்த் தூங்குவது என்று தீர்மானித்திருக்கிறேன். அதனால்தான் பூனையைக் கூடத் தூக்கி எறிந்தேன்."

"தம்பி! இது என்ன இப்படிச் சொல்லுகிறாய்? இளையபிராட்டி குந்தவை தேவியிடம் நீ ஒப்புக்கொண்ட காரியத்தை இப்படித்தானா நிறைவேற்றப் போகிறாய்? இந்த ஓலையைப் 'பொன்னியின் செல்வன்' கையில் சேர்ப்பிக்கும் வரையில் இரவென்றும் பகலென்றும் பார்க்காமல் பிரயாணம் செய்வேனென்று நீ ஒப்புக் கொள்ளவில்லையா!"...... இவ்விதம் சொல்லி ஆழ்வார்க்கடியான் தன்னுடைய மடியிலிருந்த ஓலையை எடுத்து வந்தியத்தேவனிடம் கொடுத்தான்.

அதை ஆர்வத்துடன் வந்தியத்தேவன் வாங்கிக் கொண்டான். இது வரையில் ஆழ்வார்க்கடியான் தன் வாயைப் பிடுங்கி வஞ்சித்து ஏமாற்றப் பார்க்கிறான் என்றே அவன் எண்ணியிருந்தான். இப்போது அந்த எண்ணம் மாறியது.

"இந்த ஓலை தங்களிடம் எப்படி வந்தது?" என்று கேட்டான்.

"சேநாதிபதி விக்கிரமகேசரி தான் கொடுத்தார். இதோ இந்தப் பழுவூர் பனை இலச்சினையையும் திருப்பிக் கொடுக்கச் சொன்னார். உனக்கு எப்போது இஷ்டமோ அப்போது பிரயாணம் புறப்படலாம் என்றும் சொன்னார்......"

"வைஷ்ணவரே! தங்களுக்கு என் மனமார்ந்த நன்றி."

"நன்றியை யெல்லாம் சேர்த்து வைத்துக் கொள். சமயம் வரும்போது கொடுக்கலாம்."

"ஐயா! இளவரசர் தற்சமயம் எங்கே இருக்கிறார் என்று தெரியுமா?"

"அது யாருக்கும் தெரியாது. அநுராதபுரத்திலிருந்து மலை நாட்டுக்குச் சென்றிருக்கிறார். தேடிக் கண்டு பிடித்தேயாக வேண்டும். உன்னோடு வழிகாட்டிப் போகும்படி சேநாதிபதி எனக்கும் கட்டளை யிட்டிருக்கிறார். நீ விரும்பினால் வருகிறேன்."

வந்தியத்தேவனுக்கு மீண்டும் சிறிது சந்தேகம் உண்டாயிற்று.

"சுவாமிகளே! புறப்படுவதற்கு முன்பு சேநாதிபதியை நான் பார்க்கலாமா?" என்று கேட்டான்.

"அவசியம் பார்க்கலாம். பார்த்து விட்டுத்தான் பிரயாணம் கிளம்ப வேண்டும். வானதி தேவியைப் பற்றிச் சேநாதிபதியிடம் தெரிவியாமல் போகலாமா!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

இதைக் கேட்ட வந்தியத்தேவன் இந்த வீர வைஷ்ணவனுக்கு உண்மையிலேயே மந்திர வித்தை கை வந்திருக்குமோ என்று வியப்படைந்தான்.

இருபத்தேழாம் அத்தியாயம்

காட்டுப் பாதை

கொடும்பாளூர்ப் பெரிய வேளார் ராகிய சேநாதிபதி பூதி விக்கிரமகேசரி வயது முதிர்ந்த அநுபவசாலி; பல போர்க்களங்களில் பழந் தின்று கொட்டையும் போட்டவர். சோழ குலத்தாருடன் நெருங்கிய கட்பும் உறவும் பூண்டவர்.

அவருடைய சகோதரராகிய கொடும்பாளூர்ச் சிறிய வேளார் சில ஆண்டுகளுக்கு முன்னால் இலங்கைப் போர்க்களத்தில் வீர சொர்க்கம் அடைந்தார். அவருடன் சென்ற சைன்யமும் தோல்வி யடைந்து திரும்ப நேர்ந்தது. அந்தப் பழியைத் துடைத்துக் கொடும்பாளூரின் வீரப் பிரதாபத்தை மீண்டும் நிலை நாட்டுவதில் அவர் பெரிதும் ஆத்திரம் கொண்டிருந்தார். ஆகையாலேயே சற்று வயதானவராயிருந்தும் இலங்கைப் படைக்குத் தலைமை வகித்து அங்கு வந்திருந்தார்.

இலங்கைப் போரை நன்கு நடத்த முடியாமல் பழுவேட்டரையர்களால்

விளைந்த இடையூறுகளைப் பற்றி முன்னமே பார்த்தோமல்லவா? நெடுங்காலமாக அந்த இரண்டு சிற்றரசர் குலத்துக்கும் ஏற்பட்டிருந்த போட்டியும் பகைமையும் இதனால் இப்போது அதிகமாய் வளர்ந்திருந்தன.

எனவே, பழுவூர் முத்திரை யிட்ட இலச்சினையுடன் அகப்பட்டுக் கொண்ட வந்தியத் தேவன் பாடு சேனாதிபதி பெரிய வேளாரிடம் கஷ்டமாகத்தான் போயிருக்கும். அதிர்ஷ்டவசமாக அநிருத்தப் பிரம்மராயரிடம் இதைப் பற்றி அவர் பிரஸ்தாபிக்க நேர்ந்தது. வந்தியத்தேவனைப் பற்றிய உண்மையை ஆழ்வார்க்கடியானிடமிருந்து தெரிந்து கொண்ட அநிருத்தர் அவனையே சேனாதிபதி பூதி விக்கிரம கேசரியிடம் சென்று உண்மையைத் தெரியப் படுத்தும்படி அவசரமாக அனுப்பி வைத்திருந்தார்.

* * *

வாணர் குலத்து வீர குமாரனை மேலும் கீழும் உற்றுப்பார்த்த சேனாதிபதி பூதி விக்கிரம கேசரிக்கு அவனிடம் நல்ல அபிப்பிராயம் உண்டாகியிருக்க வேண்டும். அன்பான குரலில், "தம்பி! உன்னை இங்கே சரியாகக் கவனித்துக் கொண்டார்களா? தங்குவதற்கு இடம், உணவு எல்லாம் சரிவரக் கிடைத்ததா?" என்று கேட்டார்.

"ஆம், சேனாதிபதி! ஒரு குறைவும் இல்லாமல் பார்த்துக் கொண்டார்கள். கூறிய ஏவலைச் செய்வதற்கு வாசலில் ஐந்தாறு சேவகர்கள் எப்போதும் காத்திருந்தார்கள். தங்குவதற்கு இடம் தாராளமாய்க் கிடைத்தது. இராப் போஜனத்துக்கு ஒரு பூனையை அனுப்பி வைத்தார்கள். அதை நான் சாப்பிட எண்ணியிருக்கையில் இந்த வீர வைஷ்ணவர் வந்து கெடுத்து விட்டார்! அந்த வீர சைவப் பூனைக்கு இந்த வீர வைஷ்ணவரைக் கண்டதும் கோபம் வந்து விட்டது. இவரை நகத்தினால் பிறண்டி விட்டு அது ஓடி விட்டது!" என்றான்.

சேனாதிபதி "ஓகோ! இந்தப்பிள்ளை ரொம்ப வேடிக்கைக்காரப் பையனாயிருக்கிறான்! திருமலை! இவன் சொல்வது உண்மையா?" என்று கேட்டார்.

"சேனாதிபதி! இவன் முன்னோர்கள் கவிஞர்களாம். ஆகையால் இவனிடமும் கற்பனாசக்தி அதிகம் இருக்கிறது. மற்றப்படி இவன் சொல்வது உண்மைதான். இவனை நான் பார்க்கப்போன இடத்தில் ஒரு பூனை என் கை கால்களைப் பிறண்டி விட்டது!" என்றார் ஆழ்வார்க்கடியார்.

அவருடைய உடம்பில் ஏற்பட்டிருந்த இரத்தக் காயங்களைப் பார்த்துச் சேனாதிபதி பூதி விக்கிரம கேசரி விழுந்து விழுந்து சிரித்தார்.

"ஒரு பூனையா உன்னை இந்தப் பாடு படுத்திவிட்டது? நல்லவேளை! காட்டுப் பாதையில் போவதற்கு இந்த வீரன் உனக்கு வழித்துணையாகக் கிடைத்திருக்கிறான்......"

"சேனாதிபதி! எனக்கு வழித்துணை தேவையில்லை. என்னுடைய கைத்தடியே போதுமானது. அதை எடுத்துக் கொள்ளாமல் நான் இவனைப் பார்க்கப் போனதுதான் பிசகாய்ப் போய் விட்டது......"

"அப்படியானால் இவனுக்கு நீ வழித்துணையாக இரு! புறப்படுவதற்கு முன்னால் இவனுக்குச் சரியாகச் சாப்பாடு பண்ணி வைத்துவிட்டு அப்புறம் கிளம்பு! தம்பி! இப்போது இலங்கையில் சாப்பாட்டு வசதி கொஞ்சம் குறைவு. இங்கேயுள்ள ஏரி குளங்களை யெல்லாம் மகிந்தனுடைய சேனா வீரர்கள் கரையை உடைத்துவிட்டுப் போய் விட்டார்கள். அதனால் விவசாயம் சரியாக நடப்பதில்லை. விவசாயம் செய்வதற்கு ஆட்களும் இல்லை. இந்த நாட்டு மக்களே பட்டினி கிடக்கிறார்கள். நம் வீரர்களுக்கு எப்படி உணவு கிடைக்கும்? நம்முடைய நாட்டிலிருந்தும் அரிசி போதிய அளவு அனுப்பி வைப்பதில்லை......"

"சேனாபதி! அது எனக்குத் தெரிந்த விஷயந்தான். பழையாறை வீரப்படை வீடுகளின் வழியாக இளைய பிராட்டி சென்றபோது பெண்டுகள் அவரிடம் முறையிட்டதைக் கேட்டுக் கொண்டிருந்தேன். 'இலங்கையில் எங்கள் கணவன்மார்களும் பிள்ளைகளும் பட்டினி கிடக்கிறார்களாமே!' என்று முறையிட்டார்கள்......"

"ஓகோ! இது அங்கேயும் தெரிந்து முறையிட்டார்களா? நல்லது, நல்லது! அதற்கு இளைய பிராட்டி என்ன மறுமொழி சொன்னார்கள்?"

"சேனாதிபதி பெரிய வேளார் இலங்கையில் இருக்கும் வரையில் நம் வீரர்களைப் பட்டினியால் சாகவிட மாட்டார்; நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்று ஆறுதல் சொன்னார்......"

"ஆகா! இளைய பிராட்டி அவ்விதம் சொன்னாரா? உலகத்தில் எத்தனையோ இராஜ குலங்களில் எவ்வளவோ புகழ் பெற்ற கன்னிகைகள் பிறந்ததுண்டு. ஆனால் எங்கள் இளைய பிராட்டிக்கு இணையானவர் வேறு யாரும் இல்லை......"

"அடுத்தபடியாகச் சொல்லக் கூடிய இளவரசி ஒருவர் உண்டு, சேனாபதி!"

"அது யார், தம்பி!"

"கொடும்பாளூர் இளவரசி வானதி தேவிதான்!"

"ஆகா! இந்தப் பிள்ளை ரொம்பப் பொல்லாதவன். இவனுடைய கற்பனா சக்தி என்னையே மயக்கி விடும்போலிருக்கிறது. தம்பி! பழையாறையில் எங்கள் குலவிளக்கை நீ பார்த்தாயா?"

"பார்த்தேன், ஐயா! இளைய பிராட்டியுடன் இணை பிரியாமல் இருந்து வருகிறவரை எப்படிப் பார்க்காமல் இருக்க முடியும்? வைத்தியர் வீட்டிலிருந்து வழி அனுப்ப இரண்டு பேருமாகத்தான் யானைமீது ஏறி வந்தார்கள். தீபத்தை ஒளியும், மலரை மணமும், உடம்பை நிழலும் பிரியாதது போல் வானதி தேவியும் இளைய பிராட்டியைப் பிரிவது கிடையாது..."

"அடேடே! இந்தப் பிள்ளை வெகு புத்திசாலி! திருமலை! இவனை நம் பொக்கிஷ சாலைக்கு அழைத்துச் சென்று வேண்டிய ஆடை ஆபரணங்களைக் கொடுத்து அழைத்துப் போ!"

"ஐயா! எல்லாம் தற்சமயம் பொக்கிஷத்திலேயே இருக்கட்டும். திரும்பிப் போகும்போது நான் வாங்கிக் கொண்டு போகிறேன்."

"தம்பி! எங்கள் வீட்டுப் பெண்ணைப்பற்றி, வானதியைப் பற்றி,—இளைய பிராட்டி எனக்குச் செய்தி ஒன்றும் அனுப்ப வில்லையா?......"

"சேனாதிபதி! தங்களிடம் நான் பொய் சொல்ல விரும்பவில்லை."

"யாரிடமும் எப்பொழுதும் பொய் சொல்ல வேண்டாம், தம்பி!"

"இந்த வீர வைஷ்ணவர் விஷயத்தில் மட்டும் தயவு செய்து விலக்கு அளிக்கவேண்டும், சேனாதிபதி! இவரிடம் உண்மை சொன்னால் என் தலை வெடித்துப் போய் விடும்......"

"வேண்டாம், வேண்டாம்!...... இளைய பிராட்டி எனக்கு ஒன்றும் செய்தி அனுப்பவில்லை யாக்கும்!"

"தங்களுக்குச் செய்தி அனுப்ப வில்லை. ஆனால்......"

"ஆனால், என்ன?"

"யாருக்கு அனுப்ப வேண்டுமோ அவருக்கு அனுப்பி யிருக்கிறார்கள். வானதி தேவியைப் பற்றி இளவரசரிடம் நேரில் சில செய்திகளைச் சொல்லும்படி பணித்திருக்கிறார்கள்......"

"உன்னைப் போன்ற புத்திசாலிப் பிள்ளையை நான் பார்த்ததே யில்லை!" என்று கூறிச் சேனாதிபதி பெரிய வேளார் வந்தியத்தேவனை மார்போடு அணைத்துக் கொண்டார். பின்னர்,

"சரி; இனி வீண் பொழுது போக்க வேண்டாம்; புறப்படுங்கள்!" என்று சொன்னார்.

"ஐயா! இந்த வீர வைஷ்ணவர் என்னோடு அவசியம் வரத்தான் வேணுமா? இவர் இல்லாமல் நான் தனியே போகக் கூடாதா?"

"இவர் வருவதில் உனக்கு என்ன ஆட்சேபம்?"

"எனக்கு ஆட்சேபம் இல்லை. என் இடையில் செருகியுள்ள கத்தி சுத்த வீரசைவக் கத்தி. அது 'வீரவைஷ்ணவ இரத்தம் வேண்டும்' என்று வெகு நாளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறது. என்னை மீறி அது வெளிக் கிளம்பி விட்டால் இவர் பாடு ஆபத்தாய்ப் போய்விடுமே என்று பார்க்கிறேன்."

"அப்படியானால் அந்தக் கத்தியை இங்கே விட்டு விட்டு வேறு கத்தி எடுத்துக் கொண்டு போ! திருமலை உன்னோடு வராவிட்டால் நீ இளவரசரைக் கண்டு பிடிக்க முடியாது. அவர் இருக்கு மிடமே யாருக்கும் தெரியாது. மேலும் இளவரசரிடம் கொடுப்பதற்கு இவனும் ஒரு முக்கியமான ஓலை கொண்டு வருகிறான். ஆகையால் இரண்டு பேருமாகச் சேர்ந்து போவதே நல்லது! வழியில் ஒருவரோ

டொருவர் சண்டை பிடித்துக்கொண்டு காரியத்தைக் கெடுத்து விடாதீர்கள்!''

இவ்விதம் சொல்லி விட்டுப் பெரிய வேளார் மறுபடியும் வந்தியத்தேவனை அருகில் அழைத்து அவன் காதோடு ரகசியமாகச் சொன்னார்:—

"தம்பி! இவனால் உன் காரியத்துக்கு இடைஞ்சல் ஒன்றும் நேராது. ஆனாலும் ஜாக்கிரதையாகவே இரு! இளவரசரிடம் இவன் என்ன செய்தி சொல்லுகிறான் என்பதைத் தெரிந்து வந்து என்னிடம் சொல்லு!''

ஆழ்வார்க்கடியானைத் தனக்கு ஒற்றனாகப் பின்னோடு அனுப்புகிறார்கள் என்று முதலில் வந்தியத் தேவன் எண்ணியிருந்தான். இப்போது அவனுக்குத் தான் ஒற்றன் என்று ஏற்பட்டது. இந்த நிலைமை வந்தியத்தேவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

* * *

வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடியானும் இரண்டு வீரர்கள் துணையுடன் அன்றிரவே புறப்பட்டார்கள்.

பிரயாணம் தொடங்கி இரண்டு நாள் கிழக்கு நோக்கிச் சென்றார்கள். முதலில் கொஞ்ச தூரம் ஊர்ப்புறங்களாக இருந்தன. ஓரளவு ஜன நடமாட்டமும் இருந்தது. வர வரக் காட்டுப் பிரதேசமாக மாறி வந்தது. முதலில் குட்டை மரங்கள் நிறைந்த காடாயிருந்தது. பின்னர் வானை அளாவிய பெரிய மரங்கள் அடர்ந்த அரண்யங்களாக மாறின. இடையிடையே ஏரிகள் தென்பட்டன. ஆனால் அவற்றின் கரைகள் பல இடங்களில் இடிந்து கிடந்தன. தண்ணீர் நாலாபுறமும் ஓடிப் போய் ஏரிகள் வறண்டு கிடந்தன. கழனிகள் பயிர் செய்யப்படாமல் கிடந்தன. இன்னும் ஓரிடத்தில் விசாலமான பிரதேசத்தில் தண்ணீர் தேங்கி யிருந்தது. பாலாவி நதியின் கரை வெட்டப்பட்டபடியால் அதன் தண்ணீர் நதியோடு போகாமல் வெளியில் கண்டபடி சிதறிச் சென்று அப்படித் தண்ணீர்த் தேக்கம் உண்டானதாகத் தெரிந்தது.

இந்தக் காட்சிகளை யெல்லாம் பார்த்துக் கொண்டு அவர்கள் சென்றார்கள். நீடித்த யுத்தத்தினால் அந்தப் பிரதேசத்தில் ஏற்பட்டிருந்த அழிவுகளைப் பற்றி ஆழ்வார்க்கடியான் வந்தியத் தேவனுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டு போனான். யுத்தம் எவ்வளவு கொடுமையானது என்று அடிக்கடி அவன் கூறினான். அதைப்பற்றி இருவருக்கும் விவாதம் பலமாக நடந்தது.

இரண்டு தினங்களுக்குப் பிறகு பிரயாண திசை மாறியது. கிழக்கு திசையில் சென்றவர்கள் இப்போது தெற்கு நோக்கித் திரும்பினார்கள். வர வர வனப் பிரதேசங்கள் அடர்த்தியாகிக் கொண்டு வந்தன. சம வெளிப் பிரதேசம் மாறிப் பாறைகளும் சிறிய குன்றுகளும் எதிர்ப்பட்டன. இன்னும் தூரத்தில் பெரிய மலைத் தொடர்கள் வானை அளாவிய சிகரங்களுடன் தென்பட்டன. காடுகளின் தோற்றம் பயங்கரமாகிக் கொண்டு வந்தது. பட்சிகளின் இனிய குரல்களோடு ஏதேதோ இனந்தெரியாத கோரமான சத்தங்கள் கலந்து எழுந்தன.

அத்தகைய காட்டு வழிகளில் கொடிய மிருகங்களினால் ஏற்படக் கூடிய அபாயங்களைப் பற்றிப் பேச்சு எழுந்தது. நரிகள், சிறுத்தைப் புலிகள், கரடிகள், யானைகள் ஆகிய மிருகங்கள் அக்காடுகளில் உண்டு என்று ஆழ்வார்க்கடியான் கூறினான்.

"நரிகள் கூட்டமாக வந்தால் அபாயம் அல்லவா?'' என்று வந்தியத்தேவன் கேட்டான். கடம்பூர் மாளிகையில் அவன் கண்ட பயங்கரக் கனவு அவனுக்கு நினைவு வந்தது.

''நரிக் கூட்டத்தைக் காட்டிலும் ஒற்றை நரியின் ஊளையினால் அபாயம் அதிகம்!'' என்று ஆழ்வார்க்கடியான் கூறினான்.

"அது எப்படி, சுவாமிகளே!''

"இந்தக் காடுகளில் நரியும் சிறுத்தையும் சேர்ந்து வேட்டைக்குப் போகும். சிறுத்தை அங்கங்கே பதுங்கிக்கொண்டிருக்கும். நரி அங்குமிங்கும் ஓடி இரை தேடும். மனிதனையோ மான் முதலிய சாது மிருகத்தையோ கண்டால் ஒற்றைக் குரலில் ஊளையிடும். உடனே சிறுத்தை பாய்ந்து வந்து விழுந்து கொல்லும். இப்படிச் சிறுத்தைக்கு ஒற்றன் வேலை செய்யும் நரிக்கு 'ஓரி' என்று பெயர்......''

இப்படி இவர்கள் பேசிக்கொண்டு போனபோது சற்றுத் தூரத்தில் கடல் குமுறுவது போன்ற சத்தம் கேட்டது. "கடற்கரையிலிருந்து வெகு தூரம் வந்து விட்டோமே? இது என்ன சத்தம்?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"பக்கத்தில் எங்கேயோ ஏரி அல்லது குளம் இருக்க வேண்டும். அதில் தண்ணீர் குடிப்பதற்கு யானை மந்தை வருகிறது போல் தோன்றுகிறது!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"ஐயையோ! யானை மந்தையில் நாம் அகப்பட்டுக் கொண்டால்......?"

"அதைப் பற்றிக் கொஞ்சமும் பயமில்லை. மந்தையில் வரும் யானைகள் நம்மை ஒன்றும் செய்துவிட மாட்டா. நாம் ஒதுங்கி நின்றால் அவை நம்மைத் திரும்பிக்கூடப் பாராமல் வழியோடு போய் விடும்!"

இதற்குள் அவர்களுடன் வந்த வீரர்களில் ஒருவன் ஒரு மரத்தின் மேல் ஏறி நாலு பக்கமும் பார்த்தான்.

"ஐயா! ஐயா! ஒற்றை யானை வருகிறது! மத யானை! மரங்களை முறித்து அதம் செய்து கொண்டு வருகிறது!" என்று கூவினான்.

"ஐயோ! இது என்ன சங்கடம்! எப்படித் தப்புகிறது!" என்று ஆழ்வார்க்கடியான் பீதியுடன் கூறி அங்குமிங்கும் பார்த்தான்.

"மந்தை யானைகளுக்குப் பயமில்லை என்றீர். ஒற்றை யானைக்கு ஏன் இவ்வளவு பயம்!" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"அப்பனே! மதங்கொண்ட ஒற்றை யானை சாதாரண ஆயிரம் யானைகளுக்குச் சமமானது. அதன் மூர்க்கத்தனத்துக்கு முன்னால் யாரும் எதிர்த்து நிற்க முடியாது......"

"எங்கள் மூன்று பேர் கையில் வேல் இருக்கிறது. உம்முடைய கையில் ஒரு தடி இருக்கிறதே!"

"ஒரு மத யானையை ஆயிரம் வேல்களாலும் எதிர்க்க முடியாது. அதோ ஒரு செங்குத்தான குன்று தெரிகிறதே! அதில் நாம் ஏறிக் கொண்டால் ஒருவேளை தப்பித்துக் கொள்ளலாம். ஓடிப் பாருங்கள்!"

இவ்வாறு சொல்லி ஆழ்வார்க்கடியான் குன்றை நோக்கி ஓடினான். மற்றவர்களும் பின் தொடர்ந்தார்கள். ஆனால் கொஞ்ச தூரம் ஓடியதும் எதிரில் ஒரு ஆழமான செங்குத்தான பள்ளத்தாக்கு இருப்பதைப் பார்த்தார்கள். அவர்கள் நின்ற இடத்துக்கும் சற்றுத் தூரத்தில் இருந்த குன்றுக்கும் மத்தியில் அந்தப் பள்ளத்தாக்கு இருந்தது. பள்ளத்தாக்கின் விளிம்பில் வந்து அவர்கள் நின்றார்கள். யானையோ அதி வேகமாக அவர்களை நெருங்கி வந்து கொண்டிருந்தது. மனிதர்களைப் பார்த்ததும் அதன் வெறி அதிகமாகியிருக்க வேண்டும். துதிக்கையைத் தூக்கிக் கொண்டு அந்த மத யானை பிளிறிய போது அதன் சத்தத்தில் அண்டகடாகங்கள் வெடிக்காமலிருந்தது அதிசயந்தான். அதைக் கேட்ட மனிதர்கள் நாலு பேரும் காதைப் பொத்திக் கொண்டார்கள். தலைக்கு ஒரு பக்கம் சிதறி ஓடினார்கள்.

யானை மேலும் நெருங்கி வந்தது; மேலும் மேலும் நெருங்கி வந்தது. ஆழ்வார்க்கடியானைக் குறி வைத்துக் கொண்டு, அவன் நின்ற இடத்தை நோக்கி அது வருவது போலத் தோன்றியது. இன்னும் இரண்டு அடி அப்பால் எடுத்து வைத்தால் ஆழ்வார்க்கடியான் அதல பாதாளத்தில் விழும்படி நேரிடும். பக்கவாட்டில் ஓடுவதற்கும் வசதியாக இல்லை. செடி கொடிகள் அடர்ந்திருந்தன. ஓடித் தப்பிக்கத்தான் முடியுமா?

வந்தியத்தேவன் கையில் வேலை எடுத்தான். ஆனால் அந்த மதயானையின் வேகத்தை இந்திரனுடைய வஜ்ராயுதத்தினால்கூட அச்சமயம் தடுக்க முடியாது என்று அவனுக்குத் தோன்றியது. வேலைப் பிடித்த கை பலவீனமுற்றுத் தளர்ந்து சோர்ந்தது.

அந்நேரத்தில் ஆழ்வார்க்கடியானுடைய செய்கை வந்தியத் தேவனுக்கு ஒரு பக்கத்தில் சிரிப்பை உண்டாக்கிற்று. கையில் தடியை ஓங்கிய வண்ணம், "நில், நில்! அப்படியே நில்! மேலே வந்தாயோ தொலைந்தாய்! உன்னைக் கொன்று குழி வெட்டி மூடி விடுவேன்! ஜாக்கிரதை!" என்று ஆழ்வார்க்கடியான் மதயானையைப் பார்த்து இரைந்தான்! (தொடரும்)

ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரசாமி

47. கேள்வியும் பதிலும்

வாசக நேயர்களிடமிருந்து நூற்றுக்கணக்கான கேள்விகள் கேட்டுக் கடிதங்கள் வந்த வண்ணமிருக்கின்றன. எல்லா கேள்விகளுக்கும் விவரமாகப் பதில் எழுத முடியாது. சில சிக்கலான கேள்விகளுக்கு அவர்களை நேரிலே பார்த்துத்தான் பதில் சொல்ல முடியும். இருந்தாலும் பொதுப்படையாக ஆசனங்கள் சம்பந்தமாக உள்ள சில முக்கியமான கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல்லுகிறேன்.

கேள்வி :—ஹலாசனத்தில் நான்காவது காலம் செய்ய, கைகளைத் தலைக்கு மேல் கொண்டு வந்து, மடக்கி, விரல்களைச் சேர்த்துக் கொண்ட பின், அந்த ஆசனத்தை எப்படிக் கலைக்க வேண்டும்?

பதில் :—கைகளைப் பழையபடி உடலின் இரண்டு பக்கங்களிலும் நீட்டி வைத்துக் கொண்டு, பிறகுதான் கால்களைத் தூக்கிப் பழைய நிலைக்குக் கொண்டுவர வேண்டும்.

கேள்வி :—நரம்பு பலவீனத்துக்கு ஹலாசனத்துடன் வேறு சில ஆசனங்களையும் செய்ய வேண்டுமென்றிருக்கிறதே அவை எவை?

பதில் :—சர்வாங்காசனம் தான். இதைக் குறைந்தது பதினைந்து நிமிஷங்கள் செய்யலாம். அதிகமானால் அரை மணி நேரம் செய்யலாம்.

கேள்வி :—ஆசனம் செய்து முடித்தபின் எந்தக் காரியமும் தடையின்றிச் செய்யலாமா?

பதில் :—செய்யலாம்.

கேள்வி :—ஒவ்வொரு ஆசனத்திற்கும் இடைவேளை எவ்வளவு நேரம் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்?

பதில் :—மிகப் பலவீனமாய் இருப்பவர்கள் மூன்று, நான்கு நிமிஷங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். சாதாரணமானவர்கள் ஒன்று அல்லது இரண்டு நிமிஷம் ஓய்வு எடுத்துக் கொண்டால் போதும். உதாரணமாக புஜங்காசனம் செய்வதாக வைத்துக் கொள்வோம். அதை மூன்று அல்லது ஆறு தடவைகள் செய்கிறோம். அதன் பின் ஒன்று அல்லது இரண்டு நிமிஷம் ஓய்வு எடுத்துக் கொண்டு சலபாசனம் செய்ய வேண்டும். ஆனால் புஜங்காசனம் செய்யும் ஒவ்வொரு தடவைக்கும் ஓய்வு வேண்டியதில்லை. தொடர்ந்து மூன்று அல்லது ஆறு தடவை செய்து விட்டுப் பிறகு ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு தடவையும், தலையை உயர்த்தித் தூக்கி அந்த ஆசனத்தின் நிலைக்கு வந்த பின் இரண்டு அல்லது மூன்று விநாடி அப்படியே இருந்து பிறகு முன் இருந்த பழைய நிலைக்கு வர வேண்டும். இம்மாதிரியே எல்லா ஆசனங்களையும் செய்ய வேண்டும். ஆனால் சர்வாங்காசனம் மட்டும் அப்படியல்ல. அதிக நேரம் அப்படியே இருக்க வேண்டியது.

கேள்வி :—ஆசனம் செய்து முடித்த பின் எத்தனை நிமிஷங்களுக்குப் பின் சாப்பிடலாம்?

பதில் :—குறைந்த பட்சம் அரை மணி நேரமாவது கழித்த பிறகுதான் சாப்பிடலாம்.

கேள்வி :—ஆசனம் செய்யும்போது சுளுக்குப் பிடித்துக் கொண்டால் என்ன செய்வது?

பதில் :—எந்த ஆசனமாய் இருந்தாலும் வெகு நிதானமாய்ப் பழக வேண்டும். அவசரப்படக்கூடாது. முரட்டுத்தனமாய்ப் பழகக்கூடாது. இன்றே படத்திலுள்ளபடி செய்து விட வேண்டும் என்று அதிக முயற்சியும் எடுத்துக் கொள்ளக் கூடாது. அவ்வப்போது விட்டு விடாமல், தினமும் சிறுகச் சிறுக முன்னேற வேண்டும். அப்படிச் செய்யாமல் முரட்டுத்தனமாகச் செய்தால் சில சமயம் சுளுக்கு ஏற்படும். ஆசனங்கள் பழகுவதை இரண்டு மூன்று நாட்கள் நிறுத்திச் சுளுக்கிய இடத்தில் விளக்கெண்ணெயைத் தடவி, வெந்நீர் ஒத்தடம் கொடுக்க வேண்டும். ஓரிரு நாளில் சுளுக்கு சரியாய்ப் போய்விடும். பிறகு மறுபடியும் ஆசனங்களைப் பழகலாம். வெகு நிதானமாய் முடிந்த மட்டும் செய்ய வேண்டும்.

கேள்வி :—ஆசனங்கள் செய்வதற்கு முன் பால், பழம், முட்டை சாப்பிடலாமா?

பதில் :—ஆசனங்களைச் செய்வதற்கு முன் ஒன்றுமே சாப்பிடக் கூடாது. வயிறு காலியாகத்தான் இருக்க வேண்டும். மிக பலவீனர்கள் மட்டும், ஆசனங்கள் பழகுவதற்கு அரை அல்லது முக்கால் மணி நேரத்துக்கு முன் அரைக் கப் பால் அல்லது சுத்த ஜலம் சாப்பிடலாம். பழம், முட்டை இவைகள் எல்லாம் சாப்பிட்டால் அவை ஜீரணமாக மூன்று மணி நேரமாவது ஆகும். அதற்குள் ஆசனம் செய்தால் சாப்பிட்ட ஆகாரம் ஆகாரப் பையிலேயே இருக்கும். அங்கு அதை ஜீரணிப்பதற்கு வேண்டிய வேலைகள் நடந்து கொண்டிருக்கும். அப்பொழுது, அவை ஒன்றும் பாதியுமாய்க் குடலுக்குள் தள்ளப்பட்டு விடும். இப்படியே வழக்கமாய்ச் செய்து வந்தால் அஜீரணம், வயிற்று வலி, பேதி, உடம்பு மெலிவு முதலியன உண்டாகும்.

சில பயிற்சிகளைச் செய்வோர், 'நன்றாய் சாப்பிட்டு விட்டுச் செய்ய வேண்டும். அப்பொழுது தான் அது உடலில் நன்றாய்ப் பரவிக்கப்படும்' என்று சொல்லுவார்கள். இதைப் போல அறியாமை வேறொன்றும் இருக்க முடியாது. உடலமைப்பு சாஸ்திரம் உணராதவர்கள் சொல்லும் அர்த்தமற்ற வாதம் இது.

நாம் எந்த ஒரு வஸ்துவைச் சாப்பிட்டாலும் உடனே அதை ஜீரணமாக்க வயிற்றினுள் பல ரசங்கள் சுரந்து வேலை நடக்கின்றன. அதற்கு வேண்டிய ரத்தம் மற்ற இடங்களுக்குப் போவதை விட அந்த இடத்திற்கு அதிகம் போக வேண்டும். அதனால்தான் சாப்பிட்டவுடன், சிலருக்கு மூளை மந்தமாயும், சிலருக்கு ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் போலவும் தோன்றும். ஜீரணக் கருவிகளுக்கு அப்படி ரத்தம் அதிகம் சென்று தன் வேலையைச் செய்யும் போது, ஆசனம் செய்தால் என்ன ஆகும்? ரத்தம் வேறு இடங்களுக்குச் செல்ல ஆரம்பித்து விடும். வயிற்றில் சரிவர வேலை நடக்காது. அதனால் ஆகாரங்கள் அரைகுறை

யாய் ஜீரணமாகும். ஆகையால் வயிறு காலி யாய் இருக்கும்போதுதான் ஆசனங்களைப் பழகலாம். வயிற்றில் ஆகாரம் இருக்கும் போது பழகக் கூடாது. தண்ணீர் அல்லது பால் அரை டம்ளர் அருந்தினால் விரைவில் ஜீரணமாகிக் குடலுக்குள் சென்று விடும். பிறகு ஆசனங்கள் செய்யலாம். அதையும் சாப் பிட்ட உடனே செய்யக் கூடாது.

கேள்வி:—காலை ஆகாரத்துடன் பழம் சாப் பிடுவது நல்லதா? அல்லது பழ ரசம் அருந்து வது நல்லதா?

பதில்:—இரண்டும் நல்லதுதான். பலஹீன மானவர்கள் பழரசம் அருந்தலாம். மற்ற வர்கள் சாதாரணமாய்ப் பழம் சாப்பிடுவது தான் நல்லது. அப்படியே பழமாகச் சாப்பிட் டால் மலச்சிக்கல் போகும். வேறு பல சத்துக் களும் கிடைக்கும்.

கேள்வி:—க்ஷயரோகம் வந்து சிகிச்சை எடுத் துக் கொண்டு சுகமாகி ஆறுமாதம்தான் ஆகி றது. ஆசனங்களைச் செய்யலாமா? எவை?

பதில்:—ஆட்சேபணை இல்லாமல் செய்ய லாம். கடினமான ஆசனங்களைச் செய்யக் கூடாது. சர்வாங்காசனம், மத்ச்யாசனம், சாந்தி ஆசனம் மட்டும் செய்யலாம்.

கேள்வி:—எலும்பு விகாரமாய் வளர்வதைத் தடுக்க எந்த ஆசனம் நல்லது?

பதில்:—எல்லா ஆசனங்களையுமே செய்ய லாம். ஆனால் முக்கியமாக இதற்குச் சர்வாங் காசனம், மத்ச்யாசனம், சிரசாசனம், சாந்தி ஆசனம்தான் நல்லது. (தொடரும்)

ராதையின் கடமை

கே. ஏ. எஸ்.

"பக்கத்து பங்களாவிலே புதிசாக பாஸ் கரன் என்று ஒரு டாக்டர் குடி வந்திருக்கிறார். உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டாள் ராதை படபடப்புடன்.

நான் அவள் முகத்தைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தேன். ஒரு பொழுதும் அவள் முகம் அப்படி இருந்ததில்லை. ஒருவித ஏக் கமோ அல்லது துக்கமோ அவள் வதனத்தைக் கௌவிக் கொண்டிருந்தது.

"வரட்டுமே, ராதை! பாஸ்கரன் வந்தால் என்ன! பத்மநாபன் வந்தால் என்ன!"

"இல்லை, ஒன்றும் இல்லை......"

"ஓஹோ, புரிந்தது! போட்டிக்கு ஒருவன் வந்து விட்டானே, இனிமேல் நம் டாக்டர் கொஞ்சம் உஷாராக இருக்க வேண்டுமே என்ற கவலைதானே உனக்கு!"

"போங்கள், டாக்டர்! உங்களுக்குச் சதா பரிகாசம்தான்" என்று கூறிய ராதை நாணத் துடன் தரையைப் பார்க்க ஆரம்பித்தாள்.

"நான் எங்கே போவது ராதை! நீதான் இப்பொழுது ஆஸ்பத்திரிக்குப் போக வேண் டும். மணி ஐந்தடித்து விட்டது."

மௌனமாக ராதை அங்கிருந்து கிளம்பினாள். சோபாவில் சாய்ந்தவாறே அன்றையத் தினப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தேன்.

சிறிது நேரத்துக்கெல்லாம் எதிர் பாராத விதமாக என்னைப் பார்க்க பக்கத்துப் பங்க ளாவுக்கு வந்திருந்தவர் வந்து விட்டார்.

"என் பெயர் பாஸ்கரன், நானும் ஒரு டாக்டர்" என்று தம்மைத் தாமே அறிமுகப் படுத்திக் கொண்டார் அவர்.

"தெரியும், உட்காருங்கள்" என்றேன்.

"உங்களுக்கு என் பெயர் எப்படித் தெரி யும்......!......ஓ! ராதை சொல்லியிருப்பாள்!"

எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. ராதைக் கும் டாக்டர் பாஸ்கரனுக்கும் பூர்வாசிரமத் தில் ஏதோ தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்று தோன்றியது. மௌனமாக அவரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

"ஆமாம்...ராதை..." என்று வார்த்தையை முடிக்காமல் நிறுத்தினார் அவர்.

"பரவாயில்லை. ஏதோ கேட்க வந்தீர்களே! தயங்காமல் கேளுங்கள்" என்றேன்.

"ராதை இப்பொழுது எங்கே இருக்கிறாள்! என்ன செய்து கொண்டிருக்கிறாள்!" என்று சற்று தயக்கத்துடன் கேட்டார்.

"ராதை இந்த ஊர் ஆஸ்பத்திரியில் ஒரு நர்ஸ். நான் அங்கே ஒரு டாக்டர்!" என்றேன்.

எங்கள் சம்பாஷணை எப்படி யெல்லாமோ சென்று கடைசியில் பெண்களைப் பற்றிய சர்ச் சையில் வந்து முடிந்தது.

"பெண்களின் இருதயம் கல்லைக் காட்டி லும் கடினமானது" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினார் டாக்டர் பாஸ்கரன்.

"இருக்கலாம். ஆனால் சில பெண்களின் இருதயம் மலரைக் காட்டிலும் மென்மை யானது. பிறர் துன்புற அவர்கள் சகியார்கள். எவ்வளவோ முறை நான் நோயாளிகளிடம் எரிந்து விழுந்திருக்கிறேன். ஆனால் இரவெல் லாம் கண் விழித்து அவர்களுக்குப் பணிவிடை செய்யும் ராதை ஒரு பொழுதும் யாரையும் கடிந்து பேசியதில்லை" என்றேன் நான்.

"ராதையைப் பற்றி உங்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான்" என்றார் பாஸ்கரன்.

"உங்களுக்கு ராதையை முன்னமேயே தெரியுமா?" என்று கேட்டு வைத்தேன்.

"ஆமாம்......இதுவரையில் நான் செய்த ஒரு பெரும் பிழையை ஒருவருக்கும் கூறிய தில்லை. ராதையின் இருதயம் மலரைக் காட்டி லும் மிருதுவானது என்ற அபிப்பிராயம் தங்க ளுக்கு ஏற்பட்டிருக்கிறது. அது தவறு. அவ ளுடைய உள்ளம் இரும்புக் கோட்டையைப் போன்றது. அவள் தன் கடமையைச் சரிவரச் செய்யத் தவறியவள்" என்று கூறிவிட்டு டாக்டர் மேலும் தொடர்ந்தார்:

"ராதையும் நானும் சிறு வயதில் ஒரு வரை யொருவர் நேசித்தோம். அந்த அன்பே

பிற்காலத்தில் காதலாக மாறியது. ராதை என் அத்தை மகள். நல்ல பணக்காரக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவள்.

''ராதையின் தகப்பனருக்கு, ராதை என்னை நேசித்தது கொஞ்சமும் பிடிக்கவில்லை. நான் டாக்டர் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்த பொழுது ராதையைத் தம் நண்பரின் மகன் ஒருவனுக்குக் கல்யாணம் செய்து வைத்து விட்டார். ராதைக்கு இந்தக் கல்யாணத்தில் கொஞ்சமும் விருப்பமில்லையென்றும் அவள் தகப்பனர் அவளைக் கட்டாயப்படுத்திக் கல்யாணம் செய்து வைத்தாரென்றும் பிறகு கேள்விப்பட்டேன்.

''நான் டாக்டரானதும் வசந்தா என் மனைவியானுள். வசந்தாவை அழகியென்று சொல்ல முடியாது. ஆனுல் அவலட்சணமில்லை. வசந்தா என்னை உள்ளன்புடன் நேசித்தாள். நானும் ராதையை மறக்க முயன்றேன். அதற்காகவே அவளைப் பார்க்காமலேயே இருந்தேன். ஆனுல் விதி சதி செய்து விட்டது.

''அந்த வருஷம் வழக்கம்போல் கோடையைக் கழிக்க உதகமண்டலத்திற்குக் கிளம்பினேம் நானும், என் மனைவி வசந்தாவும் என் புத்திரி ஸரளாவும்.

''உதகமண்டலத்தில் குளிர் தாங்க முடியாமல் இருக்கவே, வசந்தாவின் யோசனைப்படி மலையை அடுத்துள்ள ஒரு கிராமத்தில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டு வசிக்க ஆரம்பித்தேன். போன இடத்திலும் எனக்கு நல்ல வரும்படி. அப்பொழுது அங்கு கொடிய விஷ ஜுரம் ஒன்று பரவிக் கொண்டிருந்தது. சென்னையிலிருந்து புது மருந்து ஒன்றை வரவழைத்து அதன் மூலம் பலரைக் காலனிடமிருந்து விடுவித்தேன்.

''அந்த தினம் எனக்கு இன்னும் நன்ருக ஞாபகம் இருக்கிறது. இரவு எட்டு மணி இருக்கும். என் வீட்டு வாசலில் ஒரு கார் வந்து நின்றது.

'டாக்டர்! உங்களைக் கையோடு கூட்டிக் கொண்டு வரச் சொன்னர்கள். நோயாளி பிழைக்க வேண்டுமானுல் நீங்கள் வரத்தான் வேண்டும்' என்ருன் டிரைவர்.

''வெளியே புறப்படத் தயார் செய்து கொண்டு வசந்தாவை அழைத்தேன். அவள் முகம் ஒருமாதிரியாக இருந்தது. 'எங்கே போகிறீர்கள்! காலையில் பார்த்துக் கொள்ளலாமே. எனக்குக்கூட ஜுரம் வரும்போல் இருக்கிறது' என்ருள்.

''பதறிப் போய் அவள் கையைப் பிடித்துப் பார்த்தேன். லேசாக ஜுரம் இருந்தது. 'கவலைப்படாதே, வசந்தா. அரை மணியில் வந்து விடுகிறேன்' என்று கூறிவிட்டு வெளியே எனக்காகக் காத்துக் கொண்டிருந்த காரில் ஏறி உட்கார்ந்தேன். இரண்டு மணி நேரப் பிரயாணத்திற்குப் பிறகு கார் ஒரு பெரிய வீட்டிற்கு முன்னுல் போய் நின்றது.

'''இந்த ஊரிலேயே இருந்த டாக்டர் சமயத்துக்கு எங்கேயோ போய் விட்டார். அதனுல்தான் இவ்வளவு சிரமம்' என்று கூறிக்கொண்டே ஒரு வயதான ஸ்திரீ என்னை அன்போடு வரவேற்று நோயாளி இருந்த அறைக்கு அழைத்துச் சென்ருள்.

''என் பூட்ஸ் சத்தத்தைக் கேட்டவுடன் நோயாளியின் அருகில் அமர்ந்திருந்த அவன் மனைவி எழுந்து நின்ருள். நிமிர்ந்து பார்த்த நான் ஸ்தம்பித்து நின்றேன். ராதைதான் அங்கு நின்று கொண்டிருந்தாள்.

'''பாஸ்கர்! நீங்கள்தான் எனக்கு மாங்கல்யப்பிச்சை யளிக்கவேண்டும்' என்ருள் ராதை.

''என்னுல் முடிந்த வரையில் அவளுக்கு ஆறுதல் கூறினேன்.

''பிறகு அவள் கணவனுக்கு வேண்டிய சிகிச்சைகளைச் செய்துவிட்டு வீட்டுக்குத் திரும்புவதற்கு வெகு நாழிகையாகி விட்டது. வீட்டுக்கு வந்து பார்த்தால், வசந்தாவின் நிலை மிகவும் மோசமாக இருந்தது. விஷ ஜுரம் அவளையும் பற்றிக் கொண்டு விட்டது. அத்துடன் என் மகள் ஸரளாவுக்கும் லேசாக ஜுரம் கண்டிருந்தது. என் தலையில் இடி விழுந்தாற் போலிருந்தது. இருவர் பொருட்டும் நான் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் பலன்—என் அருமை மனைவி வசந்தா போய் விட்டாள். மகள் ஸரளா பிழைத்தாள்.

''கடைசியில் விஷ ஜுரம் என்மீது தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டுவிட்டது.

''ராதை இதைக் கேட்டதும் மிகவும் வருந்தினுள். அவளுடைய துரதிர்ஷ்டத்தைக் குறித்தும் என்னுல் வருந்தாமல் இருக்க முடியவில்லை. அவளும் கைம்பெண் ஆனுள்.

''இந்தச் சமயத்தில்தான் எனக்கு ஒரு யோசனை தோன்றியது. 'நான் மனைவியை இழந்தவன். அவள் கணவனை இழந்தவள். ஏன் இருவரும் இல்லற வாழ்க்கையை மேற்கொள்ளக் கூடாது!'

''என் இந்த அபிப்பிராயம் தெரிந்துதானே என்னவோ மறுநாளே ராதை ஊரைவிட்டே போய் விட்டாள். போகுமுன்பு எனக்கு ஒரு கடிதத்தையும் எழுதி வைத்திருந்தாள். தான் ஒரு டாக்டரைக் காதலிப்பதாகவும் அவர் பொருட்டுத்தான் ஊரைவிட்டுப் போவதாகவும் எழுதி வைத்திருந்தாள். துரோகி! அன்றைய தினத்திலிருந்து அவள் எனக்குப் பெண்ணுகத் தோன்றவில்லை. மனிதனின் வாழ்வைக் குலைக்க வந்த பேயைப் போலவேதான் தென்படுகிருள்.

''அவள் பொருட்டு நான் எடுத்துக்கொண்ட சிரமத்தை எண்ணிப் பாருங்கள்! என் அருமை மனைவியைக்கூட இழந்தேன். கடைசியில் அவள் எனக்குச் செய்த உபகாரம்! வேறு ஒரு டாக்டருடன் ஓடிப் போனுள்.

''எனக்கு ஒன்றுமே பிடிக்காமல் போயிற்று. அது முதல் என் மகள் ஸரளாவுடன் ஊர் சுற்றுகிறேன்.

''இப்பொழுது நீங்களே சொல்லுங்கள். ராதையின் இருதயம் கல்லைக் காட்டிலும் கடுமையானது இல்லையா!''

டாக்டர் பாஸ்கரன் இதைக் கூறிவிட்டு மௌனமாகவே இருந்தார். உணர்ச்சியின் மிகுதியால் அவரால் அதிகம் பேசமுடியவில்லை.

சற்று நேரத்துக்கெல்லாம் என்னிடம் விடைபெற்றுக் கொண்டு சென்ருர். பாஸ்கரனின் துரதிருஷ்டத்தை எண்ணி வருந்திக் கொண்டிருந்த என்னுல் ராதையின் விசித்திர உள்ளத்தையும் அறிந்து கொள்ள முடியவில்லை.

அடுத்த சில தினங்களாக ராதையை நான் பார்க்கவேயில்லை. தினம் ஒரு முறையாவது என் வீட்டிற்கு வந்து போகும் டாக்டர் பாஸ்கரனும் அங்கு வரவில்லை.

ஒரு நாள் காலை டாக்டர் பாஸ்கரன் அவசரமாக ஓடி வந்தார். அவர் முகம் அப்போது வாடியிருந்தது.

"டாக்டர்! நான் மோசம் போய்விட்டேன்" என்றார் பாஸ்கரன். இதைக் கூறிவிட்டு என்னிடம் இரண்டு கடிதங்களைக் கொடுத்தார். இரண்டும் ராதையால் எழுதப்பட்டவை. ஒன்று எனக்கும் மற்றொன்று பாஸ்கரனுக்கும் எழுதப்பட்டிருந்தது.

எனக்கு ராதை எழுதியிருந்த கடிதத்தில், நான் சகோதரியைப் போல் அவளைக் கண்ணியமாக நடத்தி ஆதரவளித்ததற்குத் தன்னுடைய நன்றியைத் தெரிவித்திருந்தாள். பாஸ்கரனுக்கு எழுதிய கடிதம் பின்வருமாறு இருந்தது:

"அருமை டாக்டர் பாஸ்கரன் அவர்களுக்கு,

ஒரு காலத்தில் நீங்கள் என் உயிராக இருந்தீர்கள். என்னுடைய இருதயத்தில் உங்கள் எழில் உருவம் குடிகொண்டிருந்தது.

உங்களோடு சுகவாழ்வு நடத்தவேண்டும் என்ற என் ஆசையில் மண் விழுந்தது. பலவந்தமாக மற்றொருவருக்கு மனைவியாக்கப்பட்டேன்.

ஆனால் உங்களை என்னால் மறக்க முடியவில்லை. கடமையிலும் தவற முடியவில்லை. அப்பொழுதுதான் என் கணவரின் நோயைத் தீர்க்க எதிர்பாராத விதமாக நீங்கள் என் வீட்டுக்கு வந்தீர்கள். எனக்காக உங்கள் அருமை மனைவியையும் இழந்து விட்டீர்கள்.


கடைசியில் உங்களை ஏமாற்றிவிட்டு நான் வந்துவிட்டேன். கடமைக்காக என் காதலைத் தியாகம் செய்தேன். நீங்கள் வேறு யாரையாவது மணந்து மறுபடியும் வாழ்க்கையைத் தொடங்க வேண்டுமென்ற ஆசையால்தான் அப்படிச் செய்தேன். மனத்திற்குச் சாந்தியை யளிக்கவல்ல 'நர்ஸ்' தொழிலையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டேன்.

உங்களை இந்த ஊரில் பார்க்கும் வரையில் என் வாழ்க்கை அமைதியாகவே கழிந்து வந்திருக்கிறது. உங்களைப் பார்த்தது முதல் என் மனம் நிம்மதியை இழக்க ஆரம்பித்தது. ஆனால் அன்று உங்கள் வாயாலேயே 'ராதை தன் கடமையைச் சரிவரச் செய்யத் தவறியவள்' என்று கூறக் கேட்ட பின்பு என் இருதயம் சுக்கு நூறாக வெடித்து விட்டது. இந்தக் கடிதத்தை நீங்கள் படிக்கும் போது நான் என் கணவரின் பாத நிழலை அடைந்திருப்பேன்.

கடைசியாக ஒரு விஷயத்தை மட்டும் கூறி விடுகிறேன். ராதை தன் வாழ்நாளில் ஒருவரைத்தான் காதலித்தாள். காதலுக்காகத் தனது கடமையை மறக்கவில்லை. இங்ஙனம்,
தங்கள் நல்வாழ்வை விரும்பும் அபாக்கியவதி,

ராதை."

நான் பாஸ்கரனின் முகத்தைப் பார்த்தேன். அவர் கண்கள் கண்ணீரிலே மிதந்தன. "ஆம்! ராதை என்னைப் போல் காதலின் பொருட்டுக் கடமையைக் காற்றில் பறக்க விடவில்லை" என்று கூறிக்கொண்டே விர்ரென்று வெளியே சென்று கொண்டிருந்தார்.



[சென்ற வாரத் தொடர்ச்சி]

என் புக்ககத்தை விட்டுப் பிறந்தகத்துக்குப் புறப்படும் நாள் வந்தது. அன்று பிற்பகல் பெட்டி படுக்கை எல்லாம் பார்த்து எடுத்து வைத்துக் கொண்டிருந்தேன்.

"இப்போ என்னமாய் அடங்கிவிட்டான், பெண்டாட்டி வந்த பிறகு......" என்று என் மாமியார் மாமனாரிடம் கூறிக்கொண்டிருந்தார்!

"அப்படி யெல்லாம் சொல்லாதே! சிறு பெண் காதிலே பட்டால் மனசு கஷ்டப் படுவாள்!" என்றார் மாமனார்.

"தெரிந்தால் தெரியட்டுமே! தெரிய வேண்டாமா என்ன!" என்றார் மாமியார்.

சரிதான்! நான் நினைத்தது சரிதான்! முன்பு கணவர் போக்கு ஒரு விதமாகதான்! இப்போது அடங்கி யிருக்கிறாரா! புது இளம் மனைவி நான்! இப்போது இப்படி இருந்தால் போதுமா! அந்தக் குறைபாடு போய்விடுமா! சந்தர்ப்பங்கள் நெருங்கிவிட்டால், பஞ்சுக்கும் நெருப்புக்கும் உள்ள உறவு வந்துவிட எத்தனை நாழிகையாகும்!

நான் ஒன்றும் பேசாமல் வந்துவிட்டேன். கணவர் ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்தார். "என் தொல்லை இல்லாமல் எங்காவது போய் வருகிறதுதானே! எல்லா நண்பர்களிடமும் சொல்லிக் கொண்டு விட்டீர்களா!" என்று கோபமாய்க் கேட்டு விட்டு வந்தேன். அவர்தான் சாமர்த்தியக்காரராயிற்றே, சாது போலத் தோற்றமளித்தார்! என்னுடைய அஞ்ஞானத்தை நன்கு அறிந்துதான் போலும் புன்சிரிப்பு மட்டும் அவர் முகத்திலே தோன்றி விடுகிறது! வாய் விட்டு முன் போலப் பேசுவது மட்டும் குறைந்து விட்டது!

அன்று மாலை அங்கிருந்து கிளம்பி விட்டோம். பயணத்திலே நான் குஷியாகவே பேசிக் கொண்டிருந்தேன். எனினும் உள்ளூற வேதனை அரித்தெடுத்தது. என் பிறந்தகத்திலே போய்ப் பத்து நாள், இருவருமாக இருக்கப் போகிறோம். சலுகைகள் சூழ்ந்த அந்தச் சூழ்நிலையிலே என் துன்பம் சற்றுக் குறையும் என்று நினைத்தேன்.

என் பெற்றோரும், அண்ணாவும் மதனியும் தங்கையும் தம்பிகளும் என்னை என் கணவரோடு கண்டு பூரித்துப் போனார்கள். இங்கே, நான் பிறந்து பெரியவளான இங்கே எத்தனை சலுகை, எத்தனை சுயேச்சை எனக்கு! கணவருடன் குடித்தனம் செய்யப்போன பிறகு ஓரிரண்டு தடவைதான் வந்திருக்கிறேன். அப்பொழுதெல்லாம் கணவரோடு வந்ததில்லை; தனியாகத்தான் வந்திருக்கிறேன். கணவருடன் இப்பொழுதுதான் வருகிறேன். அவருடைய பொறுப்புள்ள மனைவியாக வந்தும்கூட, குழந்தையாக மாறிப் போனேனே! ஆம், என்னமோ கேட்டார் கணவர் என்னிடம். நான் என் தங்கையிடம், "சற்றுக் கவனி அவர் அலுவலை!" என்று கூறிவிட்டு, அடுத்தகத்தில் இருக்கும் என் சிநேகிதியைப் பார்க்க ஓடி விட்டேன், வந்து இறங்கிய ஒரு மணிக்குள்! பாவம்......அவர்......!

ஆனால் நான்தான் மனம் வருந்தி, அவர் விரும்பும் உதவிகளைச் செய்யவில்லையே என்று நொந்து கொண்டேனே தவிர, அவர் என் பணிகளையோ ஒத்துழைப்பையோ நாடுபவராகவே இருக்கவில்லை என்பதைச் சீக்கிரமே கண்டேன்! அவர் பாட்டுக்குக் குஷாலாகத்தான் இருந்தார். தனக்குத் தேவையான காரியங்களை என் தங்கை, மதனி, தம்பிகள் மூலம் கவனித்துக் கொண்டார். எனக்கு அவர்பால் நினைப்பு இல்லாமலா போய் விட்டது! அவர்தான், நான் ஒருத்தி இங்கே இருப்பதை மறந்து விட்டவர்போல ஆகிவிட்டார்! என்னை மனைவியாக அவருக்கு அளித்த இல்லம் இது என்ற உரிமையுடன் அவர் குஷியாக வளைய வந்தாலும், அவர் என்னைத் தன் மனைவி என்ற உரிமையுடன் ஏவவுமில்லை; அழைக்கவுமில்லை.

ஒரு நாள் ஆத்திரம் பொங்க, நான் "போகிறேன் சிநேகிதியுடன், கடைக்கு!" என்றேன். "போயேன்" என்றார் அலட்சியமாகச் சிரித்துக்கொண்டு! நான் போய்விட்டால் அவருக்குக் கஷ்டமா! என் தங்கையோடு சதுரங்கம் விளையாட உட்கார்ந்துவிட்டால், மணிக் கணக்கிலே அதிலேயே மூழ்கிவிடுவாரே! குடிக்கத் தண்ணீர் வேண்டுமானால், நான் வீட்டிலிருக்கும் பொழுதே என்னை அவர் கூப்பிடுவதில்லையே! என் கையால் குடிக்க நீர் வாங்கிக் கொள்வதிலே மவுசு குறைந்து விட்டது போல் தோன்றியது. இந்தச் சஞ்சலச் சுபாவம் ஆராயத்தானே வேண்டும்! என்னுடன் அவர் அதிகம் உறவு கொண்டாடாமலே என்னை மறந்தவராகவே இருந்தது கண்டு அடிக்கடி வெகுண்டேன். கடுகடுப்பாகப் பேசு

கடமை

‘சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே’ என்றோர் முதுரை தமிழில் உண்டு. சமீபத்தில் ஒரு நண்பரைப் பார்த்தேன். அவர் கூறிய ஒரு சிறு சம்பவம் இந்தப் பழம் நம்பிக்கையில் அசைவு காணச் செய்தது. அது பின்வருமாறு:

“அன்று மாலை ஆபீஸிலிருந்து வந்ததும் என் நான்கு வயசுக் குழந்தை என் காலைக் கட்டிக் கொண்டு ‘அப்பா! உன் பிளேடைத் தெரியாத்தனமாக எடுத்துக் கைவிரலில் நறுக்கிக் கொண்டுவிட்டேன். அம்மா மருந்து போட்டா, ஆறிப் போச்சு. இனிமேல் பிளேட் எடுக்க மாட்டேன் அப்பா!’ என்றான்.

‘சரி, கையைக் காட்டு!’ என்று சொல்லிக் கையைக் காண்பிக்கச் செய்து பார்த்தேன். ‘ஒன்றுமில்லை, சரியாகப் போய் விட்டது போ!’ என்றேன்.

‘அவன் காயம் பெரிது என்று காட்ட வரவில்லை. லேசாகத்தான் காயம் பட்டிருக்கிறது. நான் ஈரத் துணியைக் கட்டினேன்; சரியாகப் போய் விட்டது. அவன் சொல்வதற்குக் காரணம் வேறு. ‘அப்பா பிளேடு எடுக்காதே, ஷேவிங் செட்டைத் தொடாதே’ என்று எத்தனை தரம் சொல்லியிருக்கா. கேட்டாயா! சாயங்காலம் அப்பா வரட்டும் சொல்லிக் கொடுத்து அடிக்கச் சொல்லுகிறேன் என்று மிரட்டினேன். அதுதான் நான் உங்களிடம் சொல்வதற்குள் அவன் முந்திக் கொண்டு விட்டான்!’ என்றாள் குழந்தையின் தாயார்.

இதைக் கேட்டதும் எனக்கு உண்டான சந்தோஷம் கொஞ்சமில்லை. என் சமர்த்துக் குட்டியின் சாமர்த்தியத்தைப் பார்த்தீர்களா!” என்று முடித்தார்.

குழந்தை முந்திக் கொண்டிரா விட்டால் என்ன நேர்ந்திருக்கும் என்று சற்று யோசித்துப் பாருங்கள்! தாய் சொல்லியிருப்பாள்; தந்தைக்குக் கோபம் வந்திருக்கும். “ஏன் என் பேச்சைக் கேட்பதில்லை” என்று வைதிருப்பான். இதையெல்லாம் விலக்கி விட்டான் அந்தக் குழந்தை தன் குற்றத்தைத் தாய் போய் சொல்வதற்கு முன் தானே ஒப்புக் கொண்டு.

குழந்தையின் இச்செய்கை குழந்தைக்கு அடி விழாமல் தப்பிவைத்ததோடன்றித் தந்தைக்கும் தாய்க்கும் ஒருங்கே மகிழ்ச்சியும் அளித்திருக்கிறது! இந்தக் குழந்தைக்கிருக்கும் புத்திசாலித்தனம் அதன் தந்தைக்கு உண்டா! ஆகவே, இந்தக் குழந்தையிடமிருந்து தந்தைதான் பாடம் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. தந்தையைச் சான்றோராக்குதல் குழந்தையின் கடமை என்று ஆகிறது.

ஒரு ஆங்கிலக் கவி, ‘குழந்தைதான் மனிதனின் தந்தை’ என்று கூறியிருக்கிறார். இது எவ்வளவு அரிய உண்மை!

வேங்கு

னேன். ‘இது அழகா!’ என்று என் மனம் சில சமயம் யோசித்தாலும் என் நா அடங்கவேயில்லை. முன்பு ‘அவர் மனம் நோகுமோ’ என்று அச்சமுடன் எண்ணி எண்ணிப் பேசிய நானா இப்பொழுது அவர் மனம் நோக வேண்டும் என்று விரும்பிப் பேசுகிறேன்!.........ஆம்! விரும்பித்தானே பேசுகிறேன். அஞ்ஞானம் நீங்கி விழிப்புப் பெற்று விட்ட என் புது நோக்கினை அவர் உணர வேண்டும். அவரிடமுள்ள பண்புக் குறைவை நான் அறியாமலில்லை என்பதை அவர் உணர்ந்து மனம் கூச வேண்டும். இதுவல்லவோ என் லக்ஷ்யம்.

அவர் ஆதரிச புருஷர், நற்குணங்களின் வடிவு. என நான் அவரைப் போற்றி வந்த அஞ்ஞானம் அவரிடம் குறை காணாமல் ஏமாந்தது. என்றைக்கேனும் ஒரு நாள் இவர் என்பால் அன்பு தளர்ந்து விடக் கூடியவர்தான் என்பதை அறிந்த பிறகும் நான் என் மாசற்ற அன்பை அவரிடம் செலுத்த இயலுமோ!

விடுமுறை முடியும் நாள் அணுகி விட்டது. “திரும்பி ஊருக்குப் போக வேண்டியது தானே, நாம்!” என்று கேட்டார் அவர்.

“வேலைக்குப் போக பாரமாயிருக்கிறது போலிருக்கிறது!” என்று கேட்டுவிட எண்ணினேன். ஆனால் சும்மா இருந்து விட்டேன்.

“பதினைந்து நாள் நிமிஷமாகப் பறந்து விட்டதுபோல் இருக்காக்கும்” என்றார் அவர்.

என் தங்கையும் அண்ணாவும் ‘பக்’ கெனச் சிரித்தார்கள். எதற்குச் சிரிப்பு! என்னத்தை விசேஷ நகைச் சுவையுடன் சொல்லி விட்டார் அவர்! கோபம் வந்தது எனக்கு.

“உங்களுக்கு இருக்காக்கும் ஒரு நிமிஷம் போல! பேஷாக லீவு போட்டு விட்டு இன்னும் உட்கார்ந்து கொண்டு இருங்களேன்! யார் தடுக்கிறார்கள்!” என்று நறுக்கெனக் கேட்டு விட்டேன்.

விரிந்துவிட்ட வெண்கலம் ஒலிப்பதுபோல் ஒலித்த குரலில் “எனக்கு லீவு கிடைக்காது! உனக்கு வேண்டுமானால் லீவு உண்டு! இருந்து விட்டு வருகிறாயா!” என்று சொன்னார்.

இங்கே இன்னும் வெகுநாள் அவரால் இருக்க இயலாவிடினும், அங்கேயாவது கொஞ்ச நாள் என் தொல்லையின்றி இருக்க எண்ணம் போலிருக்கிறது! வருத்தமும் கோபமும் பீறிட, "பேஷாக இருக்கிறேன்!" என்று சொல்லி விட்டேன்.

எங்கள் ஊருக்கு, எங்கள் வீட்டுக்குப் போக, கணவர் மட்டும் புறப்பட்டு விட்டார். எனக்கும் போக ஆவல். என் ஆவலை அறிய முடியாத அவர் பின்னே, 'ரோசம்' கெட்டு நான் போவானேன்!......வைராக்கியம் மேலிட்டு நின்றது. இருக்கும் 'ரோச'மெல்லாம் திரளாக என் நெஞ்சக் குழியிலே தங்கியது. அவருடன் அதிகம் கலகலத்துப் பேசவில்லை நான். நெருங்கிப் பேசினால் அழுகை பொத்துக் கொண்டு விடும்போல் அச்சம் ஏற்பட்டது. அழுவார்களா! — சட்! எதிரொலி வராத இடத்திலே எதிரொலியை எதிர்பார்த்துக் கத்திக் கத்தி ஓய்வதிலே என்ன பொருள் இருக்கிறது!

விடை பெற்றுப் போகும்பொழுது அவரிடம் குழைவு இருந்தது. இந்தக் குழைவு எனக்காகவா! இல்லை! என் பிரிவு தவிர்க்க முடியாததா! மனம் வைத்தால் கூட்டிப் போகலாம்! பத்து நாள், என் குறுக்கீடின்றி குஷாலாகக் கழித்த இந்த இடத்தைப் பிரியும் வருத்தம்! நான்தான் சீக்கிரமே போகப் போகிறேனே! எனக்காகவா இந்த நெகிழ்ச்சி!

இந்தப் புருஷர்களுக்கே பிற பெண்களுடனே பழகுவதிலே கொண்டாட்டம். சேஷன் என்னிடம் அப்படித்தானே இருந்தார். இவரும் என் மதனி, தங்கையுடன் அப்படித்தான் இருக்கிறார். கலகலப்பாகப் புருஷர்களுடன் பழகும் பெண்கள் குறைவு இந்தச் சமூகத்திலே. இந்தப் புருஷர்கள் சந்திக்க நேருகிற பெண்கள் சிலர்தாம். அப்படிச் சந்திக்கிற பெண்களைக் கண்டு மயங்கிப் போய் இளிக்கிறது இந்த ஆண் கும்பல்! சஞ்சலச் சித்தமுள்ள பெண்கள் உண்டு...ஆனால் அவர்கள் சொற்பம். இந்த ஆண் வர்க்கம் ஒரே நிறுக!

பாவம், சீதா தன் புருஷன் எத்தகையவன் என்பதை அறியவேயில்லை. நல்ல வேளை.........நான் விழித்துக் கொண்டேன்.

பின்னிலவைப்பிடிக்கப் பின்னிருள் தொடர்ந்து வரும் நாட்கள் உண்டு; முன்னிருளைத் தொடர்ந்து பின்னிலவு வரும் நாட்களும் உண்டு. என் மனமும் சற்றே மாறியது. கணவர் ஊர் சென்ற பிறகு என் உள்ளத்திலே நயம் ஏற்பட்டது. சீக்கிரமே என் இல்லத்திற்குப் போய்விட வேண்டுமென்ற அவா எழுந்தது. இதற்குள் ஒரு கடிதமும் வந்தது அவரிடமிருந்து.

"சீதா ஊரிலிருந்து வந்து விட்டாள். நீ இங்கு இல்லை என்று அறிந்ததும் மிகவும் ஏமாற்றமடைந்தாள். அவள் பிறந்தகத்திலே ஆறு மாதம் இருந்து ஓய்வு பெற்று, குழந்தையோடு வந்திருக்கிறாள்! எனக்கு உன்னை இங்கே வரும்படி வற்புறுத்த இஷ்டமில்லை. எனக்காகவோ, சீதாவுக்காகவோ பறந்து கொண்டு நீ வரவேண்டும் என்பதில்லை. உன் இஷ்டம்போல எத்தனை நாள் உன் பிறந்தகத்தில் இருக்க வேண்டும் என்று தோன்றுகிறதோ அத்தனை நாள் இருந்து விட்டு வா."

இந்தக் கடிதம் எனக்குக் கொஞ்சங்கூட திருப்தி அளிக்கவில்லை. சேஷன் எங்களிருவரிடையே புகுந்து என்னிடம் மதிப்பிழந்தது போல, இவரும் அவ்விருவரிடையே புகுந்து சீதாவிடம் மதிப்பு இழந்துவிடப் போகிறாரோ என்ற பயம் ஏற்பட்டது.

என் இஷ்டம்போல வரலாமா நான்! என் இஷ்டம் என்ன என்பதை அறிவாரா! அறியவில்லை! அறிவதற்கு வேண்டிய உள்ளன்பு அவரிடம் இருந்தாலல்லவோ! என் இஷ்டம் என் வீட்டுக்குப் போக வேண்டும் என்பதுதான்! ஆம்!

என் இஷ்டத்தை நான் எப்படிச் சொல்வது பெற்றோரிடம்! கணவர் போய் ஒரு வாரம்தானே ஆயிற்று!



"எனக்கு வீட்டைப் பற்றிக் கவலையாய் இருக்கு, அம்மா! நான் போகிறேன்" என்றேன் அம்மாவிடம்.

"அதென்ன, அப்படிச் சொல்லி விட்டாய், பானு!" என்று பரிவுடன் கேட்டாள் அன்னை.

"ஆமாம், அம்மா! அங்கே ஊரில் நான் இருந்தபொழுது ரொம்பக் குறைவுடன்தான் இருந்தார்! அவருடைய பெற்றோர் ஊருக்கு வந்ததுமே சற்று மாறிவிட்டது போக்கு. நான் இருக்கும்போதே நாலு பேரைக் கண்டதும் மாறிவிட்டாரே..." என்று இழுத்தேன்.

"அங்கே, உங்கள் வீட்டில் அவர் உன்னிடம் இருப்பதுபோல, அவருடைய பெற்றோர் முன்னிலையிலே அவர் இருந்தால் அவருக்கும் பொல்லாப்பு, உனக்கும் கஷ்டம்!" என்றாள் அம்மா.

"முன்பு இவர் ஒரு நிஜுசாக இருந்ததாகவும் நான் வந்த பிறகு என்னமோ கூத்து எல்லாம் அடங்கிவிட்டதாகவும் மாமியாரும் மாமனாரும் பேசிக் கொண்டார்கள், தெரியுமா! இவர் போக்கை எப்படி நம்புவது!" என்றேன் துடிப்புடன்.

"அசட்டுப் பெண்! மாமியார் மாமனாரிடம் இருந்திருந்தால் தெரியும்!......சாதாரணமாகப் பிள்ளையைப் பெற்ற பெற்றோர் எல்லோருமே குறைப்படுவது இந்த ரீதியில்தான்! அதிலே உண்மையும் உண்டு. புருஷப் பையன், கொஞ்ச நாள் துடுக்காகத்தான் இருப்பான். சம்சாரம், குடும்பப் பொறுப்பு என்று வந்ததும் ரொம்ப ஒடுங்கிப் போய்விடுவான்! உலக வழக்கம் தான் இது!" என்றாள் அம்மா.

ஐயோ, பாவம்! மாப்பிள்ளை அவளை அத்தனை வசீகரித்து விட்டார்! இவர்களுக்கு எப்படி என் பேச்சு புரியும்!

★

என் கணவர் இருப்பிடத்துக்குப் பயணமானேன் நான். புறப்படு முன்பு, "அம்மா! குழந்தாய்! உனக்குச் சற்றுத் துடியான சுபாவம்! மாப்பிள்ளை சுபாவம் ரொம்ப நிதானம்! தம்பதிகள் இந்தமாதிரி ஏறத்தாழ இருப்பது நல்லதுதான். ஆனால் இந்தச் சிறு வித்தியாசம் அகன்றுகொண்டே போய் விடக்கூடாது. அம்மா! கொஞ்சம் அனுசரணை வேணும்!" என்று என் அன்னை போதனை செய்தாள்.

அட பாவமே! இதென்ன மாப்பிள்ளை மீது என் பெற்றோர்க்கு இத்தனைப் பரிவு! என் தங்கையும் அண்ணனும் மதனியுங்கூட நேற்று, "பாவம், அவர்! பானு சண்டைபோட்டு விட்டாள்!" என்று பழைய சமாசாரத்தைக் கிளப்பினார்களே! மேற்பூச்சைக் கண்டு ஏன் இவர்களுக்கு இத்தனை மோகம்!

கணவன் எப்படிப்பட்டவனாயினும் பொருட்படுத்தாமல் பணிந்து போக வேண்டும் என்றுதான், அம்மா எச்சரிக்கையாக எனக்குப் போதனை செய்கிறாள். நான் கணவரைச் சில சமயம் கடிந்ததைக் கண்டு வெருவுகிறாள். எனக்கும் கணவர்மேல் எத்தனைதான் அன்பு இருந்தாலும், மனதிலே அவரைப் பற்றிய தெளிவான அபிப்பிராயம் வேண்டாமா! வாழ்க்கைத் துணைவரை நன்கு புரிந்து கொள்ள வேண்டாமா!

ஊர் போய்ச் சேர்ந்தேன் நான். "அட இதென்ன, திடுதிப்பென்று!" என வியந்து கூவினார் கணவர். நான் ஒன்றும் பேசவில்லை. வந்தவுடனே சண்டை போடுவானேன்! என் திடீர் வருகை அவருக்கு அதிர்ச்சியளித்ததைச் சுட்டிக் காட்டிவிட வேறு சந்தர்ப்பங்கள் வராமலா போகும்!

"நீ என்னருகே இல்லாதது எவ்வளவு வெறிச் சென்று இருந்தது தெரியுமா, பானு!" என்றார் அவர். "நீங்கள்தானே என்னை அங்கே இருக்கச் சொன்னீர்கள்!" என்றேன்.

"நீ உன் பெற்றோர் வீட்டிலே கால் வைத்ததுமே குஷியாய்க் குதித்துக் கும்மாளம் போட்டதைப் பார்த்துத் துணுக்குற்று விட்டேன். உன் சுதந்திரத்துக்குத் தடையாக நான் இருந்து விடுவேனோ என்றுதான், நீ என் மனைவி என்பதையே அங்கே மறந்தாற்போல் இருக்க முயன்றேன். இங்கேதான் என் காரியங்களுக்காகவும் தேவைகளுக்காகவும் அல்லற்படவேண்டியிருக்கிறது. அந்தப் பொறுப்பு உனக்கு அங்கேயும் வேண்டாமே என்று எண்ணி உன்போக்கிலே உன்னை விட்டுவிட முயற்சி செய்தேன். அப்படியுங்கூட நீ சில சமயம் கடுகடுப்புடன் என்னிடம் பேசினாய். நான் இல்லாமலேயே அங்கே சில நாள் இருந்தால் உன் குறை நீங்கும் என்று உன்னை இருக்கச் சொன்னேன்!" என்றார் கணவர்.

உவகை குழைந்த வியப்பு என்னை ஆட்கொண்டது. "இது நிஜமா!" என்று எண்ணிக் குதூகலித்தது என் மனம்.

"இன்று என் வரவினால் ஏற்பட்ட மகிழ்ச்சிப் போதையிலே அவர் கூறும் இனிப்புப் பேச்சு அல்லவே இது?" என்ற ஐயம் மட்டும் போகவில்லை.

மறுநாளே சீதாவைக் காணப் புறப்பட்டேன். முன்பிருந்த சீதா அல்ல அவள். உடல் மெலிந்திருந்தது. மடியிலே புதுக் குழந்தை. முகத்திலே...ஒரு...பேதமை! ஆம்! பேதமை தான் அவள்......ஒரு பேதைப் பெண்!

பேச்சுப் போக்கிலே, "நீ ஊரிலில்லாத பொழுது, உன் கணவர் எங்களவரோடு பொழுது போக்க வருவார். இப்பொழுது நான் ஊரிலில்லாததால் என் கணவர் உங்களிடையே புகுந்தாராக்கும்!" என்று சிரித்தவாறே வினவினேன்.

"அப்படி இருந்தாலாவது தேவலையே!" என்றாள் சீதா. அவள் குரலிலே விரிசல் விழுந்து விட்டது! எனக்குப் புதிராய் இருந்தது அவள் பேச்சு! சேஷுவின் குறுக்கீட்டினை அன்று நான் வெறுத்தேன்...என் கணவர் குறுக்கீடு செய்யவில்லை என்பது சீதாவிற்கு வியப்பாக இருந்தது!

"அப்படி யென்றால்! எனக்குப் புரியவில்லையே!" என்று கேட்டேன்.

"இவரோடு சேரவேண்டாம் என்றுதான் போலிருக்கு உன் கணவர் வருகிறதில்லை. ஒரு தடவை குழந்தையைப் பார்க்க வந்தார்...... அவ்வளவுதான்!" என்றாள் சீதா. அவள் கண்களிலே நீர் துளித்தது.

"ஏன்! என்னாச்சு சீதா!" என்று பதறிப் போய்க் கேட்டேன்.

ஆனால் எனக்கு அவள் விவரமாகச் சொல்லவேயில்லை. அடக்க முடியாத துக்கத்திலே விம்மி அழத் தொடங்கிவிட்டாள். தினமும்

டாரோ ஒரு சிநேகிதப் பெண்ணோடு சுற்றித் திரிகிறார் சேஷன் என்ற விஷயம் தான் நான் அவளுடைய விம்மல்களுக் கிடையே ஒருவாறு கிரகித்தேன்.

"நாளைக்கு வருகிறேன், சீதா! எனக்கும் உன் அழுகையைக் காண மனம் தாளவில்லை!" என்று கூறிவிட்டு, வீட்டுக்கு வந்து விட்டேன்.

ஓயாத சிந்தனை என் மனதிலே. வீடு மீண்ட பிறகு, அவரை அணுகி, "சேஷனைப்பற்றி ஏன் என்னிடம் சொல்லவில்லை!" என்று குற்றஞ் சாட்டினேன்.

"ஒருவரைப் பற்றிக் குற்றங்குறை நான் என் வாயால் சொல்லமாட்டேன்! தன்னால் தெரிந்து போகிறது! நான் சொல்லாமலேயே உனக்குத் தெரிந்துவிட்டதே!" என்றார் அவர்.

"சீதாவே சொன்னாள், பிறகுதான் தெரிந்தது! முன்பே உண்டா அவருக்கு இந்தப் புத்தி!" என்று கேட்டேன்.

'ஓ' என்னும் பாவனையில் பலமாகத் தலை அசைத்தார்! "உண்டா! அட, பாவமே! அவர் சகவாசத்தை நீங்கள் வெறுத்ததாகத் தெரியவில்லையே! அவருடைய போக்கு ரொம்பப் பிடித்திருந்ததாக்கும்! சீதா, பாவம், ஒரு நல்ல புருஷனின் மனைவி என்று பெருமைப் பட்டாள்! நீங்கள் விஷயம் தெரிந்தே கட்டிக் கொண்டாடினீர்களா!" என்று கோபமுடன் கேள்விகள் கேட்டேன்.

அவரோ வெகு நிதானமாக, "அவன் அவன் தான்! இருந்தாலும், வெறுத்தாலும் மனிதன் மாறிவிட முடியுமா!" என்றார்.

அவருடைய சொற்களிலே ஒரு தனித் தொனி தொனித்தது.

*

மறுநாள் மீண்டும் சீதாவை நாடிப் போனேன், அவளைத் தேற்றும் எண்ணமுடன். "உன் கணவரைப் பற்றி நீ நினைத்திருந்தது என்ன, நடந்தது என்ன!......இதுதான் உலகம் போலிருக்கு, சீதா. நான் நினைக்கிறதும் ஒருநாள் குலைந்து விடலாம்! புருஷர்களை அவ்வளவுதான் நம்ப வேண்டியிருக்கு!" என்று சொன்னேன்.

"அப்படிச் சொல்லாதே, பானு! உன் கணவரையும் மற்றவர்களையும் ஒன்றுபடுத்தாதே! இவர் போக்கு உன் புருஷரால் இருக்கும் என்றாவது எதிர்பார்க்கலாம்! உன் கணவர் கெட்டுப்போகும் மனுஷர் அல்லவே அல்ல!" என்றாள் சீதா.

சேஷனும் முன்பு அவள் மதிப்பிலே உயர்ந்திருந்தவர் தானே! இப்பொழுது குலைந்து விடவில்லையோ!

"லட்சிய புருஷனின் மனைவி என்று நீ பெருமைப்பட்டாய், சீதா! ஏமாந்து போனாய்! லட்சிய புருஷனின் மனைவி என என்னை நீ மதிக்கிறதும் குலைந்துபோய், மீண்டும் நீ ஏமாந்து விடலாம்!" என்றேன் என் வேதனையை எல்லாம் மறைத்துக் கொண்டு!

"லட்சிய புருஷரின் மனைவி என நான் என்னை நினைத்தது எத்தனை நாள்! கலியாணமான நாலு மாதம் வரைதான்!"

"பூரண கர்ப்பிணியாய் இருக்கும்பொழுது நீ எழுதிய கடிதம் நினைவில்லையா, சீதா!" என ஞாபகப்பூட்டினேன்.

"ஓ அதுவா!" என்று கூறிவிட்டு ஒரு வறட்டுச் சிரிப்புச் சிரித்தாள் சீதா.

"பின்னே நானே சொல்லிக் கொள்வேனா! இப்பொழுது எல்லோருக்கும் விஷயம் தெரிந்த பிறகு நான் மறைப்பதிலே பயன் இல்லை என்றுதான் நேற்றுச் சொன்னேன். அதுவும், உனக்குத் தெரிந்தே இருக்கும் என்று நினைத்துத்தான் சொன்னேன்!"

சீதாவின் இந்தப் பதில் என் அந்தரங்கத்திலே ஒரு விக்ரகக் குகையின் மந்திரக் கதவினைத் திறந்து விட்டது! ஆஹா!......

நேர்மையற்ற கணவனின் கௌரவத்திற்குக் கூடத் தன்னால் பாதக ஏற்படுவதை விரும்பாது, சீதா, தன் உணர்ச்சிகளை எப்படி அடக்கி அந்தக் கடிதம் எழுதியிருக்கிறாள்! நானோ உத்தமரான கணவரை, பிறர் முன்னிலையிலே தாழ்த்திப் பேசி விட்டேனே, ஆதாரமற்ற அவநம்பிக்கையோடு! விடுமுறை நாட்களிலே நான் நடந்துகொண்ட தோரணை என்ன! என் அன்னை சொன்னதெல்லாம் உண்மை! உண்மை! கணவரிடம் குற்றம் குறை காணாமல் அமைதியாக வாழ உதவக்கூடிய அஞ்ஞானம் இருந்துவிட்டுப் போகட்டுமே என்னும் அறிவின்றி, ஆராய்ச்சிகளிலே இறங்கினேன். அது அன்றோ அஞ்ஞானம்!

அந்தப் பேதைப் பெண்ணின் காதல் இதயத்தின் சிறப்பையும், என் காதல் இதயத்தின் சிறுமையையும் நான் உணர்ந்து கொண்ட இந்தப் பேறு அன்றோ ஞானம்!

சீதா! உன் கடிதம் இன்றுவரை என் மனக் கலக்கத்திற்குக் காரணமாயிருந்தது! இனி இதே கடிதம் ஓர் ஒளிமணி! என் வருங்கால வாழ்வின் இன்பத்திற்கு வழிகாட்டி! உன் சீரிய பண்பிற்கு அத்தாட்சி!

சீதாவைப் போற்றிக் கொண்டிருந்த என் இதயத்திலே ஓர் ஓரத்திலே கவலையும் ஆவலும் தோன்றின. என் கணவருக்கு ஏற்ற உயர்வு படைத்த மனைவிதானா நான்! காதற் கணவரின் வாய்மொழியாகவே இந்தக் குளிர்மொழியைக் கேட்டால் அல்லவா என் மனம் நிறையும்!

நல்ல காலம்

டி. வி. சீனு

“கமலா இன்று கட்டாயம் ஐந்து மணிக்கு வந்து விடுவேன், ஸினிமா முதல் ஆட்டத்திற்குப் போகலாம்” என்றான் வாசல் வரைக்கும் சென்ற ராமு.

“ஆமாம்! இதோடு ஐம்பது தடவை சொல்லியாகி விட்டது! ‘ஐந்து மணிக்கு வருவேன்’ என்று சொல்லிவிட்டு ராத்திரி ஒன்பது மணிக்குத்தான் வருகிறது என்ற வழக்கம் வைத்துக் கொண்டு விட்டீர்கள்” என்றாள் கமலா.

“இல்லை, கமலா, இந்த வாரம் கம்பெனியில் ஆடிட்டர் வரப் போவதால் பழைய கணக்குகளெல்லாம் சரி பார்க்க வேண்டியிருக்கிறது. இன்று வேலை ஒன்றும் அதிகமில்லாததால் கட்டாயம் ஐந்து மணிக்கெல்லாம் வந்து விடுவேன்” என்று கூறிவிட்டுப் பதிலுக்குக்கூடக் காத்திராமல் சைக்கிளை எடுத்துக் கொண்டு காரியாலயத்திற்குச் சென்று விட்டான். அவன் அவசரம் அவளுக்கல்லவா தெரியும்! காலை ஒன்பது மணி முதல் மாலை ஆறுமணி வரை உழைத்தால்தான் மாதம் நூறு ரூபாய் எண்ணிக் கையில் வாங்க முடியும். அதுவும் வருஷாந்திரக் கணக்கு வந்துவிட்டால் போதும், ராமுவுக்கு மனைவி கொடுத்தனுப்பும் டிபனைக் கூடச் சாப்பிட நேரமிராது. சுற்றி வளைப்பானேன். இரவும் அங்கேயே தங்க நேரிடும்.

கமலாவுக்கு அவற்றை யெல்லாம் சொன்னால் எங்கேயாவது விளங்கப் போகிறதா என்ன? பாவம்! அவளும் தான் என்ன செய்வாள்? ஒரு மாதமாகத் தன் கணவனிடம் ஸினிமாவிற்குப் போக வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறாள்? அவனும் “ஆகட்டும்; நாளைக்குப் போகலாம்” என்று தட்டிக் கழித்து வருகிறான் பாவம்! அவன் மில் வேலையைக் கவனிப்பானா, மனைவியைச் ஸினிமாவிற்கு அழைத்துச் செல்வானா?

ஏன், ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள் தானே? அன்று போகலாமே என்பீர்கள். மானேஜர் ராகவய்யர் அன்றும் அவனைக் காரியாலயத்துக்கு வரும்படி பியூன் கந்தசாமியிடம் நூறு சொல்லிவிடுவார். அன்றும் வேலை யெல்லாம் முடித்துக்கொண்டு அவன் வீடு திரும்பும்போது மணி ஆறாகிவிடும்.

“ஸார்! எனக்கு வேறு வேலை யிருக்கிறது, வீட்டுக்குப் போக வேண்டும்” என்று ராமு ஒருநாளும் சொல்ல மாட்டான். காரணம், அவன் மானேஜரின் அதிருப்திக்கு ஆளாக விரும்பவில்லை.

ஆனால் கமலா ரொம்பவும் தைரியசாலி. தன் கணவர் ‘இவ்வளவு கோழையாயிருக்கிறாரே’ என்று அவளுக்கு அவன் மேல் கோபமாய் வரும். “இந்த வேலை யில்லாவிட்டால் வேறு வேலை கிடைத்து விட்டுப் போகிறது! அதற்காக மானேஜருக்குப் பயந்து சாவதா?” என்று தன் கணவனிடம் அடிக்கடி சொல்லுவாள். ஆனால் அவனோ “கமலா அப்படி யெல்லாம் சொல்லாதே, நமக்கும் என்றைக்காவது ஒரு நாள் நல்ல காலம் வரும்!” என்பான்.

ராமு அன்று எப்படியாவது ஐந்து மணிக்கெல்லாம் வீடு திரும்பிவிட வேண்டுமென்று எண்ணிக் கொண்டான். சீக்கிரத்தில் வேலையை முடிக்க வேண்டும், பிறகு தான் ‘டிபன்’ சாப்பிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டான்.

ஆபீஸில் நுழைந்ததும் வழக்கம்போல் டைப்பிஸ்டு ராமன், குமாஸ்தா சங்கரன் மற்றும் பலபேர் கூடியிருக்கும் வம்பர் மகா சபைக்குச் செல்லாமல், தன் அறைக்குச் சென்று நாற்காலியில் அமர்ந்தான். மற்ற குமாஸ்தாக்கள் தன்னைச் சுட்டிக் காட்டி ஏதோ கேலி செய்வதை எல்லாம் லட்சியம் செய்யாமல் தன் காரியத்தைக் கவனிக்கத் தொடங்கினான். இதற்குள் ஹெட் கிளார்க் சுப்ரமணிய ஐயர் உள்ளே நுழையவே மற்ற குமாஸ்தாக்கள் எல்லோரும் அவசர அவசரமாகத் தங்கள் நாற்காலிகளில் போய் அமர ஆரம்பித்தனர்.

‘டாங்,’ என்று மணி ஒரு தடவை அடித்ததும், எல்லோரும் எழுந்து அவரவர் ‘டிபன் செட்’டை காலியாக்க ஆரம்பித்தனர். மானேஜர் ராகவய்யரும் ஹெட் கிளார்க்கு சுப்ரமணிய ஐயரும்கூடச் சாப்பிட வீட்டுக்குப் போய்விட்டனர். ராமு மட்டும் நாற்காலியை விட்டு அசையாமல் அப்படியே ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். சாப்பிட்டு விட்டு எல்லோரும் திரும்பி வந்ததுகூட அவனுக்குத் தெரியவில்லை.

‘உஸ், அப்பாடா!’ என்று பெருமூச்சு விட்டுக் கொண்டு ராமு ‘லெட்ஜரை’ மூடுவதற்கும் கடிகாரத்தில் மணி நாலு அடிப்பதற்கும் சரியாக இருந்தது.

"அடடா, மணி நாலாகி விட்டதே!" என்று அவசர அவசரமாக டிபன் செட்டைத் திறந்தான். அதைக் கூடச் சரியாகச் சாப்பிட முடியவில்லை. அவன் பாதி சாப்பிட்டுக் கொண்டிருக்கையிலே பியூன் கந்தசாமி வந்து "மானேஜர் ஐயா உங்களை கூப்பிடுறாங்க, ஏதோ தந்தி வந்திருக்குதாம்" என்றான். ராமு அவசரமாக டிபனை முடித்துக் கொண்டு மானேஜர் அறையை நோக்கி நடந்தான்.

"மிஸ்டர் ராமு! இன்று நீர் கம்பெனி விஷயமாகக் கொல்லம் வரை போய் வரவேண்டும்! இந்த மில் ஆடிட்டர் இந்த வாரம் பரிசீலனை செய்வதற்கு இங்கு வர அசௌகரியமா யிருப்பதாகத் தந்தி கொடுத்திருக்கிறார். தவிர மில்லில் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவரிடம் கணக்குப் புத்தகங்களைக் கொடுத்தனுப்பும்படி கேட்டிருக்கிறார். இந்த மில்லில் உம்மைத் தவிர நான் வேறு யாரையும் நம்புவதற்கில்லை" என்றார் மானேஜர்.

பாவம்! ராமுவால் என்ன பதில் சொல்ல முடியும்? "சரி, ஸார்" என்று புறப்படுவதற்கு ஆயத்தமானான்.

"இப்போதே, ஐந்துமணி வண்டிக்கே புறப்படுங்கள்" என்று கூறிச் செலவுக்கு நூறு ரூபாயைக் கொடுத்தார் மானேஜர்.

"ஐயோ! கடவுளே! கமலாவுக்கு என்னால் ஒரு சுகமும் அளிக்க முடியவில்லையே, பாவம்! கமலா சினிமாவுக்குப் போகக் காத்திருப்பாள். ஒருவேளை என்னைத் தவிர அவள் வேறு யாரையேனும் மணந்திருந்தால் ......" என்று அவன் பலபல எண்ணினான்.

*

அவன் ரயிலுக்குப் போகுமுன் கந்தசாமியிடம், "நான் இந்த வண்டிக்குக் கொல்லம் போவதாக வீட்டில் சொல்லி விடு" என்று கூறிவிட்டு அவசரமாக மில் காரிலேயே ஏறிக்கொண்டு ஸ்டேஷனை நோக்கி விரைந்தான்.

மூன்று சூரர்கள்


மா சே துங்

இரண்டு ஆண்டுகளுக்கு முன் கந்தையை உடுத்திக் கொண்டு காடுகளிலும் மலைகளிலும் உயிருக்குப் பயந்து ஒளிந்து கொண்டிருந்தவர், இன்று உலகத்தின் ஐந்தில் ஒரு மடங்கு பெரிய நாட்டுக்கு முடிசூடா மன்னராக விளங்குகிறார் என்றால், அதை நம்ப முடியுமா? ஆனால் அத்தகைய அதிசயம் நமது கண்முன் நிகழ்ந்திருக்கிறது. சீனத் தலைவரான மா சே துங்கின் வாழ்க்கைச் சம்பவங்கள் அரபிக் கதைகளைக் கூடத் தூக்கி யடித்து விடும். ஏழை விவசாயி வயிற்றில் பிறந்து, எட்டாவது வயதில் பள்ளிக்கூடத்தை விட்டு ஓடிய மா சே துங் சலியா உழைப்பினாலும் ஓயாப் படிப்பினாலும் சுமார் ஐம்பது கோடி மக்களின் மதிப்புக்குப் பாத்திரராகத் திகழ்கின்றார். மா சே துங், சீனாவின் தந்தை என்று பிரசித்தி பெற்ற டாக்டர் ஸன் யாட் ஸென்னின் படையில் சாதாரண சிப்பாயாக இருந்தவர். டாக்டர் ஸன் யாட் ஸென் இறந்த பிறகு சியாங்கை ஷேக்கிற்கும் அவரது கட்சியைச் சேர்ந்த பிரபல பத்திரிகையின் ஆசிரியராக இருந்த மா சே துங்கிற்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டு இருவரும் பகைவராயினர். அவர்களுடைய பகை சீனாவின் விதியையே அடியோடு மாற்றிவிட்டது!


சூ தே

தூக்குத் தண்டனையிலிருந்து தப்பிய மா சே துங்கும் அவரது நண்பர்களும் பல ஆண்டுகள் வரையில் ஒளிந்து கொண்டு காலம் கழித்தனர்; அப்போது பொதுவுடைமைக் கட்சியை நிறுவினர். அன்றிருந்து அவரது இணைபிரியாத நண்பராக இருந்துவரும் சூ தே தான் இன்று சீனாவின் பிரதம சேனாதிபதியாகவும் மா சே துங்கின் வலது கையாகவும் இருந்து வருகிறார்.


சூ யென் லாய்

இப்போது சீனாவின் பிரதம மந்திரியாக இருக்கும் சூ யென் லாய் ஒரு சமயம் சியாங்கை ஷேக்கினால் சிறைப்படுத்தப்பட்டார். ஆனால் பிறகு சூ யென் லாய் சிறையிலிருந்து வெகு தந்திரமாகத் தப்பி மறைந்து விட்டார். அவரது தலையைக் கொண்டு வருவோருக்கு லட்சக்கணக்கில் வெகுமதி அளிப்பதாக சியாங் பிரகடனம் செய்தும் பலன் ஏற்படவில்லை. சில வருஷங்களுக்கு முன் சியாங்கின் உயிர் சூவின் கையில் இருந்தது. சூ யென் லாயின் சிப்பாய்கள் சியாங்கை ஷேக்கைத் தூக்கிக் கொண்டுபோய் விட்டார்கள். எனினும் பின்னர் அவரை விடுதலை செய்து விட்டனர். இப்படிப்பட்ட சூரர்களான இந்த மூவரின் கையில்தான் இன்றைய சீனாவின் விதி இருக்கிறது.

கமலா மூன்று மணியிலிருந்தே டிரஸ் செய்து கொள்ள ஆரம்பித்து விட்டாள். அவள் டிரஸ் செய்து முடித்துக் கொள்வதற்கும் மணி நாலரை அடிப்பதற்கும் சரியாக இருந்தது. அவசரமாகக் கரியடுப்பை மூட்டிக் காப்பியும் பஜ்ஜியும் தயார் செய்தாள். இதற்குள் மணி ஐந்தரை ஆகிவிட்டது. டிபனை மூடி வைத்து விட்டு வாசலுக்குச் சென்றாள் கமலா.

'மணி ஐந்தரையாகி விட்டதே. ஐந்து மணிக்கே வருவதாகச் சொன்னாரே' என்று முணுமுணுத்துக் கொண்டே உள்ளுக்கும் வாசலுக்குமாக நடந்தாள் கமலா. 'ஆச்சு,. மணி ஐந்தே முக்கால், இனிமேல் எங்கே வரப்போகிறார்' என்று அலுத்துக் கொண்டே உள்ளே திரும்பினாள் கமலா. அதே சமயம் வாசலில் தன் கணவனது சைக்கிள் மணியின் சத்தம் கேட்கவே ஆவலோடு வாசலில் எட்டிப் பார்த்தாள். அங்கு தன் கணவன் ராமுவைக் காணவில்லை. அதற்குப் பதிலாகக் கந்தசாமி டிபன் செட்டுடன் சைக்கிளிலிருந்து இறங்கி வந்தான்!

அவள் கேட்பதற்கு முன்பே அவன், "அம்மா, ஐயா மில் விஷயமாகக் கொல்லம் போயிருக்காங்க. நாளைப் பகல் மூன்று மணிக்கெல்லாம் வந்திடுவாங்க. இந்த ஐந்து மணி வண்டியில் தான் போனாங்க" என்ற தகவலைச் சொல்லிவிட்டுச் சைக்கிளையும் டிபன் செட்டையும் உள்ளே வைத்து விட்டுச் சென்றான்.

கொல்லம் ஸ்டேஷனிலிருந்து ராமுவையும் குமாஸ்தாவையும் ஏற்றிச் சென்ற ஆடிட்டரின் கார் நாலு மணி நேரத்துக்கெல்லாம் ஆடிட்டரின் வீட்டை யடைந்தது. ஆடிட்டர் ராமுவை வரவேற்று மில் விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். பின் கணக்குப் புத்தகங்களைப் பரிசீலனைசெய்தார். ராமுவின் வேலைத் திறனைக் கண்டு வியந்தார். அவர் பரிசீலனை செய்து கொண்டிருக்கும் போதே அன்றையத் தபால் வந்துவிட்டது. அன்றையத் தபாலில் ஆடிட்டருக்கு மேலதிகாரியிடமிருந்து வந்த கடிதத்தில் "ராமுவை உதவி மானேஜராகப் போடலாம்" என்று கண்டிருந்தது. அதைக் கண்ட அவருக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை.

"மிஸ்டர் ராமு! உம்மை நம் மில்லுக்கு உதவி மானேஜராகப் போடும்படி இதோ ஆர்டர் வந்திருக்கிறது. இருநூறு ரூபாய் சம்பளம்! உம்மைப் பற்றிய விஷயங்கள் எல்லாம் எனக்குத் தெரியும். அந்த மில்லில் உம்மைப் போல் வேலையை ஏற்றுப் பொறுப்புடன் செய்பவரை நான் இதுவரை பார்த்ததில்லை" என்றார் ஆடிட்டர்.

அதைக் கேட்டதும் ராமுவுக்குத் தான் நிற்பது பூமி தானா என்றொரு பிரமை தோன்றி விட்டது. இது கனவா, நனவா என்றே தெரியவில்லை.

அன்று பிற்பகல் மூன்று மணிக்கெல்லாம் ராமு திருவனந்தபுரம் வந்து சேர்ந்தான். நேராகக் காரியாலய மானேஜரைப் பார்க்கச் சென்றான். மானேஜர் அவனைக் கண்டதும் ஆனந்தத்தால் கைகுலுக்கி வரவேற்றார்.

"ஹலோ! மிஸ்டர் உதவி மானேஜர் வாருங்கள்" என்று கேலி செய்தார்.

"உதவி மானேஜரா? உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று ஆச்சரியத்துடன் வினவினான் ராமு.

"இதோ பாருங்கள் ஆர்டர்" என்று ஒரு நகலை அவனிடம் காண்பித்தார்.

*

ராமு நாலு மணிக்கெல்லாம் மில் காரிலேயே கந்தசாமியின் சகிதம் தன்னுடைய வீட்டுக்குப் போனான்.

தன் கணவன் காரிலிருந்து இறங்கி வருவதைக் கண்ட கமலாவுக்கு ஆச்சரியமாய்ப் போய்விட்டது. ராமு விஷயத்தைச் சொல்லுவதற்கு முன்பே, கந்தசாமி "அம்மா, ஐயாவுக்கு உதவி மானேஜர் வேலை கிடைத்திருக்குதுங்க. ஐயா இனிமேல் மோட்டாரில் தான் எங்கேயும் போவாங்க!" என்றான்.

கமலாவுக்கு வாயெல்லாம் பல்லாய்ப் போய்விட்டது. 'ஐயோ, அவரைச் சுத்த கோழை, அப்பாவி என்றெல்லாம் நினைத்தேனே! அவர் மகா பொறுமைசாலி. அவர் பொறுமைக்குத்தான் நல்ல காலம் வந்தது' என்று எண்ணியபோதே அவள் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் அவளை அறியாமல் தரையில் விழுந்தது.

"கமலா என் அழுகிறாய்?" என்று தன் கணவன் கூறுவதைக் கேட்டதும் கமலா, "ஒன்றுமில்லை" என்று கண்ணைத் துடைத்துக் கொண்டே சிரிக்க முயன்றாள்.

"கமலா, சீக்கிரம் காப்பி தயாராகட்டும்! இன்று சினிமா முதல் ஆட்டத்திற்குப் போய்விட்டு வரலாம்" என்று ராமு கூறியதைக் கேட்டதும் அவள் உள்ளம் ஆனந்தத்தால் பூரித்தது.

அன்று அவர்கள் காரில் கந்தசாமி சகிதம் சினிமாவுக்குப் போய் முதல் வகுப்பில் அமர்ந்து படம் பார்த்தார்கள் என்பதைக் கூறவும் வேண்டுமா?

தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிட்.

கல்கத்தா

*

அங்கீகாரம் பெற்ற
மூலதனம் ... ரூ. 8 கோடி

வாக்களிக்கப்பட்ட
மூலதனம் ... ரூ. 4 கோடி

செலுத்தப்பட்ட
மூலதனம் .... ரூ. 2 கோடி

ரிஸர்வ் நிதி ... ரூ. 60 லட்சம்

★

போர்ட் ஆப் டைரக்டர்கள் :

G. D. பிர்லா (சேர்மன்)

ஈஸ்வரி பிரசாத் கோயங்கா
வைஸ் சேர்மன்

ரமன்லால் G. சரய்யா
வைஸ் சேர்மன்

அனந்த சரண் லா
பைஜ்நாத் ஜலான்
கோபிந்த்லால் பங்கூர்
P. D. ஹிம்மத் சின்கா
ராமேஷ்வர்லால் நோபானி
மகாதேவ் L. தனுகார்
மதன்மோஹன் R. ரூயா
மோஹன்லால் L. ஷா
மோதிலால் தபுரியா
நவீன்சந்திர மபத்லால்

ஜெனரல் மானேஜர் :

B. T. தாகூர்

*

இந்தியா, பர்மா, பாகிஸ்தான், மலேயா முதலிய தேசங்களின் முக்கிய பட்டணங்களிலும் நகரங்களிலும் கிளை ஆபீஸ்களுடன், உலகம் பூராவும் ஏஜன்ஸி ஸ்தாபனங்களுடன் கூடிய நமது பாங்க் சகலவிதமான பாங்க் அலுவல்களையும் முற்றிலும் திறமையாகச் சேவை செய்யுமாறு நிறுவப்பட்டிருக்கிறது.

காந்திமதி குமார் இயற்றிய

சுலபமான தையல் (Cutting) புஸ்தகங்கள்

1. ஆரம்பபுஸ்தகம்—படங்களுடன் (தமிழ் ஆங்கிலம்இரண்டிலும்கிடைக்கும்) அணா 6
2. புஸ்தகம் நம்பர் 2 — ஜாகெட் படங்களுடன் (தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் கிடைக்கும்) 6
3. புஸ்தகம் நம்பர் 1 (ஆங்கிலத்தில்) பாவாடை, செக்காய் படங்களுடன் 6
4. புஸ்தகம் நம்பர் 3 (ஆங்கிலத்தில்) சாதாரண பிருக்கும், பிரில் (frill) பிருக்கும் 7

தபால் சார்ஜ் பிரத்யேகம்

மேற்படி புத்தகங்கள் கீழ் விலாசத்தில் கிடைக்கும் :

Mrs. KANTHIMATHI KUMAR
"MITHILA"
COLLEGE OF AGRICULTURE, POONA - 5

ஸீதாலக்ஷ்மி சங்கரய்யர் இயற்றிய

ராமன் நூல் வேலை புஸ்தகங்கள்

தமிழில் வெளியிட்டிருப்பவை

1. ஆரம்ப புஸ்தகம் படங்களுடன் 2-6
2. புஸ்தகம் நம்பர் 1 (3லிருந்து 4வயது வரை பெண்களின் ஜம்பர்) 6
3. நம்பர் 2 (9 லிருந்து 11 வயதுவரை யுள்ள பிள்ளைகளின் ஸ்வெட்டர்) 6
4. நம்பர் 3 (1 லிருந்து 2 வயது வரை குழந்தைகளின்கோட்டும் லாக்ஸ"ம்) 6
5. நம்பர் 4 (9லிருந்து 11 வயது வரை பெண்களின் ஸ்வெட்டர் 6
6. நம்பர்கள் 5-ம் 6-ம் சேர்ந்த ஒரு புஸ்தகம் : 6 மாதம்வரை யுள்ள குழந்தைகளின் ஸ்வெட்டர், குல்லா, லாக்ஸ"ம் புருஷர்கள் ஸ்வெட்டரும் 10
7. நம்பர்கள் 7ம், 8ம் சேர்ந்த ஒரு புஸ்தகம் : 6 மாதம்வரையுள்ள குழந்தைக்குக் கோட்டு, நிக்கர், சாக்ஸ், குல்லாவும் 6 மாதத்திலிருந்து ஒன்றரை வயதுவரை பிருக்கும் 10
8. நம்பர்கள் 9ம் 10ம் சேர்ந்த ஒரு புஸ்தகம் : ஸ்திரீகள் ஜம்பரும், புருஷர்கள் மூடு கழுத்து ஸ்வெட்டரும் 10
9. நம். 11ம் 12ம் சேர்ந்த ஒரு புஸ்தகம்: ஸ்திரீகளின் கோட்டும், புருஷர்களின் டென்னிஸ் ஸ்வெட்டரும் 10

ஸ்ரீமதி மிருஷி சீதாராமனும் மொழிபெயர்க்கப்பட்டு ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருப்பவை

நம்பர் 1 (3லிருந்து 4 வயது வரை பெண்களின் ஜம்பர்) 4
,, 9 (சிறிய ஸ்திரீகளின் ஜம்பர்) 4
,, 10 (புருஷர்கள்மூடுகழுத்து ஸ்வெட்டர்) 4
,, 11 (ஸ்திரீகளின் கோட்) 4
,, 12 (புருஷர்கள் டென்னிஸ் ஸ்வெட்டர்) 4
,, 13 (ஸ்திரீகள் ஜம்பர்,முழுக்கு நிஜார்) 4

தபால் சார்ஜ் பிரத்யேகம்

புத்தகங்கள் கீழ்க்கண்ட விலாசத்தில் கிடைக்கும் :

Mrs. Seethalakshmi Sankara Aiyar
SANKARA NILAYAM - MANNARPURAM
TIRUCHIRAPPALLI

மேற்கண்ட தையல், பின்னல் இரண்டு புஸ்தகங்களுக்கும் சென்னைப்பட்டணத்தில் மாத்திரம் ஏஜெண்டுகள் :

NEW INDIA BOOK HOUSE
"JAYA MANSIONS"
Poonamallee High Road, Park Town, Madras-3

யானை சவாரி

-சாமா-

பாபுவுக்கு வயது ஏழு இருக்கும். வயதில் சிறியவனாக இருந்தாலும் ரொம்பவும் தைரியசாலி, துணிச்சல் பேர்வழி. பள்ளிக்கூடத்திற்கு மட்டம் போடுவதென்றால் அவனுக்கு ரொம்பக் குஷி.


ஒரு நாள் அவனுக்கு ஏரோப்ளேனில் ஏறிச் செல்லவேண்டும் என்ற ஆசை உண்டாகிவிட்டது. பள்ளிக்கூடத்திற்கு மட்டம் போட்டு விட்டு அதிவேகமாகப் பக்கத்தில் உள்ள விமான நிலயத்திற்குள் யாருக்கும் தெரியாமல் நுழைந்துவிட்டான். அப்பொழுது தான் ஒரு விமானம் கிளம்பிக் கொண்டிருந்தது. ஓடிப் போய், "மாமா, மாமா! என்னையும் ஏற்றிக் கொள்ளுங்கள்!" என்று கெஞ்சினான். விமானி, 'பாவம், சின்னப் பையன் பறப்பதற்குப் பறக்கிறான்; ஏற்றுக் கொள்ளலாம்' என்று ஏற்றிக் கொண்டார். பிறகு பையனுக்குப் 'பாரச்சூட்'டை எடுத்து முதுகில் கட்டிவிட்டார். பாபு விமானியுடன் பேசிக் கொண்டே பறந்தான்.

பாபுவுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. திடீரென்று ஒரு அசட்டுத் தைரியம் அவனுக்கு வந்தது. 'பாரச்சூட்' எப்படி வேலை செய்கிறது என்று பார்க்கலாம் என்று விமானத்திலிருந்து வெளியே திடீர் என்று குதித்து விட்டான். விமானிக்குத் தூக்கி வாரிப்போட்டது.

பாரச்சூட் குடை போல் விரிந்தது. பாபு ஆகாசத்தில் மிதந்தான். மெள்ள மெள்ளக் கீழே இறங்கினான். திடீரென்று இடுப்பில் கட்டியிருந்த 'பாரச்சூட்'டின் 'வார்' அறுந்து விழுந்து விட்டது. பாபு அதிவேகத்தில் கீழே விழுந்து கொண்டிருந்தான். அப்பொழுது கீழே தான் விழப்போகிற இடம் எப்படிப்பட்டது என்று பார்த்தான். ஒரு பெரிய குளம் தெரிந்தது. 'சரி, இன்றைக்கு நாம் தொலைந்தோம்' என்று தீர்மானித்து விட்டான்.

'தொபுகடீர்' என்று பாபு விழுந்தான். குளத்திற்குள் அல்ல — ஒரு யானையின் மேல். ஒரு யானைப் பாகன் தன் கோவில் யானையை அங்கு குளிப்பாட்டிக் கொண்டிராவிட்டால் பாபு குளத்தில் மூழ்கியிருப்பான். யானை நகர்ந்தது. பாபு யானையைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டான். யானை தெருக்கள் வழியாக அசைந்து சென்றது. வீதிகளில் எல்லோரும் கூட்டமாக வந்து வேடிக்கை பார்த்தார்கள். கொஞ்ச தூரம் போய் ஒரு பெரிய கட்டிடத்திற்குள் புகுந்து யானை மண்டிபோட்டு பாபுவை இறக்கி விட்டது.

பாபுவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. மட்டம் போட எத்தனித்தவனைப் பள்ளிக்கூடத்தில் கொண்டு சேர்த்தால், ஏன் ஆச்சரியமாக இருக்காது? அதே போல் உபாத்தியாயர்களும் மற்றப் பையன்களும் பாபு மணியடிப்பதற்கு முன்னாலேயே பள்ளிக்கூடம் வந்துசேர்ந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்து விட்டார்கள்!







மூன்று பொம்மைகள்

சுதர்சன்

ஒரு நாள் ராஜா போஜனுடைய தர்பாருக்கு ஒரு சிற்பி பித்தளையால் ஆன மூன்று பொம்மைகளைக் கொண்டு வந்தான். பார்ப்பதற்கு அந்த மூன்று பொம்மைகளும் ஒரே மாதிரியாகத்தான் இருந்தன. ஒன்றுக்கொன்று கொஞ்சம் கூட வித்தியாசம் தெரியவில்லை. மூன்றும் ஒரே அச்சில் வார்க்கப் பட்டவை போலவே காட்சி அளித்தன. போஜ ராஜன் அந்தப் பொம்மைகளைப் பார்த்துச் சந்தோஷம் அடைந்தான். அந்தப் பொம்மைகளைக் கொண்டு வந்த சிற்பியைப் பார்த்து, "இந்த மூன்று பொம்மைகளுமே நமக்குப் பிடித்திருக்கின்றன. இந்த மூன்றையும் நாம் விலைக்கு வாங்கிக் கொள்ளுகிறோம். விலை என்ன? சொல்லு!" என்றான்.

சிற்பி தலை வணங்கி, "மகாராஜா! ஒன்றின் விலை ஒரு லக்ஷ ரூபாய். இன்னொன்றின் விலை நூறு ரூபாய். மூன்றாவதன் விலை காலணா" என்றான்.

அதைக் கேட்ட அரசன் போஜனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. "ஏன் அப்பா! இவற்றின் விலைகளில் இவ்வளவு வித்தியாசம் இருப்பதற்குக் காரணம் என்ன? பார்ப்பதற்கு மூன்றும் ஒன்று போலத் தானே இருக்கின்றன? அங்க அமைப்புக்களில் வித்தியாசம் இல்லை. உலோகப் பொருள்களிலும் வேற்றுமை இல்லை. நிறையிலும் கூட ஒரு வித்தியாசமும் இருப்பதாகத் தெரியவில்லையே! விலையை மட்டும் இப்படி அஜகஜாந்தரமாகச் சொல்கிறாயே?" என்று கேட்டான்.

சிற்பி கைகளைக் கட்டிக் கொண்டு, "மகாராஜா! இந்த மூன்றுக்கும் மிக மிக வித்தியாசம் இருக்கிறது. வித்தியாசம் இல்லாவிட்டால் இவற்றுக்கு இப்படித் தனித்தனியான விலை சொல்லுவேனா? அவ்வளவு எனக்கு இன்னும் மூளை கெட வில்லை!" என்றான்.

அரசன் அந்தப் பொம்மைகளை மிகவும் உன்னிப்பாகக் கவனித்தான். ஆனால் ஒரு வித்தியாசமும் இருப்பதாக அவனுக்குத் தெரிய வில்லை. கடைசியில் தர்பாரில் உள்ளவர்களைப் பார்த்து, "கொஞ்சம் நீங்களும்தான் பாருங்களேன்! எனக்கு மூன்றும் ஒன்றாகத்தான் தோன்றுகின்றன. ஒரு வேளை என் ஊகம் பிழையாக இருக்கலாம் அல்லவா?" என்றார்.

தர்பாரில் உள்ளவர்கள் அனைவரும் அந்தப் பொம்மைகளைப் புரட்டிக் கிரட்டிப் பார்த்து விட்டு, "மாகராஜ்! மூன்றும் ஒன்று போலவேதான் இருக்கின்றன. கடுகளவு கூட வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை. இவன் வேண்டுமென்று பொய் சொல்லி விலையை அதிகமாக்குகிறான்!" என்றனர்.

ஆனால் அந்தக் கும்பலிலும் ஒரே ஒரு மனிதன் மட்டும் பாக்கியிருந்தான். அவன் ராஜா போஜனுடைய தர்பாரில் மிக பிரசித்தி பெற்ற ஒரு கவி. அவனும் பொம்மைகளை வாங்கிப் புரட்டிப் பார்த்தான். பிறகு சிறிது நேரம் கழித்து, "மகாராஜ்! சிற்பி பொய் சொல்லவில்லை. உண்மைதான் சொல்லுகிறான். இந்த மூன்று பொம்மைகளுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறது.



ஒரு லக்ஷம் என்று விலை சொன்ன இந்தப் பொம்மையைப் பாருங்கள்! இதன் காதில் ஒரு துவாரம் இருக்கிறது. அந்தத் துவாரம் இதன் வயிற்றினுள்ளே சென்றிருக்கிறது. இதன் காதில் நூல் போன்ற ஏதாவது ஒன்றை விட்டால், அதை வெளியே எடுக்க வழி கிடையாது. நூறு ரூபாய் விலை சொன்னேனே, அந்தப் பொம்மை இதுதான். இதன் இரண்டு காதுகளிலும் துவாரங்கள் இருக்கின்றன. இதன் ஒரு காதில் ஏதாவது ஒரு பொருளைப் போட்டால் இன்னொரு காதின் வழியாக அது வெளியே வந்து விடும். ஆனால் மூன்றாவது பொம்மையின் துவாரம் வாய் வழியே வெளி வருகிறது. இதன் வழியாக ஏதாவது ஒரு பொருளைப் போட்டால், அது வாய் வழியே வெளியே வந்துவிடும் மூன்று பொம்மைகளையும் கவனித்துப் பாருங்கள்" என்றான்.

அதைச் சொல்லி விட்டு அவன் சிறிது நேரம் பேசாமல் நின்றான். அதைப் பார்த்த அரசன், "நீ சொல்வது உண்மைதான். அதனால் என்ன?" என்றான்.

கவி தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "உலகத்தில் மூன்று வித மனிதர்கள் இருக்கிறார்கள்! முதல் வகை மனிதர்கள் மிகவும் கம்பீரமாகவும் ஆழமான உள்ளம் படைத்தவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் ஏதாவது விஷயத்தைக் கேட்டால், மனசிலேயே வைத்துக் கொள்வார்கள். யாரிடமும் வெளியிட மாட்டார்கள். அவர்களுடைய பெறுமானம் லக்ஷ ரூபாய்க்கு மேலேயே என்று கூடச் சொல்லலாம். இரண்டாவது வகை மனிதர்கள் மிகவும் அலட்சிய சுபாவம் படைத்தவர்கள். ஒரு காதினால் கேட்டு இன்னொரு காதினால் விட்டு விடுவார்கள். இப்படிப் பட்டவர்கள் உலகத்திலே ஏராளமாக இருக்கிறார்கள். இப்படிப் பட்டவர்களின் பெறுமானம் நூறு ரூபாய் என்று சிற்பி சொன்னான். மூன்றாவது வகை மனிதர்கள் மிகவும் தாழ்ந்தவர்கள். அவர்கள் மனசில் எந்த விஷயமும் தங்காது. காதால் கேட்ட விஷயத்தை வாயால் தமுக்கு அடித்துப் பரப்புவது தான் அவர்களுடைய வேலை. அத்தகையவர்கள் மிகவும் அபாயகரமானவர்கள். இவர்களிடம் மிகவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். இப்படிப் பட்டவர்கள் கால் காசு கூடப் பெறாதவர்கள். இவர்களைச் சல்லிக்குக் கூடப் பிரயோஜனப் படாதவர்கள் என்றே சொல்லலாம்" என்றான்.

போஜராஜன் தன் கவியின் அறிவையும் சிற்பியின் சாமர்த்தியத்தையும் பாராட்டிப் புகழ்ந்தான். அதே க்ஷணம் லக்ஷ ரூபாய் பெறுமானமுள்ள பொம்மையை வாங்கிக் கொண்டு, மற்ற இரண்டு பொம்மைகளையும் திருப்பிச் சிற்பியிடமே கொடுத்து விட்டான்.

— விஸ்ணு



தங்கச் சங்கிலி

எஸ். ஆறுமுகம்

ரயிலிலிருந்து வீட்டுக்குள் நுழைந்ததும் கிருஷ்ணசாமி கூறிய நற்செய்தி அவ்வீட்டிலிருந்த பரபரப்பை உண்டாக்கி விட்டிருந்தது. உள்ளே கூடத்தில் கைகளால் கன்னத்தை அணைத்தவாறு பிரதிமையாக உட்கார்ந்திருந்த லலிதாவுக்கும் அச்செய்தி காதில் விழத்தான் செய்தது. அப்படிப்பட்டதொரு சமாசாரம் கேட்டதற்கு, இதுவன்றி பிரிதொரு சமயமாக இருந்திருந்தால் லலிதா எவ்வளவோ குதூகலித்திருப்பாள்; கொம்மாளம் கொட்டியிருப்பாள்; ஓடிப்போய்த் தங்கை கமலாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, "கமலா, இனி உன் வாழ்க்கை மலர்ந்து விடும்; நீ பாக்கியசாலிதான்" என்று அன்பொழுகக் கூறி அவளை ஆனந்த பரவசப்படுத்தியிருப்பாள்.

ஆனால் அப்போதைய மன நிலையில் லலிதா உற்சாக மளிக்கும் வார்த்தைகள் இரண்டுகூடச் சொல்ல முடியாமல் தவித்தாள். அதற்குள் "அக்கா" என்று கூப்பிட்டுக்கொண்டு கமலாவே ஓடி வந்து விட்டாள். தமக்கையைக் கண்டதும் கமலாவுக்குக் கண்கள் கலங்கின.

"கமலா, மெத்த சந்தோஷம். மாப்பிள்ளை திருவையாறுமே. அம்பிகையின் கிருபைதான்" என்றாள் லலிதா.

இந்தச் சில வார்த்தைகளைக் கூறி முடிப்பதற்குள் லலிதாவுக்குப் போதும் போதுமென்றாகி விட்டது.

"அக்கா, எனக்கு என்னவோ இந்தக் கல்யாணத்தில் துளியும் சந்தோஷமோ விருப்பமோ இல்லை. நீ தினமும் சோகமே உருவாக உட்கார்ந்திருக்க, நான் மட்டும் சந்தோஷமாகக் கொட்டு முழக்குடன் கல்யாணத்துக்கு ஆயத்தப்பட வேண்டுமா? அக்கா, உன்னை அத்திம்பேர் என்றைக்கு வந்து அழைத்துக் கொள்ளப் போகிறார்? அப்பாவின் பாழாய்ப்போன இந்தப் பிடிவாதம் என்றைக்குத் தான் தளரப் போகிறதோ—" என்றாள் கமலா.

"கமலா, உன் கல்யாணம் கட்டாயம் நடக்கவேண்டியதல்லவா? நீயும் குடியும் குடித்தனமுமாக ஆகிவிட்டால் நான் எவ்வளவோ பெருமிதப்படுவேன். ஆனால் உன் கல்யாணம் பற்றி எதையும் தத்துப் பித்தென்று உளறிக் கொட்டாதே. என் எதிர்காலம், அது பகவானுக்கல்லவா புரிந்திருக்கும்? நான் வாழாவெட்டியாக இருக்க வேண்டுமென்றிருக்கையில் அப்பாவின் பிடிவாதம் எங்கே தளரப் போகிறது" என்றாள்.

'கமலா' என்று உள்ளிருந்து கிருஷ்ணசாமி அதட்டவே தயங்கிக் கொண்டு கமலா ஓடி விட்டாள். லலிதாவுக்குக் கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது. அவள் 'வாழா வெட்டியாகப் புக்ககத்தை விட்டுப் பிறந்தகத்தில் சரண் பட்டிருப்பதற்கு ஏதுவாயிருந்த அச்சம்பவம் அவளது மனத்திரையில் நிழல் போல ஆடியது.

*　　*　　*

கிருஷ்ணசாமி அய்யர், மூத்த பெண் லலிதாவைத் திருச்சியில் கொடுத்திருந்தார். மாப்பிள்ளைக்கு 'எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்'சில் 'ஸ்டெனோகிராபர்' உத்தியோகம். இரண்டாவது பெண்ணிற்குத்தான் அன்று வரன் நிச்சயித்து வந்திருந்தார். அந்தக் கிராமத்துக்கு அய்யர் கிராம முன்சீப். பதவியும் பூர்வீக சொத்தும் அவரை ஒரு 'பெரிய' புள்ளியாக்கி விட்டிருந்தது.

தெளிந்த நீரோடையில் சிறுகல் விழுந்தாலும் தண்ணீர் சலனமடைந்து விடுவது சகஜம். அதேபோலத் தான் லலிதாவுக்கு மணமான ஆறுவது மாதம் அச்சம்பவம் நடந்தது.

திருச்சியில் புக்ககத்திற்கு வந்ததிலிருந்து லலிதாவுக்கு எவ்வளவோ சந்தோஷமாகத்தானிருந்தது; கண் நிறைந்த கணவருடன் நடத்திய வாழ்வு இன்பமயமானதாகத் தானிருந்தது. அவள் கணவன் பாலு, தன் தாய், தம்பி ராமு இவர்களையும் தன் குடும்பத்துடன் சேர்த்து சீர்வகிக்க வேண்டிய நிலையிலிருந்தான்.

ராமு, 'இண்டர்' பாஸ் செய்துவிட்டு, மேலே படிப்பதைப் பற்றித் தமையனின் அபிப்பிராயத்துக்காகக் காத்திருந்த நாளில் ராமுவிற்கு ஜுரம் கண்டது. சாதாரண ஜுரமாக விருந்தது 'டபிள் நிமோனியா'விற்குக் கொண்டு செல்லவே, தம்பியின் நிலையைக் கண்ட பாலுவிற்கு ஆத்திரமும் அழுகையும் பொங்கிப் பெருகியது. கையில் கொஞ்சநஞ்ச மிருந்த பணமும் டாக்டர் பீசுக்குச் செலவாயிற்று. இன்னும் குறைந்தது இருநூறு ரூபாய் வரை மருந்துக்கும் பீசுக்கும் ஆகும் என்று சொல்லக் கேட்டதும் பாலுவுக்கு மூளையே மரத்து விட்டது; அவ்வளவு பணத்துக்கு வழி ஏது என்று எண்ணிய அவன் ஒன்றும் புலப்படாது மலைத்து நின்றான். தெரிந்த நண்பர்களிடம் கடன்



கேட்டதற்கும் 'இல்லை' என்ற பதில் கிடைத்தது. வேறு எங்கு செல்வான்?

இரவு முழுதும் சாப்பிடக்கூட வினை யின்றிப் படுக்கையில் படுத்துப் புரண்டு கொண்டிருந்தான் பாலு. தன் புருஷனின் உள்ள நிலையை உணர்ந்து லலிதா தன் பெற்றோர் செய்து போட்டிருந்த கழுத்துச் சங்கிலியைக் கழற்றிக் கொடுத்து அதை விற்றுப் பணமாக்கச் சொன்னாள். வேறு வழி இல்லாது போகவே அவசரத்துக்குச் சங்கிலியை விற்று இருநூறு ரூபாய் ரொக்கமாக வைத்துக் கொண்டு செலவுசெய்தான்பாலு தம்பிக்காக. மாதா மாதம் கிடைக்கும் சம்பளத்தில் கொஞ்சம் கொஞ்சமாக மீத்துவைத்து, காதும் காதும் வைத்தாற்போல மீண்டும் அதேபோலச் சங்கிலியை லலிதாவுக்குச் செய்துபோட்டு விடலாம் என்று எண்ணியிருந்தான். ஆனால் எண்ணுவது போல எல்லாம் நடந்து விடுகிறதா, என்ன?

இரண்டு வாரம் சென்றது. தன் தம்பியின் உடல் நிலையில் குணம் காணப் பட்டதிலிருந்துதான் பாலுவிற்கு உயிர் மீண்டதுபோன்ற அமைதி உண்டாயிற்று.

அன்றைக் கென்று திருச்சிக்கு வந்த கிருஷ்ணசாமி அத்துடன் தம் மகளையும் பார்த்துப் போக வந்தார். அப்போது லலிதாவின் கழுத்தில் சங்கிலியைக் காணாமல் போகவே அவர் ருத்திர மூர்த்தி யானார். கடைசியில் விஷயத்தை விவரித்த மாப் பிள்ளை பாலுவின் பேச்சைச் சிறிதும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை ஐயர்.

"அப்பா! கண்கலங்க அவர் சொல்லும் வார்த்தைகள்கூடவா உங்கள் மனசை இளக வைக்க வில்லை. தம்பிக்கு உடம்பு முடிய வில்லை என்றதால்தானே சங்கிலியை விற்க நேர்ந்தது. அதுவும் நானே பலவந்தப்படுத்தி விற்கச் சொன்னேன். சமயத்துக்கு அவருக்கு உதவாத நான் இருப்பதில்தான் அர்த்தமென்ன இருக்கிறது" என்று லலிதா எவ்வளவோ மன்றாடினாள்.

"பாலு. புரிகிறது உங்கள் யோக்கியதை. முடிவாகச் சொல்லி விடுகிறேன். என்றைக்கு லலிதாவின் கழுத்தில் அந்தச் சங்கிலி வந்து சேருகிறதோ அன்றுதான் அவள் இந்த வீட்டு வாசற்படி மிதிப்பாள்; அதுவரை என் வீட்டில் இருக்க வேண்டியவளே........." என்று தீர்மானமாகச் சொல்லியதுடன், தன் மகளையும் அழைத்துச் சென்று விட்டார் அவர். இப்படிப்பட்ட பிளவை—மாற்றத்தைப் பாலு எங்ஙனம் எதிர்பார்த்திருப்பான்? ஆனால் தன் தந்தையின் கோபத்துக்குப் பயந்து கண்ணீர் வெள்ளத்துடன் புறப்பட்டுச் சென்ற மனைவி லலிதாவை அவன் குறைப்பட வழி ஏது? தன் புதல்வியின் தொடக்க வாழ்விலேயே இத்தகைய புயலைக் கிளப்பிவிட்டுச் செல்வதைப் பற்றி ஏனோ ஐயர் சற்றும் நினைத்துப் பார்க்கவில்லை!

கிராமத்துக்கு லலிதா வந்து விளையாட்டுப் போல மாதங்கள் சில ஓடிவிட்டன. ஊரில் பலர் பலவிதமாக லலிதாவைப் பற்றிப் பேசினார்கள். ஒவ்வொரு சொல்லும் அவளை ரம்பமாக அறுத்து வேதனையுறச் செய்யும்; அவள் கண்களினின்றும் கண்ணீர் மாலை மாலையாக வழியும். தன்னைத் தொட்டுத் தாலி கட்டிய பதியின் தொடர்பு அறுந்து சோக வடிவாக வீட்டில் அமர்ந்திருக்கும்படி தன் தலையில் பகவான் எழுதிவிட்டானே என எண்ணும் ஒவ்வொரு கணமும் அவளுக்கு எங்காகிலும் கண்காணாத இடத்துக்குப் போய் உயிரை விட்டு விடலாமா என்றுகூடத்

தோன்றும். அதே சமயம் பெற்ற பெண் என்றுகூடப் பாராமல் தன்னை நாயகனிடமிருந்து பிரித்து வீணே விற்றிருக்கிறாரே அப்பா என நினைக்கையில் லலிதாவுக்கு ஆத்திரம் தந்தையால் மூண்டெழும். ஆக அவளைப் பொறுத்தவரை வாழ்க்கை சாரமற்றுப் போயிருந்தது.

அன்றுவரை கணவர் வந்து அழைத்துப் போகவேண்டுமே என்று அம்பிகையைப் பிரார்த்தித்துக் கொண்ட நாட்களுக்குக் கணக்கில்லை; ரகசியமாகக் கணவருக்குப் பல கடிதங்களும் எழுதினாள். ஆனால் ஒன்றுக்கேனும் பதில் வராதது கண்டு, அவளிடம் குடிகொண்டிருந்த கொஞ்ச நஞ்ச ஆசையும் நிராசையாகி விட்டது.

* * *

கமலாவின் கல்யாண நிமித்தம் கிருஷ்ணசாமி ஐயர் நின்றும் நிற்காமலும் பம்பரமாகச் சுழன்று ஆகவேண்டியவற்றைக் கவனித்து வந்தார்.


செம்மண் பூசி, வெள்ளை யடித்து வீடு கோலாகலமாகத் திகழ்ந்தது. திருவையாற்றிலிருந்து மாப்பிள்ளை வீட்டார்கள் வந்து 'பெண் பார்த்து'ப் போய் விட்டார்கள். 'பெண் பிடித்துவிட்டது' என்று போனதும் தபால் போட்டு விட்டார்கள். ஆக, கல்யாண முஸ்தீபுகள் படிப்படியாக முன்னேறிக் கொண்டிருந்தன.

கல்யாணச் சந்தடியில் முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டிருந்தால் அச்சானியமாக இருக்குமே என்று லலிதா ஒப்புக்குப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

ஆனால் மாப்பிள்ளை வந்து தன்னைப் பார்த்துவிட்டுச் சென்றதிலிருந்து ஏனோ ஒருவிதமாகச் சோம்பிப் போய் காணப்பட்ட கமலாவைக் காண லலிதாவுக்கு ஏதும் புரியவில்லை. புரியாத புதிராகத் தோன்றிய தங்கையின் நிலையைக் குறித்து இதயம் குமுறி நின்றாள் தமக்கை.

ஆனால் அவளது மன மாற்றத்துக்குக் காரணம் எதுவும் லலிதாவால் கற்பிக்க முடியவில்லை. ஒருக்கால் மாப்பிள்ளையைக் கமலாவுக்குப் பிடிக்கவில்லையோ? என்ன வேடிக்கை இது? மாப்பிள்ளை மன்மதன் போலிருந்தாரே! பின்......?

லலிதா தங்கையின் அறைக்குள் நுழைந்த தருணத்தில், அங்கே கமலம் ஏதோ படமும் கையுமாக வீற்றிருந்ததைக் கண்டவுடன் கூர்ந்து பார்த்தாள். பார்த்ததும் அவள் பிரமை தட்டி நின்று விட்டாள். அவள் கையிலிருந்த புகைப் படம் தன் மைத்துனர்—கணவரின் தம்பி—ராமுவினுடையதாக இருந்ததில் அவளுக்கு ஆச்சரியமாகப் போய் விட்டது. என்ன விளையாட்டு இது?



"ஏண்டி! மாட்டுக்கு வைக்கோல் போட்டு ரொம்ப நாழிகை ஆகிறதோ?"

"கமலா!" என்று கூப்பிட்டாள் லலிதா.

அவள் திரும்பினாள். அவளது விழிகளின் விளிம்பில் நீர்ப்படலம் வேலி கட்டியிருந்தது.

"அக்கா!"

"கமலி, ராமுவின் படம் இங்கே எப்படி வந்தது? நாளை கல்யாணமாக வேண்டிய நீ சம்பந்தமில்லாதவருடைய படத்தை இப்படி வைத்துக்கொண்டிருப்பதை யாராகிலும் கண்டு விட்டால் என்னதான் நினைக்க மாட்டார்கள்?"

"அக்கா, ராமு என் காதலர்; அவரை நான் நேசிக்கிறேன். என் கையிலிருக்கும் அவர் உருவம் என் உள்ளம் முழுதிலுமல்லவா நிறைந்திருக்கிறது. அக்கா, முன்பெல்லாம் அத்திம்பேர் சொல்வாரல்லவா-ராமுவிற்குத் தான் என்னைக் கொடுக்க வேண்டுமென்று. விளையாட்டாகச் சொன்ன வார்த்தைகளா அவை? அக்கா இந்த என்னுடைய முதல் காதல் தான் வெற்றி பெறவேண்டும்..."

கமலாவின் வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் லலிதாவுக்கு அதிசயமாக விருந்தது. ஆனால் எல்லாக் காரியங்களும் நடந்தேறிய சமயத்தில் தன் சகோதரியின் மனமாற்றம் அவளைப் பெரும் சங்கடத்தில் அமிழ்த்தியது. ராமுவை அவள் நேசிப்பதை முன்னமேயே சொல்லியிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்!

* * *

கல்யாணத்திற்கு இன்னும் இரண்டே நாட்கள்தான் இருந்தன. அப்பொழுது 'லலிதா அம்மா' என்ற குரல் கேட்டு வெளியே வந்து பார்த்தாள் லலிதா. வாசலில் தபால்காரன் நின்றான். "அம்மா, உங்களுக்கு ரிஜிஸ்தர் பார்சல் ஒன்று வந்திருக்கு..." என்று சொல்லி பார்சலை நீட்டினான் தபால்காரன்.

அவசரம் அவசரமாகப் பிரித்துப் பார்த்த லலிதாவுக்குத் தன் கண்களையே நம்பக்கூடவில்லை. பொட்டலத்தில் அழகான தங்கச் சங்கிலி ஒன்று காணப்பட்டது. அதைத் தன் கணவர் அனுப்பியிருக்கிறார் என்று அறிந்ததும், அவளுக்குச் சொல்லி முடியாத சந்தோஷம் ஏற்பட்டது.

'அனுப்பு'தலிலிருந்த தன் பதியின் விலாசத்தைத் திரும்பத் திரும்பப் பார்த்த அவளுக்கு ஆனந்தம் மிகுந்தது. ஆனால் சங்கிலியை அனுப்புவதற்குள் 'அவர்' எவ்வளவு சிரமப்பட்டிருப்பார் என்று சிந்தித்த அவளுக்குக் கண்கள் கலங்க ஆரம்பித்தன.

'இனியேனும் அப்பா என்னை அவரிடம் அனுப்பத் தடை சொல்லமாட்டாரே'—என்று எண்ணிப் பார்த்த லலிதா ஒரு கணம் மெய்மறந்தாள்.

ஓடிப் போய்த் தந்தையிடம் சேதியைச் சொல்லிச் சங்கிலியைக் காண்பித்தாள்.

"லலி, மாப்பிள்ளை கெட்டிக்காரர் என்று எனக்கு எப்போதுமே நம்பிக்கை உண்டு" என்றார் கிருஷ்ணசாமி ஐயர்.

"நம் கமலி கல்யாணத்துக்கு அவரை வரச் சொல்லி......" என்று ஆரம்பித்தாள் லலிதா.

"கடிதம் எழுதப் போவதில்லை. தந்தி கொடுக்கப்போகிறேன். திருப்தி தானே?"

அதே நிமிஷத்தில் 'தந்தி' என்று குரல் வாசலில் கேட்டது.

கையெழுத்திட்டு ஐயர் தந்தியைப் பிரித்தார். அதிலிருந்த செய்தியைப் படித்ததும் அவருக்கு உலகமே சுழன்றது.

"திருவையாறிலிருந்து சம்பந்தி விட்டார் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு நம்முடன் சம்பந்தம் செய்து கொள்ள இஷ்டமில்லையாம்..." என்றார் ஐயர் நா தழுதழுக்க.

அவருக்கு ஒருவிதத்திலும் இருப்புக் கொள்ளவில்லை. திடுதிடுப்பென்று அங்கிருந்து இப்படித் தந்தி வந்திருக்கும் மாயம் அவருக்குப் பிடிபடவில்லை. அடித்து வைத்த சிலையாகத் திண்ணையில் அமர்ந்து விட்டார். ஒரு வேளை மூத்த மாப்பிள்ளையுடன் தான் சண்டையிட்ட சமாசாரம் அங்கேயும் தெரிந்து விட்டிருக்குமோ என்று கூட எண்ணி மனம் நொந்தார்.

விஷயமறிந்த லலிதா அடைந்த துயரம் சொல்லிமுடியாது. ஆனால் கல்யாணப் பெண் கமலாவின் முகத்தில் அப்போது சந்தோஷம் நிலவியது.

"அக்கா, நான் நினைத்தபடி நடந்து விட்டது. இதே மாதிரி நான் எண்ணியிருக்கும் இன்னொன்றும் நடந்துவிட்டால்..." என்றாள் கமலா குதூகலத்துடன்.

"கமலா, நீ சொல்வது ஒன்றும் அர்த்தமாகவில்லையே !"

"அக்கா, நான் சொல்வது உன் மனசுக்குள்ளேயே இருக்கட்டும். திருவையாற்றிலிருந்து அவர்கள் இனி வரவே மாட்டார்கள். ஏனென்றால் எனக்கு மாப்பிள்ளையைப் பிடிக்கவில்லை என்பதாக நானே தந்தி கொடுத்து விட்டேன்."

"நிஜமாகவா ?"

"ஆம் ; அதற்குப் பதில்தான் இந்தத் தந்தி" என்றாள் கமலா.

"அப்படியென்றால் எல்லா ஏற்பாடுகளும் முடிந்து தயாராக இருக்கும் உன் கல்யாணம்..."

"நடக்குமானால் என் அன்பர் ராமுவுடன் தான் நடக்கும்......"

கமலா பேசி முடிப்பதற்குள் வாசலில் ஜட்கா ஒன்று வந்து நின்ற அரவம் கேட்டுத் திரும்பினார்கள் சகோதரிகள் இருவரும். அங்கு வண்டியிலிருந்து சகோதரர்கள் பாலு, ராமு இருவரும் இறங்கினார்கள். இந்த எதிர்பாராத காட்சியைக் கண்டதும் எல்லோருக்குமே வியப்பு மேலிட்டது.

திண்ணையிலிருந்த ஐயர் ஓடி வந்து, "மாப்பிள்ளை வாருங்கள். ராமு வா" என்று வரவேற்றார். அவரால் மேலே பேசமுடியாமல் திக்கித் திக்கி, "மாப்பிள்ளை, உங்களிடம் அன்று நான் மூர்க்கத்தனமாக நடந்து கொண்டதற்கு எனக்குத் தண்டனை கிடைத்து விட்டது. விடிந்தால் நடக்க வேண்டிய கமலாவின் திருமணம் நின்று விட்டது" என்றார்.

"நின்று விட்டதா ?" என்றான் பாலு ஆத்திரத்துடன்.

கிருஷ்ணசாமி ஐயர் நடந்ததையெல்லாம் சொன்னார்.

"மாமா, கவலைப் படாதீர்கள். எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. நம் ராமுவுக்குத்தான் கமலியைக் கொடுக்க வேண்டுமென்று நானும் லலியும் சொல்லுவோமே, ஞாபகமிருக்கிறதா ? உங்கள் சம்மதமிருப்பின் கமலியை ராமுவிற்கே கொடுத்து விடலாம்...மேலும் லலி எழுதிய கடிதத்துக்கு இன்று புறப்பட்டேன், அத்துடன் உங்கள் மனதைச் சாந்திபண்ண லலிக்குத் தங்கச் சங்கிலியும் கொண்டு வந்திருக்கிறேன்......" என்றான் பாலு.

"மாப்பிள்ளை, காலையில்தானே நீங்கள் தபாலில் அனுப்பிய சங்கிலி கிடைத்தது. அதற்குள் வேறொரு சங்கிலி எதற்காம்......" என்று இடைமறித்தார் ஐயர்.

"தபாலில் நான் சங்கிலி அனுப்பினேனா ?" என்றான் பாலு ஆச்சரியத்துடன்.

"அண்ணா, நான்தான் மன்னியின் பெயருக்கு உங்கள் விலாசமிட்டுச் சங்கிலியை அனுப்பி வைத்தேன். மாதந்தோறும் என் சம்பளத்தில் கொஞ்சம் கொஞ்சமாகச் சேமித்து மன்னிக்குச் சங்கிலி வாங்கி அனுப்பினேன். நீங்கள் என் பொருட்டல்லவா மன்னியின் சங்கிலியை விற்க நேர்ந்தது. அதன் விளைவாகத்தான் மன்னியின் பிரிவும் சம்பவித்தது. என் நிமித்தம் நீங்கள் அடைந்த துயருக்கு அளவேது ? என்னால் இயன்ற இச்சிறு காணிக்கையை மன்னிக்குச் சமர்ப்பித்து ஏதோ ஓரளவு ஆறுதல் பெற்றேன். உங்களுக்கு இது பற்றிப் பின்னால் எழுதலாமென்றிருந்தேன். அதற்குள் நீங்களும் வேறு சங்கிலியுடன் வந்துவிட்டிருக்கிறீர்கள்......" என்று சொன்னான் ராமு.

"ராமு, உன் அன்பும் பாசமும் மகத்தானது. நான் கொண்டு வந்திருக்கும் சங்கிலி லலிதாவுக்கு இருக்கட்டும். நீ அனுப்பிய சங்கிலியை உன் காதற்பரிசாக கமலா அணிந்து கொள்ளட்டும். இதுவே சரியான ஏற்பாடு......" என்று சொல்லிப் புன்னகை பூத்தான் பாலு.



வீட்டு எஜமானி :—என்னப்பா, விசைக்கல்லை ஒரு தட்டில் மட்டும் வைத்து விட்டு இன்னொரு தட்டில் ஒன்றும் வைக்காமல் தராசைத் தூக்குகிறாயே ?

கறிகாய்க் கடைக்காரன் :—நீங்கள் கேட்ட விலைக்கு இரண்டு தட்டிலேயும் வைத்தால் இந்தக் காலத்தில் கட்டுமா, அம்மா !



(சென்ற வாரத் தொடர்ச்சி)

ஆசிரியர் 'சுயராஜ்யா' பத்திரிகையின் இதழை தம் மேஜையின்மீது பிரித்து வைத்துக் கொண்டு, "தலையங்கம் ரொம்ப நன்றாகத் தான் இருக்கிறது. ஆனால் சில விஷயங்கள் காரசாரமாக - ஆட்சேபகரமாக இருக்கின்றன. சர்க்கார் விரும்பினால் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்" என்றார்.

"நடவடிக்கைதானே! எடுத்துக் கொள்ளட்டுமே! அதற்கு நான் கொஞ்சங்கூடப் பயப்படவில்லை. இதற்காகச் சிறை போக நேர்ந்தாலும் நான் தயார்!" என்றான் மூர்த்தி.

"இது சம்பந்தமாக நீங்கள் சிறைக்குப் போகவேண்டிய அவசியம் நேராது. நான் தான் போகவேண்டி யிருக்கும்" என்றார் ஆசிரியர் சிரித்துக் கொண்டே.

"ஏன்?"—முகத்தில் வியப்புக் குறி படரக் கேட்டான் மூர்த்தி.

"நான்தானே இந்தப் பத்திரிகைக்கு ஆசிரியர், சொந்தக்காரர், வெளியிடுபவர், எல்லாம்."

"ஆனால் கட்டுரை எழுதினது நான் அல்லவா!"

"அதனால் என்ன! அதில் உங்கள் பெயர் இல்லையே! அதற்கு நான்தானே பொறுப்பாளி!"

மூர்த்தி தலையைக் குனிந்து கொண்டு வருத்தப்படுபவனைப் போலக் காட்டிக்கொண்டான்.

ஆசிரியர் மூர்த்தியை உற்சாகப் படுத்தும் நோக்கத்துடன், "இதற்காகக் கவலைப்படாதீர்கள். வருவதை ஏற்றுக்கொள்ள நான் தயார்!" என்றார்.

மூர்த்தி வருத்தத்துடன், "என்னுடைய இந்தத் தலையங்கத்தினால் உங்களுக்கு ஏதாவது கெடுதி சம்பவித்தால் எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கும்!" என்றான்.

"இதற்காக வருத்தப்படுவானேன்! இரண்டொரு வருஷங்கள் நான் சிறை செல்ல வேண்டி வரலாம். அவ்வளவு தானே! போய் வந்துவிட்டால் போயிற்று! உரலில் தலையைக் கொடுத்தபின் உலக்கைக்குப் பயந்துகட்டுமா!"

"ஸார், என்னைக் காட்டிக் கொடுத்து விடுங்கள். நான்தான் எழுதினேன் என்பதை ஒப்புக்கொண்டு விடுகிறேன்!"

"அது எப்படி! எப்படியும் நான் தப்ப முடியாது. அப்படியே தப்ப முடிந்தாலும் எனக்கு அது பிடிக்காது. சிறந்த நோக்கம் உள்ள ஆசிரியர் என்றால் இப்படி யெல்லாம் செய்யவும் கூடாது."

"என்னாலே உங்களுக்கு......"

"உங்களாலே ஒன்றுமில்லை. நடந்ததெல்லாம் நல்லதற்குத்தான்" என்றார் ஆசிரியர்.

மேலுக்கு ஆசிரியர் அம்மாதிரி சொல்லி விட்டாரே ஒழிய, அவருக்கு உள்ளூற மூர்த்தியின் அந்தச் செய்கை பிடிக்கவில்லைதான். இருந்தாலும் மூர்த்தி தம்மைப் பயந்தாங்கொள்ளி என்று எண்ணிவிடக் கூடாதே என்பதற்காகத்தான் அவர் அப்படிச் சொன்னார்.

இதே சமயம், "என்ன! நேற்றுப் பத்திரிகையிலே வெளுத்து வாங்கி விட்டீர்களே!" என்று கூறிக்கொண்டே ஆசிரியரின் நண்பர் ஒருவர் உள்ளே நுழைந்தார்.

"உங்களுக்குத் தலையங்கம் பிடித்திருந்ததா!" என்று ஆசிரியர் முகத்தில் மலர்ச்சியை வரவழைத்துக் கொண்டு கேட்டார்.

நண்பர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, "பிடித்திருக்கிறதா என்று கேட்கிறீர்களே! ஏ, ஒன்! பிரமாதம் போங்கள்! நேற்று உங்கள் பத்திரிகை இரண்டு மடங்கு விலைக் கல்லவா விற்றிருக்கிறது!" என்றார்.

ஆசிரியரின் மனவருத்தம் மாயமாய் மறைந்து விட்டது. சந்தோஷத்துடன், "அப்படியா!" என்று கேட்டு வாயைப் பிளந்தார்.

"என்ன சொல்வது போங்கள்! நானே இரண்டு மூன்று தடவை தலையங்கத்தைப் படித்து விட்டேன். நேற்றுத் தலையங்கம் பலே ஜோர்!"

"நேற்றைய தலையங்கம் நம் மூர்த்தி எழுதியதாக்கும்!" என்றார் ஆசிரியர். அதைக் கூறும்பொழுது அவருக்கு உள்ளூற வருத்தந்தான். இருந்தாலும் அவர் அவ்வளவு குறுகிய நோக்கம் படைத்தவர் அல்ல, பிறர் கீர்த்தியைத் தாமே பிடுங்கிக் கொள்வதற்கு!

நண்பர் ஒரு தடவை மூர்த்தியைப் பார்த்து விட்டு, "அப்படியா! மூர்த்தி சிறியதா யிருந்தாலும் கீர்த்தி பெரிதாகி விடும்போலிருக்கிறதே!" என்றார்.

மூர்த்தி பல்லைக் காட்டிக்கொண்டு, "இல்லை, ஸார்! எல்லாம் ஆசிரியருடைய கிருபைதான்!" என்றான்.

"ஆமாம், ஆமாம். இவருக்குச் சமமான ஆசிரியர் இந்த இந்தியாவிலேயே கிடையாது!" என்று ஆமோதித்தார் ஆசிரியரின் நண்பர்.

"அட! நமக்கும் இந்தக் கீர்த்தியில் பங்கு உண்டு போலிருக்கிறதே!" என்று ஆசிரியர் மனத்துள் மகிழ்ச்சி கொண்டார். கொஞ்சநஞ்சம் இருந்த குறுகிய நோக்கமும் அவரைவிட்டு அந்தக் கணமே அகன்றுவிட்டது. "படிப்பவனுக்கும் ஒரு தகுதி வேண்டும். மூர்த்தியிடம்

அபார யோக்யதை இருக்கிறது. அதைக் கொண்டு அவர் வெகு சீக்கிரமே மூன்றுக்கு வந்துவிடலாம். எத்தனையோ பேர் வருஷக் கணக்காக வேலையிலிருந்தும் சரியாக ஒரு வாக்கியம் கூட எழுதத் தெரியாமல் இருக்கிறார்கள். மூர்த்தியைப் போல் விஷயங்களைக் கிரஹிக்கும் சக்தி அமைவது துர்லபம்'' என்றார்.

''வாஸ்தவம்! குருவுக்கேற்ற சிஷ்யனை இருந்தால் தானே குருவுக்கும் கௌரவம்; சிஷ்யனுக்கும் பெருமை!'' என்றார் நண்பர்.

✱

மேற்கூறிய சம்பவம் நடந்து கிட்டத்தட்ட இரண்டு மாதங்களாகி விட்டன. மூர்த்தி எழுதிய தலையங்கம் ஜனங்களிடையே எழெட்டு நாட்கள் வரை பெரும் பரபரப்பை உண்டு பண்ணிவிட்டது. அப்புறம் ஜனங்கள் அதைச் சிறிது சிறிதாக மறக்கலாயினர்.

திடீரென்று ஒரு நாள் காலை யாரும் எதிர் பாராத வகையில் ஆசிரியரின் வீட்டையும் ஆபீஸையும் போலீஸ் சூழ்ந்து கொண்டது. ஆசிரியர் அந்தக் கணமே கைது செய்யப்பட்டார். அரசாங்கத்துக்கு விரோதமாகப் பத்திரிகையில் தலையங்கம் எழுதினார் என்று அவர் மேல் குற்றம் சாட்டப்பட்டது.

அன்றைக்கே ஆசிரியர் ஜாமீனில் விடுதலை பெற்று வந்தார். விசாரணை நடந்தது. தீர்ப்புக் கூற நான்கு நாட்கள் இருக்கும்பொழுது ஒரு நாள் ஆசிரியர் மூர்த்தியைக் கூப்பிட்டு, ''மூர்த்தி! நான் சிறைக்குப் போகவேண்டிய காலம் நெருங்கி விட்டது!'' என்றார்.

மூர்த்தி பதற்றத்தோடு, ''என்ன! நீங்கள் கட்டாயம் சிறைக்குப் போகத்தான் வேண்டி வருமா?'' என்று கேட்டான்.

''ஆமாம்!'' என்றார் ஆசிரியர்.

''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''இது தெரிந்த விஷயம் தானே! இன்னொருவர் சொல்லியா தெரிய வேண்டும்!—ஒரு விஷயம் உங்களிடம் சொல்ல வேண்டும். நான் சிறையில் இருக்கும் காலத்தில் நீங்கள்தான் எனக்குப் பதிலாகப் பொறுப்பு ஏற்றுப் பத்திரிகையை நடத்தி வரவேண்டும்'' என்றார் ஆசிரியர்.

''என்ன! நானா!''

''ஆமாம். நீங்கள்தான் நடத்த வேண்டும். என் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் உங்களைத் தவிர வேறு யாரும் இல்லை. ஆகவே......''

மூர்த்தி அப்படியே சிலையாகச் சமைந்து நின்றபடி ஆசிரியரின் முகத்தைப் பார்த்தான்.

ஆசிரியர் மேலும் தொடர்ந்தார்:—குறைந்தது இரண்டு வருஷ காலம் சிறைத் தண்டனை கிடைக்குமோ என்று எண்ணுகிறேன். அந்த இரண்டு வருஷ காலமும் பத்திரிகையை நீங்கள் தான் நடத்த வேண்டும். உங்களுக்கு உதவிக்கு வேறு யாராவது வேண்டுமென்றாலும் உங்களுக்கு இஷ்டமானவர்களைப் போட்டுக் கொள்ளுங்கள். இன்னொரு விஷயம். குறைந்தது நான் சிறையிலிருந்து வெளிவரும் வரையிலாவது ஆட்சேபகரமான தலையங்கங்கள் எழுதாதீர்கள். அப்படி நீங்களும் எழுதிச் சிறைக்குப் போய் விட்டால் அப்புறம் பத்திரிகை புதைந்துவிடும். என் குடும்பத்தைக் கவனித்துக் கொள்ள என் பந்து ஒருவர் வந்து விடுவார். நான் கடிதம் எழுதியிருக்கிறேன். இருந்தாலும் நீங்களும் கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்டுக் கொஞ்சம் கவனித்துக் கொள்ளுங்கள்!''

மூர்த்தி பதிலே பேசாமல் அவர் முகத்தையே பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தான்.

''பேசாமல் உட்கார்ந்திருக்கிறீர்களே! உங்களால் முடியும் முடியாது என்று சொல்லக் கூடாதா?'' என்று கேட்டார் ஆசிரியர்.


''இல்லை. என்னால் தானே உங்களுக்கு இவ்வளவு சிரமம்! இதை நினைக்கும் பொழுது என் மனத்தை என்னவோ செய்கிறது. அது தான்......'' என்று இழுத்தான் மூர்த்தி.

''அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாதீர்கள்! இந்தப் பத்திரிகைத் தொழிலே இப்படித்தான். நித்ய கண்டம் பூர்ணாயுசு அடிமை நாட்டில் தேசியப் பத்திரிகை நடத்துவதென்றால் சிறைக்குப் பயந்து முடியுமா! உங்கள் மேல் ஒரு விதமான தவறும் இல்லை. உங்கள் கட்டுரையினால் பத்திரிகைக்கு நல்ல செல்வாக்கு ஏற்பட்டதோடு மட்டும் அல்ல; நல்ல லாபமும் கிடைத்திருக்கிறது. சந்தாதாரர்களும் ஒன்றுக்கு இருமடங்காகி விட்டார்கள்'' என்றார் ஆசிரியர்.

''என்ன இருந்தாலும் நீங்கள் சிறை செல்ல வேண்டி நேர்ந்து விட்டதை நினைத்தால் வருத்தமாகத்தான் இருக்கிறது!''

''நீங்கள் இப்படியெல்லாம் வருத்தப்படுவது சிறிதும் நன்றாயில்லை. சுதந்திரத்துக்காக





கர வருஷம் ஆனி மீ 10வ. மேலப்பாவூர் ஸ்ரீ வேணுகோபால ஸ்வாமிக்கு மஹா கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றது. ஏராளமான பக்தகோடிகள் கும்பாபிஷேக வைபவத்துக்குக் கூடியிருந்தனர். கும்பாபிஷேகத்தை ஒட்டி ஸ்ரீ ஆலத்தூர் சகோதரர்களின் சங்கீதக் கச்சேரியும் நடைபெற்றது.

வேண்டிச் சிறை செல்வதுதானே நம் தொழில்! நாளைக்கே உங்கள் பெயருக்குப் பதிப்பாசிரியராக 'டிக்ளரேஷன்' வாங்கித் தந்து விடுகிறேன். அப்புறம்தான் நான் நிம்மதியாகச் சிறைக்குச் செல்லமுடியும்!'' என்றார் ஆசிரியர்.

அதைக் கேட்ட பொழுது மூர்த்தியின் இருதயம் புழுவாய்த் துடித்தது.

★

அன்றைக்கே அவன் இன்ஸ்பெக்டரைச் சந்தித்துத் தனக்கும் ஆசிரியருக்கும் நடந்த சம்பாஷணையைச் சொன்னான்.

அவன் சொன்னதைக் கேட்ட இன்ஸ்பெக்டர், ''இந்தச் சங்கடங்களையெல்லாம் இழுத்து விட்டுக் கொள்ளாதீர்கள். அப்புறம் ஸி.ஐ.டி. இலாக்காவிலிருந்து நீக்கப்பட்டு விடுவீர்கள்'' என்று எச்சரித்தார்.

''நான் ஒப்புக் கொள்ளா விட்டால் பத்திரிகை நின்றுவிடுமே!''

''நல்லதாயிற்று, பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போல! நாம் விரும்புவதும் அது தானே!''

''ஆசிரியர் நாளைக்கு என் பெயருக்கு 'டிக்ளரேஷன்' வாங்கித் தர ஏற்பாடு செய்வதாயிருக்கிறாரே!''

''முடியாது என்று சொல்லி விடுங்கள். அது தான் நல்லது.''

''நான் இருக்கும் நிலைமையில் அம்மாதிரி சொல்லுவது இயலாத காரியமாயிற்றே!''

''நிலைமை கிடக்கட்டும், ஸார்! நான் ஒப்புக் கொள்வதற்கில்லை என்று ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி எப்படியாவது தட்டிக் கழித்து விடுங்கள்!''

''பார்க்கிறேன்!''

''பார்க்கிறேனாவது! நான் சொல்கிறபடி செய்ய வேண்டும். இந்த வழவழா கொழ கொழாப் பேச்செல்லாம் எனக்குக் கொஞ்சங் கூடப் பிடிக்காது. புரிந்ததா!'' என்றார் இன்ஸ்பெக்டர் மிகவும் காரமான குரலில்.

மூர்த்திக்கு இன்ஸ்பெக்டரின் அந்த அதிகார தோரணை பிடிக்க வில்லை. ''எதையும் யோசித்துத்தான் செய்ய வேண்டும். நான் மறுத்தால் ஜனங்கள் என்ன சொல்லுவார்கள்! ஆசிரியர் என்ன நினைப்பார்! இதை யெல்லாம் யோசிக்க வேண்டாமா!'' என்றான்.

''இதைப் பற்றி யெல்லாம் யோசித்து ஒரு முடிவுக்கு வராமல் உம்மை யார் அப்படிக் கார சாரமாகக் கட்டுரை எழுதச் சொன்னது! எதற்காக ஐயா, அப்பாவி ஆசிரியரை மாட்டி வைத்தீர்!'' என்று இன்ஸ்பெக்டர் எகத்தாளமாகக் கேட்டார்.

மூர்த்திக்கு என்ன பதில் சொல்லுவதென்றே புரியவில்லை.

''நான் சொல்லுவதைக் கேளும். அப்பொழுதுதான் நீர் முன்னேற முடியும்!'' என்றார் இன்ஸ்பெக்டர்.

மூர்த்தி ஏதோ யோசித்துக் கொண்டே, ''சரி, அப்படியே செய்கிறேன்'' என்றான்.

இன்ஸ்பெக்டரிடம் விடைபெற்றுச் சென்ற மூர்த்திக்கு அன்று இரவு தூக்கமே வரவில்லை. படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தான். அவன் மூளையைச் சிந்தனை போட்டு வாட்டியது. ஒருபுறம் ஆசிரியரின் நல்ல மனமும், நம்பிக்கையும், அன்பும் நின்றன. இன்னொரு புறம் இன்ஸ்பெக்டரின் குரூர சுபாவமும், கல்நெஞ்சமும், சுயநலமும் நின்றன. ஆசிரியர் - இன்ஸ்பெக்டர் இவ்விருவரில் யார் நல்லவர்! ஆசிரியரோ அவனிடம் பரிபூரண நம்பிக்கை வைத்திருந்தார். ஆட்சேபகரமான கட்டுரை எழுதி அவருக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்த அவனை நம்பித் தம் பத்திரிகையையே அவர் ஒப்படைத்து விட்டுப் போகத் தயாராயிருந்தார். ஆனால் இன்ஸ்பெக்டரோ...! அவருக்குத் தன் காரியம் தான் குறி. தன் சுயநலத்தைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக அவர் எதுவும் செய்யத் தயாராயிருந்தார். அதட்டி உருட்டி அதிகாரத்தைச் செலுத்தித் தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ளப் பார்ப்பதுதான் அவர் வேலை. சின்னஞ்சிறு பிழை நேர்ந்தாலும் அவர் தயவு தாட்சண்யம் பார்க்க மாட்டார். அப்படிப்பட்ட இன்ஸ்பெக்டர் தேவலையா, அல்லது அவன் மேல் பரிபூரண நம்பிக்கை வைத்திருந்த ஆசிரியர் தேவலையா! — இந்த யோசனையில் இரவு கழிந்து விட்டது.

★

மறு நாள் பொழுது விடிந்ததும், ஆசிரியர், ''இன்று 'டிக்ளரேஷ'னுக்கு எழுதி அனுப்பி விடலாம் அல்லவா!'' என்று மூர்த்தியைப் பார்த்துக் கேட்டார்.

"தாராளமாக எழுதி விடலாம்!" என்று தன் சம்மதத்தைத் தெரிவித்தான் மூர்த்தி.

அன்றைக்கே 'டிக்ளரேஷன்' பைல் செய்யப்பட்டது. டிக்ளரேஷன் ஆன மூன்றாவது நாளே, ஆசிரியர் ஒன்றரை வருஷம் சிறைத் தண்டனை அநுபவிக்க வேண்டும் என்றும் இருநூறு ரூபாய் அபராதம் செலுத்தவேண்டும் என்றும் தீர்ப்பாகிவிட்டது.

ஆசிரியர் சிறைக்குப் போன இரண்டு தினங்களுக்கெல்லாம் மூர்த்தியை இன்ஸ்பெக்டர் வழியில் சந்தித்தார்.

"மூர்த்தியா! என்ன சேதி, சார்! சௌக்கியந்தானே! ஒரே அடியாக ஆள் உருமாறி விட்டீர்களே!" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"மனிதன் இன்றைக்கு இருப்பது போல் என்றைக்குமே இருக்கிறானா! மாறுவதுதானே மனிதனின் சுபாவம்!"

"அப்படியா! பெரிய தத்துவத்தைக் கண்டு பிடித்துச் சொல்கிறீர்களே!"

"இதில் என்ன தத்துவத்தைக் கண்டு விட்டீர்கள்!"

"இல்லை. நீங்கள் நேற்றைக்கு இருந்த இருப்பு என்ன! இன்றைக்கு இருக்கும் இருப்பு என்ன! அதற்குள் தேச பக்தி தலைக்கேறி விட்டதே!" என்று ஏளனம் தொனிக்கும் குரலில் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"தேசபக்தி கொள்ளுவது ஒரு குற்றமா! நாட்டின் நலனுக்குப் பாடு படாமல் நம்மைப் போல் பிறருக்கு அடிமை செய்வதால்தான் நம் நாடு இன்னும் அன்னியரின் ஆட்சியின் கீழ் இருக்கிறது!"

"ஏது, ஏது! நீங்கள் நாட்டுக்காகப் பாடு பட்டுத் தேசத்துக்கு விடுதலை வாங்கிக் கொடுத்து விட்டுத்தான் மறு காரியம் பார்ப்பீர்கள் போலிருக்கிறதே!"

"ஆமாம், நாட்டுக்காக என்னால் ஆனதைச் செய்வதென்று கங்கணம் கட்டிக்கொண்டு விட்டேன். ஆகவே, அவரவர் கவலை அவரவருக்கு ஏற்படுவது இயல்புதானே!"

"ஆமாம், ஆமாம்! அவரவர் கவலை அவரவருக்கு ஏற்படுவது இயல்புதான். அதேபோல என் கவலை எனக்கு ஏற்படுவதில் தவறில்லையல்லவா! நீங்களும் சிறைக் கம்பியை எண்ண வேண்டிய காலம் நெருங்கி விட்டதே என்பதை நினைக்கும் பொழுதுதான் எனக்கு மிகவும் கவலையாயிருக்கிறது!" என்றார் இன்ஸ்பெக்டர்.

"அதற்கு நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்! அந்தக் கவலை எனக்கல்லவா! அதற்கு நான் எப்பொழுதுமே தயார். ஆனால் ஒன்று. என் ஆசிரியர் மட்டும் சிறையிலிருந்து வெளியே வந்துவிட வேண்டும்!"

"அப்படியா!"—இன்ஸ்பெக்டர் ஆச்சரியத்துடன் கேட்டார்.

"உங்களுக்குச் சந்தேகமாயிருக்கிறதோ! உங்கள் பேச்சைக் கேட்டு நான் செய்த பாவம் சாதாரணமானதல்லவே! அந்தப் பாவத்துக்குப் பிராயச்சித்தமாக நான் எத்தனை தடவை சிறைக்குப் போனாலும் போதாது."

"அப்படியா! சிறைக்குப் போவதற்கு என்ன செய்வதாக உத்தேசித்திருக்கிறீர்கள்!"

"ஒன்றுமில்லை, ஆசிரியரை மாட்டிவைக்கக் கட்டுரை எழுதினேனே, அதைப் போலப் பன்மடங்கு காரசாரமாகக் கட்டுரை எழுதினால் உங்களைப் போன்ற புண்யவான்கள் சிறையில் போட இருக்கவே இருக்கிறீர்கள். ஆனால் இப்பொழுதே நாக்கைத் நீட்டிக்கொண்டு உட்கார்ந்திரா நீர்கள். ஆசிரியர் சிறையிலிருந்து விடுதலை பெற்று வருவதற்கு இரண்டு மாதத்துக்கு முன்னால்தான் அம்மாதிரிக் கட்டுரை எழுதுவதாக உத்தேசித்திருக்கிறேன்!"

"எங்கள் காரியத்தைச் சரியாகக் கவனித்து வந்தால் இந்தக் கவலையெல்லாம் இல்லாமல் 'ஜாலியாக' இருக்கலாமோ இல்லையோ!"

"ஸ்வாமி! எனக்கு அந்தச் சுகம் வேண்டவே வேண்டாம். அதைவிட இந்தக் கவலையும் கஷ்டமும் எவ்வளவோ மேல். இந்தக் கஷ்டத்திலிருக்கும் ஆனந்தமும் சுகமும் வேறு எதிலும் இல்லை" என்று சொல்லிவிட்டு மூர்த்தி அவ்விடத்தை விட்டு நகர்ந்தான்.

இன்ஸ்பெக்டர் மேல் பற்களால் அடி உதட்டைக் கடித்துக்கொண்டு அவனையே பார்த்தவாறு நின்றார். —ஆதாரம்: ஹிந்திக் கதை.

மரியாதை!



"அடாடா! திவான்பகதூரா? நிற்கிறீர்களே, உட்காருங்கள்!"

இலங்கை இந்தியக் கலாசார உறவு

ரஜனி

கொழும்பு, ஆகஸ்டுமீ 3உ.

இலங்கைக்கும் இந்தியாவுக்கு மிடையில் தொன்று தொட்டு இருந்துவரும் நட்பையும் நல்லுறவையும் புனருத்தாரணம் செய்யும் ஒரே இலட்சியத்தோடு இங்கு ஒரு புதிய ஸ்தாபனம் இவ்வாரம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. ராஜீய வாதிகளினாலும் ராஜாங்கத் தலைவர்களினாலும் சாதிக்க முடியாத காரியத்தைக் கலைஞர்களினால் சாதித்துவிட முடியுமென்ற நம்பிக்கையுடன் இலங்கைக் கலைஞர்கள் பலர் ஒன்றுகூடி 'லங்கா நாடகக் கழகம்' என்ற பெயருடன் ஒரு கலாசார ஸ்தாபனத்தைக் கொழும்பில் நிறுவியிருக்கிறார்கள். இதற்கு ஸ்ரீ எஸ். எம். நாயகம் தலைவராகவும் ஸ்ரீ எஸ். வேதாசுந்தரம் ஸ்ரீ எம். தியாகராஜா ஆகியவர்கள் காரியதரிசிகளாகவும் செல்வாக்குள்ள மற்றும் 11 கமிட்டி அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர். இந்தியாவிலிருந்து பல பிரபல நடிகர் நடிகைகளைத் தருவித்து அடுத்த மாதம் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நாடகத் திருவிழாக்களை நடத்த இவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள். சங்கீதம், நாடகம், நடனம் முதலான அருங்கலைகளுக்கு இலங்கையில் பிரமாதமான மதிப்பிருக்கின்றது. இதைச் சூறையாட இந்தியாவிலிருந்து கலைஞர்களைத் தருவிக்கும் தரகர்கள் சிலர் ஏற்பட்டிருக்கிறார்கள். இதனால் கலையும் இந்தியக் கலைஞர்களும் பிளாக் மார்க்கெட் பொருள்களைப் போன்ற கேவல நிலைமைக்கு உட்படுத்தப்பட்டு விடுகின்றனர். இந்த நிலைமையிலிருந்து கலைஞர்களை விடுவிக்கவும் இரு நாடுகளுக்கு மிடையில் கலைஞர்களைப் பரிமாறிக்கொண்டு கலை வளர்ச்சிக்கும் இந்தியா—இலங்கை நல்லுறவுக்கு உதவிபுரியவும் லங்கா நாடகக் கழகம் அருமையாகச் சேவை புரியக் கூடுமென்று இந்தியாவிலிருந்து சென்ற வாரம் இங்கு வந்திருந்த டைரக்டர் கே. சுப்ரமண்யம் மேற்படி கழகத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சொன்னார். தமிழ் நாட்டிலிருந்து பிரபல நாடகக் கலைஞர்களை அழைத்துவந்து கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நாடகக் கலைவிழா நடத்துவதற்கு 'லங்கா நாடகக் கழகம்' திட்டமிட்டிருக்கிறது.

இலங்கை இந்திய கலாசார உறவைப் பலப்படுத்தக்கூடிய இன்னொரு முக்கியமான ஸ்தாபனமும் பாரதி ஜயந்தி விழாவன்று இங்கு தோற்றுவிக்கப்படும் என்று தெரிகிறது. சென்னையில் பத்திரிகைக்காரர்கள் சங்கம், எழுத்தாளர்கள் சங்கம் என்று எழுத்தாளர்கள் ஒன்றுகூடிப் பேசப் பல ஸ்தாபனங்களிருப்பது போல் இலங்கை எழுத்தாளர்களுக்கிடையில் பொது ஸ்தாபனம் ஒன்றுமில்லை. இந்நாட்டிலுள்ள நூற்றுக் கணக்கான எழுத்தாளர்கள் ஒருவரை ஒருவருக்குத் தெரியாமலும் ஒருவரோடு ஒருவர் நெருங்கிப் பழகாமலும் இருந்து வருகிறார்கள். இந்தக் குறையை நிவர்த்தி செய்து அடுத்து வரும் பாரதி தினத்தன்று இலங்கை எழுத்தாளர்கள் சங்கத்தை நிறுவவும் இந்திய எழுத்தாளர்கள் சங்கத்துடன் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு வேலை செய்யவும் நண்பர் ஸ்ரீ கே. கணேஷ் பெரு முயற்சி செய்து வருகிறார்.

ஸ்ரீ மேனன் யோசனை

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நல்லுறவை வளர்க்கக் கலாசார மார்க்கங்களே சிறந்த மார்க்கங்களென்று உறுதியாக நம்புகின்றவர்களில் இந்திய ஹைகமிஷனர் ஸ்ரீ கே. பி. கேசவமேனனும் ஒருவர். இந்தியர்களும் இலங்கையர்களும் கலாசார அடிப்படையில் சரளமாகப் பழகும் ஒரு பொது ஸ்தாபனத்தை நிறுவி அதன் மூலம் இரு நாடுகளுக்கு மிடையில் நல்லுறவைப் புனருத்தாரணம் செய்ய முயற்சித்தால் நல்ல பலன் கிடைக்குமென்று ஸ்ரீ மேனன் ஒரு பேட்டியில் சொல்லியிருக்கிறார். இந்த வகையில் முயற்சிகள் எடுக்க ஸ்ரீ நடேசன், ஸ்ரீ வெங்கடசுப்ரமண்யம், ஸ்ரீ சோமசுந்தரம் முதலான சில முக்கியஸ்தர்கள் முனைந்திருப்பதாயும் தெரிய வருகின்றது. இரு தேசக் கலாசார உறவையும் பலப்படுத்த வேண்டுமென்ற ஆர்வம் இரு நாடுகளிலும் சமீப காலத்திற்கிடையே பெருகி யிருப்பதற்குப் பல சான்றுகள் இவ்வாரம் கிடைத்திருக்கின்றன.


அடிகளின் ஆண்டுவிழா

சென்ற சனிக்கிழமை உயர் திரு விபுலானந்த அடிகளின் ஆண்டு விழா மட்டக் களப்பு சிவானந்த வித்தியாலயத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. விபுலானந்த அடிகளின் திருவுருவப் படத்தை ஊர்வலமாகக் கொண்டு வந்து ஊர்வலம் விவேகானந்த வித்தியாலயத்தை யடைந்ததும் அங்கு பலர் திரளாகக் கூடியிருந்து பொதுக் கூட்டம் நடத்தினர். அமரத்துவம் பெற்றுவிட்ட அடிகளாரின் தமிழ்ப் பற்றையும் சேவைகளையும் பாராட்டி டாக்டர் சின்னத்தம்பி, கொழும்பு ஸாஹிராக் கல்லூரி அதிபர் ஜனாப் ஏ. எம். ஏ. அஸீஸ், ஸ்ரீ ஓ. வி. விஜயமுனி முதலான பல அறிஞர்கள் நீண்ட சொற்பொழிவு ஆற்றினார்கள்.

குறிப்பு

''அவன் தெய்வம்'' என்னும் தலைப்பில் 29-7-51 'கல்கி' இதழில் வெளியான கதை வங்காளிக் கதை ஒன்றை ஆதாரமாகக் கொண்டு ''அக்ஷயம்'' அவர்களால் எழுதப்பட்டது.

சுவாமி, ஆண்டவனே!



"நான் எது சொன்னாலும் அதற்கு நேர் எதிரிடையாகத்தான் நீங்கள் சொல்வீர்கள். 'ஊர்வசியின் சாப'த்துக்கு என்னவாம்? எல்லாம் அந்தச் சினிமாவுக்கே போகலாம்" என்றாள் விசாலம்.

"நீ மட்டும் என்ன? நான் எது சொல்கிறேனோ, அதற்கு நேர் எதிரிடையாகத் தானே நீயும் சொல்கிறாய்! 'மாங்தோப்பு மோகினி'க்கு என்ன? அதற்கே போகலாம்" என்றான் ரகுநாதன்.

"அதென்னமோ, எனக்குத் தெரியாது! நான் மாங்தோப்பு மோகினிக்கும் வரவில்லை. புளியந்தோப்பு மோகினிக்கும் வரவில்லை. ஊர்வசியின் சாபத்துக்குத் தான் போக வேண்டும்" என்றாள் விசாலம்.

"அதென்னமோ, எனக்குத் தெரியாது! நான் ஊர்வசியின் சாபத்துக்கும் வரவில்லை. திலோத்தமையின் சாபத்துக்கும் வரவில்லை. 'மாங்தோப்பு மோகினி'க்குத் தான் போகவேண்டும்" என்றான் ரகுநாதன்.

"ஆமாம். இதென்ன! நான் சொல்கிறதையே திருப்பிச் சொல்கிறீர்கள். ஒரு நாளைக்கு நான் சொல்கிறதைத்தான் கேளுங்களேன். இன்றைக்கு ஊர்வசியின் சாபத்துக்கே போவோம், வாருங்கள்" என்றாள் விசாலம்.

"நீதான் நான் சொல்கிறபடி ஒரு நாளைக்குக் கேளேன். எனக்காக 'மாங்தோப்பு மோகினி'க்கு வாயேன்" என்றான் ரகுநாதன்.

"இந்த வீட்டிலே எனக்குத் துளிக்கூட சுதந்திரம் கிடையாது. சின்னக் காரியமானாலும், பெரிய காரியமானாலும் நான் நினைத்தபடி முடிகிறதில்லை. எல்லாம் தெரிந்துதான் இருக்கிறது. இருந்தும் இந்தப் பாழும் மனசு கேட்கவில்லை" என்றாள் விசாலம்.

"எனக்கு மட்டும் என்ன, இந்த வீட்டில் சுதந்திரம் இருக்கிறதா?"

"அப்படியானால் முடிவாக என்ன சொல்லுகிறீர்கள்?"

"நீ என்ன சொல்கிறாய்?"

"நான் ஊர்வசியின் சாபத்துக்குத்தான் போக வேண்டும் என்கிறேன்."

"நான் மாங்தோப்பு மோகினிக்குத் தான் போக வேண்டும் என்கிறேன்."

"இப்படியே இரண்டு பேரும் சொல்லிக் கொண்டிருந்தால் போகிறவழிதான் என்ன? சரி, ஒன்று செய்யலாம். சாயங்காலம் நீங்கள் வந்ததும் ஸ்வாமிபடத்துக்கு முன் ஊர்வசியின் சாபமா அல்லது மாங்தோப்பு மோகினியா என்று சீட்டுப் போட்டுப் பார்ப்போம்" என்றாள் விசாலம்.

"ரொம்பவும் நல்ல ஏற்பாடு: நான் நாலு மணிக்கே வந்துவிடுகிறேன். சீட்டுப் போட்டு எடுப்போம். எது வருகிறதோ, அதற்குப் போகலாம்" என்று சம்மதத்தைத் தெரிவித்துவிட்டு ரகுநாதன் கடைத் தெரு வழியாக ஆபீசுக்குப் போனான். அங்கே பக்கத்து வீட்டு அம்பியைப் பார்த்தான். அவனைப் பார்த்ததும் ரகுநாதனுக்கு ஒரு யோசனை பளிச்சிட்டது.

"அம்பி, இங்கே வா! ஒரு முக்கியமான சமாசாரம். நீ எனக்கு ஒரு ஒத்தாசை செய்ய வேண்டும்" என்று காதோடு ஏதோ சொல்லி அவன் கையில் நாலணாவைக் கொடுத்தான் ரகுநாதன்.

அம்பி வருகிறானா என்று விசாலம் வாசலிலேயே நின்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் தலையைக் கண்டதும், "ஏண்டா அம்பி, உன்னை எங்கே யெல்லாம் தேடுகிறதடா! சமயத்துக்கு எங்கே யாவது போய்விடுகிறாயே? இன்றைக்குச் சாயங்காலம் நானும் மாமாவும் சினிமாவுக்குப் போகிறோம். அதற்காக எனக்கு நீ ஒரு ஒத்தாசை செய்ய வேண்டும். அதற்காக இந்த நாலணாவை வைத்துக் கொள். இந்தா, இன்று மாமாவுக்காகப் பூரி டிபன் பண்ணினேன். நீயும் இரண்டு எடுத்துக் கொள்" என்று சொல்லி அம்பியிடம் தன்னுடைய யோசனையைச் சொன்னாள்.

சாயங்காலம் நாலரை மணிக்கு "சரி, சீட்டுப் போட்டு பார்க்கலாமா?" என்று கேட்டுக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தான் ரகுநாதன்.

"சரி" என்றாள் விசாலம்.

சீட்டை எடுத்து எழுதப் போனான் ரகுநாதன்.

"நீங்களா எழுதப் போகிறீர்கள்?" என்று கேட்டாள் விசாலம்.

"ஏன், என்பேரில் அவநம்பிக்கையா? நான் எழுதினால் என்ன?"

"நான்தான் எழுதுகிறேனே! இங்கே கொடுங்கள், சீட்டை!" என்றாள் விசாலம்.

"நான்தான் எழுதுவேன்" என்றான் ரகுநாதன்.

"முடியாது. நான்தான் எழுதுவேன்" என்றாள் விசாலம்.

"இதில் கூட தகராறு? யார் எழுதுவது என்பதற்கே சீட்டுப் போட்டுப் பார்க்க வேண்டும் போலிருக்கிறதே!" என்றான் ரகுநாதன்.

"சரி, நீங்களும் வேண்டாம்; நானும் வேண்டாம். அடுத்த வீட்டு அம்பியைக் கூப்பிடுங்கள். அவனை எழுதச் சொல்வோம்" என்றாள் விசாலம்.

"ரொம்ப சரி" என்றான் ரகுநாதன்.

"அம்பி, இங்கே வாடா, மாமாவும் நானும் சினிமாவுக்குப் போகப் போகிறோம், எந்தச் சினிமாவுக்கு என்று சீட்டுப் போட்டுப் பார்க்க வேண்டும். ஒரு சீட்டில் 'ஊர்வசியின் சாபம்' என்றும் இன்னொன்றில் 'மாந்தோப்பு மோகினி' என்றும் எழுதிக்கொண்டு வா. குலுக்கிப் போட்டு எடுத்துப் பார்ப்போம். எது வருகிறதோ, அதற்குப் போகிறோம்" என்றாள் விசாலம்.

பிறகு ரகுநாதனிடம், "சரி, அவனிடம் சீட்டும் பென்சிலும் கொடுங்கள்" என்றாள்.

"அடடே, பென்சிலில் கூர் உடைந்து விட்டதே!"

"பேனாவைக் கொடுங்களேன்."

"பேனாவில் மசியில்லை."

"சரி இந்தக் கஷ்டம் எதற்கு? நான் எங்கள் வீட்டுக்குப் போய் எழுதிக் கொண்டு வந்துவிடுகிறேன்" என்று அம்பி வீட்டுக்கு ஓடினான். கண்மூடிக் கண் திறக்கும் நேரத்துக்குள் இரண்டு சீட்டுக்களை எடுத்துக் கொண்டு ஓடியும் வந்தான்.



"அப்பப்பா, வரவர உன் விஷமம் என்னால் தாங்கவே முடியவில்லை!"
"டாக்டரிடம் வேண்டுமானால் உடம்பைக் காட்டிப் பாரேனம்மா!"

"ஸ்வாமி, ஆண்டவனே! ஊர்வசியின் சாபம்!" என்றாள் விசாலம்.

ஸ்வாமி, ஆண்டவனே! மாந்தோப்பு மோகினி!" என்றான் ரகுநாதன்.

"சரி, குலுக்கிப் போடட்டுமா?"

அம்பி குலுக்கிப் போட்டு ஒரு சீட்டை எடுத்தான்.

"என்னிடம் கொடுடா, அம்பி! அவளிடம் கொடுக்காதே!"

"என்னிடம் கொடுத்தால் என்ன? அதில் இருப்பதுதானே இருக்கும்! மாமியிடம் கொடுக்காதேடா, அம்பி!"

"சரி, யாரிடம் கொடுக்க வேண்டும் என்பதற்கு வேறு சீட்டுப் போட்டுப் பார்க்க வேண்டும் போலிருக்கிறதே! யார் பார்த்தால் என்ன? இரண்டுபேருமேதான் பிரித்துப் பாருங்களேன்" என்று சொல்லிவிட்டு அம்பி அவ்விடத்தை விட்டு நகர்ந்தான்.

சீட்டைப் பிரித்து இரண்டுபேரும் சேர்ந்தே பார்த்தார்கள்.

"அன்புள்ள மாமா—மாமிக்கு,

நீங்கள் இருவரும் ஏன்தான் இப்படி விழுந்து விழுந்து பறக்கிறீர்களோ, தெரியவில்லை! ஊர்வசியின் சாபமும் மாந்தோப்பு மோகினியும் நேற்றுடன் முடிந்து இன்று முதல் அந்தக் கொட்டகைகளில் ஒன்றில் ஹிந்திப் படமும், இன்னொன்றில் ஆங்கிலப் படமும் ஆரம்பம். இதைக்கூடத் தெரிந்து கொள்ளாமல் இருவரும் சினிமாவுக்குப் புறப்பட்டு விட்டீர்கள்.

'லீவு நாளாயிற்றே! சினிமா பார்க்கக் காசு இல்லையே!' என்று சங்கடப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு அதிர்ஷ்ட வசமாக உங்கள் இரண்டு பேருடைய தயவாலும் எட்டணா கிடைத்தது. நீங்கள் இரண்டு பேரும் சொன்ன யோசனைப் படியேதான் இன்னொரு சீட்டும் எழுதியிருக்கிறேன்.

இப்படிக்கு,
அம்பி"

கீழே கிடந்த இன்னொரு சீட்டையும் அவர்கள் பிரித்துப் படித்துப் பார்த்தார்கள். அதிலும் தேவாக்கியங்கள்தான் எழுதியிருந்தது.

கணவன் முகத்தில் அசடு வழிகிறதா என்று கடைக் கண்ணால் பார்த்தாள் விசாலம்.

மனைவி முகத்தில் அசடு வழிகிறதா என்று ஓரக் கண்ணால் பார்த்தான் ரகுநாதன்.

கணவன்—மனைவி இருவர் முகத்திலும் அசடு வழிவதைத் தன் வீட்டு ஜன்னல் வழியாகப் பார்த்தான் அம்பி.

ARMSTRONG
THE BETTER BICYCLE

ஆம்ஸ்டிராங்
சிறந்த ஸைகிள்



சிறந்த ஸைகிளாகிய ஆம்ஸ்டிராங் ஒன்று உங்களிடம் இருந்தால் போதும்; வேலை நிமித்தமாகவோ வேடிக்கையாகவோ எவ்வித தொந்தரவும் இன்றி நீங்கள் ராஜபாட்டை போல சவாரி செய்யலாம்.

ஒரு ஆம்ஸ்டிராங் வாங்குங்கள். ஸைகிள் தொழிலில் பிரசித்திபெற்ற தயாரிப்பாளர்களின் சிறந்த தயாரிப்பு உங்களுக்குச் சொந்தமா யிருக்கிறது என்கிற பெருமை உங்களுக்கு விரைவில் ஏற்படும். அதன் பெயரே குறிப்பிடுவதுபோல வலிவாகவும், இந்தியாவின் கரடுமுரடான ரஸ்தாக்களில் நீடித்து நின்று வருஷக்கணக்கில் நம்பிக்கை அளிக்கத் தக்கவாறு உழைப்பதாகவும் அது விளங்குகிறது. ஆம்ஸ்டிராங் — மிகவும் பிரபலமான ஸைகிள் — ரஸ்தாவில் அதை நம்புங்கள். அதற்கு கொடுக்கும் விலை அதற்குத் தகும்.


ARMSTRONG
ARMSTRONG CYCLES Ltd
BIRMINGHAM

வினியோகஸ்தர்கள்

ராயல் ஸைகிள் அண்டு மோட்டார் கம்பெனி

13/14, பிராட்வே, தபால் பெட்டி நெ. 219, சென்னை-1

தி பயனீர் ஸைகிள் ஹவுஸ்,
மேலக் கோபுர வீதி, மதுரை.



மலேரியா அவனை

பாழ்படுத்திவிட்டது

'பாலுட்ரின்' இருக்கையில்

எனக்கு மலேரியாவைப்

பற்றிய பயமில்லை



நாள் கணக்கில் ஜுரமடித்துக்கொண்டிருந்தால் எத்தனை கஷ்டமாயிருக்கும்! பாவம் அவன் சக்தி முழுவதும் இழந்து வாழ்க்கையிலேயே பற்றுதல் அற்றுப்போய் விட்டான் என்றால் அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அவன் அதற்கு என்ன செய்கிறான் என்பதுதான் ஆச்சரியமாயிருக்கிறது. தினம் ஒரு மாத்திரைவீதம் 3 அல்லது 4 நாட்களுக்கு அவன் 'பாலுட்ரின்' சாப்பிட்டால் சுலபமாகக் குணமடையலாமே! மேலும் 'பாலுட்ரின்' மலேரியாவைத் தடுக்கிறது. நான் ஒரு 'பாலுட்ரின்' மாத்திரையை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சாப்பாட்டுக்குப் பிறகு தவறாமல் உட்கொள்வதால் எனக்கு மலேரியாவைப்பற்றிய பயமில்லை.

ICI

பாலுட்ரின்*

ட்ரேட் மார்க்

மலேரியாவுக்கு ஓர் அற்புதமான மருந்து

இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட்

IX-P 140 TM



உலகெங்கும், வெற்றிபெற்ற மனிதர்கள்

ஜில்லெட்

உபயோகிக்கிறார்கள்...



ஒரு தனவந்தர்கூட, தினமும் ப்ளு ஜில்லெட் பிளேடை உபயோகிக்கும் சாதாரண மனிதனைவிட ஆனந்தமான க்ஷவரத்தை அனுபவிக்க முடியாது. மிகவும் கூராக தீட்டப்பட்ட இதன் விளிம்புகள் வழவழுப்பானவை. சுகபோக க்ஷவரத்தை உங்களுக்கு அளிக்கிறது. மின்சாரத்தால் பதப் படுத்தப்பட்டதும், பிரத்தியேகமாக வனைக்கப்பட்டதுமான இந்த எஃகு பிளேடுகளால் அதிக தடவைகள் க்ஷவரம் செய்து கொள்ளலாம். விலை மிகவும் சரசமாயிருப்பதால், ஒவ்வொரு மனிதனும் உலகில் மிகவும் நாகரீகமான மனிதர்களின் விரும்பத்தக்க கூட்டத்தில் சேரலாம்.

ப்ளு ஜில்லெட் பிளேடுகள்

5 பிளேடுகளுக்கு 14 அணா



கோபு: டேய் கிட்டு! மானேஜர் என்னத்திற்கடா கோபித்துக்கொண்டார்?

கிட்டு: நான் கொடுத்த 'ஸ்டேட்மெண்ட்'டிலே தப்பிருந்ததடா, அதற்குத்தான், என்னைத் தூங்குமூஞ்சி என்றுகூட சொன்னார். தூக்கம் என்னையறியாமலேயே வந்துவிடுகிறது. என்ன செய்கிறது என்றுதான் தெரியவில்லை.

கோபு: அட அப்பாவி! இதுவா பிரமாதம். நீதான் பார்த்துக்கொண்டு வருகிறாயே. சரியாக மூன்று மணிக்கு நான் 'டீ' சாப்பிடுவது வழக்கமாச்சே. அதுதான் என் சோம்பலைப்போக்கி, சுறுசுறுப்புடன் வேலை செய்ய உதவுகிறது. நீயும்தான் நாளையிலிருந்து 'டீ' சாப்பிட்டுப்பாரு. எல்லாம் சரியாகிவிடும்.

'டீ' என்றால் என்ன? அதுதான் சிக்கனமானதும், களைப்படைந்த உடம்புக்கு ஊக்கத்தையும், தளர்ந்த மனதிற்கு உற்சாகத்தையும் மீட்டுக் கொடுக்க ஒப்பற்றதும், சுலபமாக தயாரிக்கக்கூடியதும், எங்கும் கிடைப்பதுமான தேசியபானம். ஒரு கோப்பை 'டீ' சாப்பிட்டுப்பாருங்கள் அப்பொழுதே அதன் குணவிசேஷங்களை உணர்வீர்கள்.

'சென்ட்ரல் டீ போர்டா'ரால் வெளியிடப்பட்டது

CTB 40

அதன் "சலசலப்பு"
புத்துணர்வளிக்கும்
அதன் மிருதுவான வேலை

உட்புற சுத்தம்

அளிக்கும்



புத்துணர்ச்சி தரும் ஒரு ஜொலிக்கும் பானம் — உட்புற சுத்தத்தை நிச்சயிக்கும் திறமை மிகுந்த மலமிளக்கி — இவ்விரு குணங்களும் ஒன்று சேர்ந்த ஆண்ட்ரூஸ், உங்கள் தினசரி வாழ்க்கையை சுவாரஸ்யமாக்கி, தேகாரோக்யத்தையும் விருத்தி செய்கிறது

இவ்விணையற்ற மலமிளக்கி, வாயை சுத்திகரித்து, வயிற்றைப் பண்படுத்தி, குடலை வலுப்படுத்தி, சுலபமாக மலமகன்று, பூரண உட்புற சுத்தம் கிடைக்கச்செய்யும்.

ஒரு டீஸ்பூன் அளவு ஆண்ட்ரூஸை ஒரு டம்ளர் ஜலத்துடன் பருக வேண்டியதுதான் எந்த நேரத்திலும் புத்துணர்வளிக்கும் "சலசலப்பு" சப்தமுள்ள பானமாக விளங்கும்.



RJ 190/505

ANDREWS LIVER SALT

ஆண்ட்ரூஸ் லிவர் ஸால்ட்

மிகச் சிறந்த மலமிளக்கி

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

REGD. No. M. 4392

"லக்ஸ் டாய்லட் சோப்

என் சருமத்திற்கு மிகவும் ஏற்றது"

என்று கூறுகிறார்!

தவமணிதேவி



இனிய மணத்துடன் கூடிய
இந்த வெண்மையானதும்
சுத்தமானதுமான சோப்
உங்கள் சருமத்தை
வசீகரமாகச்செய்யும்!

சினிமா நடசத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 292-X30 TM